இ243

உ

சிவமயம்.

ழனி முத்தமிழ்ச் சக்கரவர்த்தியாகிய

## மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள்

இயற்றிய

# குமரன் அந்தாதி.

(மூலமும் உரையும்.)



உரையாசிரியர்:

புலவர், சு. பெரியசாமி பண்டாரம் அவர்கள்.

வெளியிடுபவர்:

பழனி, அடிவாரம்

பரம்பரை வீர சைவ மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ பாலையசுவாமி அவர்கள்

பழனி

ஸ்ரீ ராதாகிருஷ்ண விலாஸ் பிரஸில் அச்சிடப்பெற்றது.

1954.

(பதிப்பு உரிமையுடையது.)

உ

சிவமயம்.

பழனி முத்தமிழ்ச் சக்கரவர்த்தியாகிய

## மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள்

இயற்றிய

# குமரன் அந்தாதி.

(மூலமும் உரையும்.)



உரையாசிரியர்:

**புலவர், சு. பெரியசாமி பண்டாரம் அவர்கள்.**

வெளியிடுபவர்:

பழனி, அடிவாரம்

பரம்பரை வீர சைவ மடாலயம்

**ஸ்ரீலஸ்ரீ பாலையசுவாமி அவர்கள்**

பழனி

ஸ்ரீ ராதாகிருஷ்ண விலாஸ் பிரஸில் அச்சிடப்பெற்றது.

1954.

(பதிப்பு உரிமையுடையது.)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

உ சிவமயம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 19 | தாழ் | தாள் |
| நூல் 2 | 23 | உருப்பு | உறுப்பு |
| 3 | 6 | கவரு | கவரும் |
| 4 | 5 | நொருங்கி | நொறுங்கி |
| 5 | 6 | சரனே | சரணே |
| 9 | 29 | பொற்று | போற்று |
| 12 | 9 | நந்தின | நத்தின |
| 12 | 15 | வாழ்க | வாழ |
| 13 | 9 | வனந்தரசே | வனத்தரசே |
| 13 | 27 | துலவ | துளங் |
| 16 | 2 | பொலும் | போலும் |
| 18 | 22 | செஞ்சக | நெஞ்சக |
| 22 | 19 | வீரகள் | வீர்கள் |
| 22 | 29 | தேய்வமே | தெய்வமே |
| 22 | 33 | கனகசுபை | கனகச்சபை |
| 26 | 11 | பனே | பணே |
| 28 | 9 | சம்மந்த | சம்பந்த |
| 29 | 2 | யெனினும் | மெனினும் |
| 29 | 25 | கிராதகர் | கிராதர் |
| 31 | 21 | மது | பது |
| 32 | 19 | குறித்பு | குறிப்பு |
| 34 | 18 | தொசிந்திட | ஒசிந்திட |
| 34 | 34 | என்றூர் | என்றூற் |
| 35 | 26 | புறந் | புரந் |
| 35 | 27 | தொய் | தோய் |
| 36 | 19 | அனங்கள் | அனங்கன் |
| 36 | 35 | முன்னொரு | முன்னொரு |
| 37 | 10 | பூவையற்பாற் | பூவையர்பாற் |
| 38 | 34 | பொருதிப் | பொருது |
| 39 | 2 | திருவடிகளே | திருமலையை |
| 40 | 18 | கலர் | மலர் |
| 42 | 7 | அவ்வுவாயமுடைய | அவ்வுபாயமுடைய |
| 42 | 17 | ய்யினெ | யயினெ |
| 42 | 20 | யழனி | பழனி |
| 43 | 23 | முனி | முகி |
| 46 | 10 | பகைவர்ளி | பகைவர்களி |
| 47 | 4 | சரமின் | சரசமின் |
| 49 | 34 | நொருங்கி | நொறுங்கி |
| 50 | 31 | கிரவஞ்ச | கிரவுஞ்ச |
| 51 | 2 | குறுநாதன் | குருநாதன் |

உ

சிவமயம்.

# முகவுரை.

பொன்னாட்டாராலும் நன்னூலுடனப் போற்றும் தென்னாடாம் நம் தண்டமிழ் நாட்டில் இறை, உயிர், உலகம் எனு முப்பொருளின் இயல்பறிந்தும், மறைமுதலாம் பன்னூலுள்ளும் காணப்படும் பல் வேறு சமயப் பாகுபாடுகளின் திறனறிந்தும், பரமன் திருவருளைப் பல்லாற்றானும் பருகித் திளைத்தும் வரும் பெரியார் பலர் வாழ்ந்திருந் தனர். அப்பெரியார்களுள் கலியுக வரதனாங் கந்தப்பெருமான் ஆன்ம கோடிகளுக்கனுக்கிரகிக்கும் அரும்பதிகளாம் ஆறுபடை வீடுகளுள் மூன்றாவதான கருவாதனை நீக்கும் திருவாவினன்குடியாம் பழனியம் பதியில் இற்றைக்குச் சுமார் 120 வருஷங்களுக்கு முன் பெருந் தவஞ் செய்த அருந்தவக் குடியில் அவதரித்த ''மாம்பழக் கவிச்சிங்க நாவலர்'' என்னும் புலவர் பெருமகனார் வாழ்ந்திருந்தனர். அவர் தம் சிறு வயதில் நோய் காரணமாகப் புறக்கண்களையிழந்தனரேனும், அருள் வள்ளலாம் ஆண்டவனருளால் அகக்கண் திறக்கப்பெற்று அன்று முதலாக அருள் நூல் பலவும் ஐயந்திரிபறக் கற்று, அருட் பாடல்களியற்றும் திறத்தில் மிகச் சிறந்திருந்தனர். அக்காலத்தி லிருந்த பெரும் புலவர்களாலும், ராமனாதபுரம் சேதுபதி முதலிய அரும் பெரும் ஜமீன்தார்களாலும் நன்கு மதிக்கப்பெற்றுச் சிறந்த கவியரசரெனச் சீர்வரிசைகள் பெற்று வாழ்ந்திருந்தனர். அக்காலத் தில் அவர் பழனிக் குமரன்மீது பாடிய பிரபந்தங்கள் பல. அவை கள் இக்காலத்துப் புலவர் பெரு மக்களாலும் மிக அரிதாகப் போற் றும் தகுதியுடையனவாக அமைந்துள்ளன. அப்பிரபந்தங்களுள் **''குமரனந்தாதி''** என்ற ஒன்று நூறு பாடலுடைய திரிபந்தாதியாக அமைந்துள்ளது. அந்நூல் அருட்செறிவு, பொருட்செறிவு, சொற் செறிவு முதலியவை நன்கு அமையப்பெற்று விளங்குவது. புலவர்க் கமுதெனப் பொருணயம் கொடுப்பது; இன்னும் கூறப் புகின், அந் நூலின் சிறப்பு அளவிடற்கரியது.

இத்தகைய ஒரு பெரும் நூலுக்கு கற்றாரு மற்றாரும் பொரு ளுணர்ந்து படிக்கத்தக்க ஒரு உரை இயற்றவேண்டுமென எண்ணி நம் மடத்தின் உறவினரும், முதுபெரும் புலவரும் தன் நுண்மாணுழை புலவலியால் நாவலர் பிரபந்தங்கள் போன்ற பன்னூல்களைத் துருவி ஆராய்ந்து அதற்குச் சிறந்த உரைசொலுந் தகுதியுடையவரும் ஆன திருவாளர் **''பெரியசாமி பண்டாரத்தையா''** அவர்கள் மிக அரிய பெரிய முயற்சியால் ஒரு பொழிப்புரை இயற்றி அவ்வுரையை எல்லோ ரும் படித்துணர அச்சியற்றி வெளியிடவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் செய்த வுரையும் நாவலர் பிரபந்தம் போல எல்லா வகையாலும் சிறந்திருந்தமை நோக்கி அவ்வுரையை யும் மூல பாடமாம்பிரபந்தத்தையும் இணைத்து அச்சியற்றித் தனிப் புத்தகமாக வெளியிடவேண்டுமென்று திருவருள் தூண்ட அதினிமித் தமாக இவ்வெளியீட்டுக்கான வேலையில் ஈடுபட்டோம். அறுமுகவன டிக்கமலங்களில் அன்புடைய அடியவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இக்குமரனந்தாதி யுரைப் புத்தகம் திகழ்வது அவசியமாகும்.

எல்லாம்வல்ல கந்தப்பெருமானின் அருட்டிருவிளையாடலை யுணர்வதற்குக் கருவியான இக்குமரனந்தாதி யுரைப் புத்தகத்தை வெளியிடுவதற்கு உள் நின்றாக்கிய திருவருளுக்கும் இப்புத்தகத்திற்குச் சாற்றுக் கவிகள், நன்றியுரை, அணிந்துரை முதலியன கொடுத்துதவிய புலவர்கட்கும் இதனை அச்சியற்றி வெளியிட்ட "ஸ்ரீ ராதாகிருஷ்ண விலாஸ் பிரஸ்" நண்பர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்ஙனம்,

**தவத்திரு. ஸ்ரீ பாலைய சுவாமிகள்,**
**பரம்பரை வீர சைவ மடாலயம்.**
**அடிவாரம், பழனி**

சிவமயம்.

## நன்றியுரை.

உலகிற் கணியெனக் கவிமழை பொழிந்த பழனியம்பதி ஸ்ரீமான் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் பழனியாண்டவர் பேரிற் பாடிய "குமரனந்தாதி" சொன்னயம், பொருணயம் பொதிந்ததொரு பிரபந்தமாகும்.

பழனியம்பதி, அடிவாரம் உயர்திருவாளர் சு. பெரியசாமி பண்டாரத்தையா அவர்கள் அக்குமரனந்தாதிக்கு யாவரும் எளிதிற் பொருளுணருமாறு உரை வரைந்துள்ளார்கள். அவர்கள் 'புலவர்' எனப் பலராலும் பாராட்டப்பெற்றவர்கள். நூல் பல நுண்ணிதின் உணர்ந்தவர்கள். ஸ்ரீ கம்பராமாயணம், கந்தப் புராணம் முதலிய நூல்கட்கு உரை சொல்வதில் ஒப்பற்றவர்கள். எனது ஆருயிர் நண்பர். இக்குமரனந்தாதிக்கு உரை வரைந்துதவிய நன்றியை அறிஞர்கள் என்றும் மறக்கற்பாலதன்று. இவ்வந்தாதி யுரையினை பேரருள் கொண்டு உதவியவர்கள் எங்கள் அருட்டிரு பாலைய சுவாமிகள் அவர்கள் பாவலர் நாவலர் பலரும் போற்றும் பண்புடையவர்கள். அறிவெனும் திருவினையனைவரும் பெற்றுய்ய நூல் நிலையம் ஒன்று மடத்தின்கண் நிறுவியுள்ளார்கள். சொன்மழை பொழியும் தூய நாவலர்க்குப் பொன்மழை பொழியும் புண்ணிய சீலர். நமது சுவாமிகள் இந்நூல் உரையினை வெளியிட்டருளிய பேரருளுக்கு எனது நன்றி என்று முரித்தாகுக. சித்த பாலைய தேசிகர் திருமரபு எழிலுடன் செழித்தோங்குக. இங்ஙனம்,

**ஐயாறடிகள்,**
**சித்த பாலைய சுவாமிகள் ஆதீனப் புலவர்,**
**அடிவாரம், பழனி.**



# Srila Sree Balaya Swamigal,

MADATHIPATHI, ADIVARAM, PALNI.

உ

ஸ்ரீ முருகன் துணை.

# சாற்றுக்கவி.

## ஆசிரிய விருத்தம்.

காட்சிநிறை பழநித்தலம்பெற்ற புண்ணியம்
கைகூடி வந்ததென்னக்
காவலன் சேதுபதி சீர்வரிசைபெற்றே
கவிச்சிங்க வாகைசூடி
மீட்சிபெறு மாம்பழக் கவிராயருள்ளுருகி
விரிதிரிபினி யலமைந்த
வேற்குமர னந்தாதி மேற்பிரியமுண்டாகி
வியனுரை நிகழ்த்தினாரால்
நீட்சிபெறு தமிழிலக்கிய விலக்கணமுறைகள்
நிமிர்பெரும் புலமையாளன்
நிறைபெரிய சாமிப்புலவ ரிதைச்சகலரும்
நினைப்பொடு படிக்கவெளிதாய்
சாட்சிநிறை தெய்வீக பாலையசுவாமிகள்
தன்மமா யச்சியற்றித்
தக்கபடி புத்தகமுடித்து வெளியிட்டனர்
தமிழ்ப்பணி சிறப்படைகவே.

ரா. முருகேச கவிராயர்,

பழனி.

உ

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை.

பழநித் தாலூக்கா பொருளூர்

பரம்பரை வித்வ தத்வ அமுதகவி கனகசபை

# வெங்கடாசலக் கவிராயவர்கள் இயற்றிய

# சாற்றுக்கவி.

★

வடகனக தடசிகர வரையதிர வுடுவுதிர
வலியுரகன் முடிநெ ளியவே
மாதிரக் கிரிகடிரி யக்கரிகள் கடகடென
வாரிவீறிட்ட லறுக
வயிரநிக ளத்தைத்த கர்த்தட்ட காசமிட
வான்முகடு படப டென்ன
வலிகொண்ட மாவயின ருகசண்ட மாருதமும்
வரைகண்டி லாதகதி யின்
மடித்தொரு நொடிப்பொழு தினிற்பல நடித்துலக
வலமான மரக தசிகா
வளதுரக னழகுதழை மழலைமிர்து மொழியெயினர்
வனிதைசுரர் கனிக னதனு
வளபுளக களபபரி மளபிரப லமிர்கமத
வயபனிரு புயசு வடிவேல்
வரதத்ய விரதநய சரதவிக சிதபதும
மலரடிமு டிக்க ணிசெயும்
திடகலைகள் பலவோர்ந்து கடலின்வடி தமிழார்ந்து
திகழ்விதிம திக்கோ ணிதியிற்
செவ்வியம தூமுதிரு சீரியமிர் துவினமிச
தீஞ்சொனு வலரே வருஞ்
செவிமடுத் திடவகத் திகில்பிடித் திகுதிடைச்
செலவுநோற் றிலமென் னவே
திறல்கொண்ட தண்டமிழ்த் தென்பான்மு னிக்கினிய
தென்பழநி யம்ப தியில்வாழ்
செயவிஸ்வ வேதகுல திலகமுத் தயமால்
திருத்தவத் தவத ரித்துச்
சேதுபதி சமுகமெச் சியமாம்ப ழக்கவிச்
சிங்கநா வலர்க வின்கொள்

திருவாய்ம லர்ந்தருள்செ யுங்குமர னந்தாதி
செறிசுதைப் பொருடி ரிதரைச்

செந்தாதி நந்தாது வந்தாயு டந்தாரு
சிந்தாய சுந்த்ரோ தயத்(து)

அடருபுற விருளினக விருள்செகுஞ் சுப்ரதீ
பப்ரபா ரத்ன மணிகள்

அணியணி நிரம்புமிவ் வந்தாதி யம்பெட்ட
கந்திறங் தேவரு முணர்வான்

அமையுமுறை யுரைசெய்து தருகெனச் சிவகிரியி
னடிவார திரும டச்சேத்

ராதீன தரவரந மச்சிவா யத்தம்பி
ரான் வேண்ட வகம கிழ்வினே

அரியவே தோடநிட தாகமா தீத்தத்
வாத்வகித சர்வ ரட்ச

ஞார்த்தமாத் தாண்டப்ர பாநேடிய மண்டலபு
யங்கசய ஞனந்த மா

ஆதனு மருமமுர கரிமருக சுரிவளைகு
வளைசலச மலிக ழனிசூழ்

அலகில்கட வுளர்பரவு பழநியம் பதிமேவீ
அன்பர்க ணறுங்கி ளையினே

படர்கடின மலதிமிர படலமற வடிமைகுடி
பாதுகார்த் தருளு மாறு

படைவீ டுடைக்குளக தண்டாயு தக்கரப்
பரமகுரு நிறுவு சைவப்

பருப்பதத் தடிவார திருமடா திபசந்த
பந்தமுந் தகவிந்தை யான்

பருவமதி யூகனதி பனுவல்செறி பாகவிதி
பகர்விதர ணீக யோகன்

பயில்வகேட் குனர்மனம் போலிங்கு யாவும்
பலிப்பவா டினத ளிர்ப்ப

பகுதியெழில் விகுதியிடை நிலைசாரி யைச்சந்தி
பாவிகா ரத்தா ரமற்

பதமிர்துத் துங்கச்ச பாலங்கிர் தத்துரை
பயின்றநன் சுப்ர மண்ய

பரமபுரு டோத்மனரு டரபெரிய சாமிபண்
டாரசுய மதிவ லோனே.

**சேற்றூர் சமஸ்தானம் மஹாவித்வான் மகா-ள ள-ஸ்ரீ**
**கணபதிக் கவிராயரவர்கள் இயற்றியது.**

கழனிக்கு மாரனந்தா திக்குவிற்கு நாணெனவே
கைக்கோ ளும்புள்
தழனிக்கு மாரனந்தா திக்குவளம் பொழிற்கும்வரி
துன்று சீர்சால்
பழனிக்கு மாரனந்தா திக்குநடு வகரவரி
பற்று சேந்த
மிழனிக்கு மாரனந்தா திக்குவைவைப் பறுமுகன்ருள்
வேண்டு வோர்க்கே.

எனப்புகலிப் பதிக்குவரு மாம்பலம்போல் பதவுரைநன்
கியற்றினுன் பல்
சனப்புகலிற் றைக்குமுறு தற்பரற்குப் பதிகமுறை
தகுந்த யாளு
கனப்புகலிப் பெருந்தகைக்கன் பன்பெரிய சாமியெனுங்
கவிஞன் தொன்னூல்
வனப்புகலிப் புறுபலவா முத்தியெலாந் தெரிந்தகவி
வல்லான் ருனே.

**ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் குமாரரும்**
**மாணவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ**
**தி. மு. செந்தில் நாயகம்பிள்ளையவர்களியற்றியது.**

*அழகிற் சிறந்திட மாம்பழப் பேர்கொ ளருட் புலவன்*
*பழனிக் குமரனந் தாதி திரிபிற் பகர்ந்தனன் பின்*
*விழவுப் பொலிவுறு மவ்வூர்ப் பெரியசா மித்திருப்பேர்க்*
*கழகப் புலவன் பொருள்விரித் தோதினன் காசினிக்கே.*

உ

குருவே துணை.

பழனி அடிவாரம் சந்தப்புலமை தி. மு. செந்திநாயகம் பிள்ளை

அவர்கள் மகனாரும் மாணவருமான

தி. செ. முருகதாச பிள்ளையவர்கள் இயற்றியது.

## ஆசிரியப்பா.

சீர்வளர் செந்தமிழ்த் திருநா டதனிற்
பார்வளர் அன்பர் பாவலர் பரவும்
சிவகிரி யென்னத் திகழருட் பழனித்
திருமலை மிசைவாழ் சிவகுரு பரன்மிசை
களவறும் பத்தி அளவறக் கவின்றோன் ;
தீஞ்சுவை பொலியும் தெளிதமிழ்ச் சந்தம்
ஆசு மதுரவித் தாரசித் திரமாம்
நாற்கவி களுமிக நவில்பெரும் புலவன் ;
காவலர் கருதுசீர் நாவலர் பெருமான் ;
கவினு மாம்பழக் கவிச்சிங் கப்பெயர்
பெற்றவன், அறுமுகப் பெருமான் மீது
சொற்றுள பன்னூற் றொகுதியுள் ஒன்று
"குமரனந் தாதி"யாக் கூறு நூல், அதிற்சார்
செப்பொருள் விளக்கம் தெரிந்தனன் யாரெனில் ?
பழனியம் பதிவாழ் பாவலன், முருகன்
கழனிதம் போற்றுங் கண்ணியன், இனிதாய்
எவரிடத் தும்பழ கியல்பினன், பெரிய
சாமிப்பண் டாரமாச் சாற்றிடும் புனிதன்,
அதனையுள் ளன்பால் அச்சினிற் பதித்து
அன்பினர் படித்துள் இன்பமிக் கமையப்
புத்தமு தனையநற் புத்தக மாக்கித்
தந்தவன் பழனித் தலத்தினிற் பரம்பரை
வீரமா சைவ மெய்நெறி விளக்கும்
ஆதீ னத்தினில் அமர்ந்திடுந் தலைவன்
என்றும் எவர்க்கும் இட்டுவாழ் தூயன்
வளப்பமார் பத்தி மாண்புறு தவத்தோன்
துறவினர் புலவர் சூழ்பெருங் குழாத்தினன்
பாலயப் பெயர்புனை பண்ணவன் காண்மின் !
அன்னவன் றன்புகழ் அனுதினம் வாழ்க !
வாழ்க ! என்றே வழுத்துவம் யாமே.

சிவமயம்.

# அணிந்துரை.

செந்தமிழ் நாட்டிற் சீருற்றிலங்கும் திருப்பதி குமரனுறையும் படைவீடுகள் ஆறனுள் ஒன்று திருவாவினன்குடி யென்னும் திருப்பெயர் வாய்ந்தது. அன்பர்கள் உடற்பிணி, உயிர்ப்பிணி போக்கும் பான்மையது. அருணகிரிநாதர் அரும் பாடல்கள் பல பெற்றது. பழநியென்னப் பாரோர் மகிழ்ந்து வாய்குளிரக் கூறுவது. அம்மலையின் மாண்புறுகாட்சி மக்களின் மனத்தை மலையச்செய்யும் அப்பழநிக் குமரனை குமரனந்தாதியாற் றுதித்தார் கவியரசரேறு மாம்பழக் கவிச்சிங்கம். இவர் பழநியிலேயே முருகன் திருவருளால் தோன்றியவர். புறக்கண் நீங்கி அகக்கண்ணால் அகிலம் புகழும் அற்புதக் குமரனைப் பாடி மகிழ்ந்தார். அவ்வரும் பெரும் குமரனந்தாதிக்கு உரை கண்ட பேரன்பர் சித்த பாலைய சுவாமிகளாதீனத் திரு மடாலயத்தின் பெரும் புலவர். கந்தன் புகழைக் கவினுறக் கூறுபவர். பாக்கள் பல கூறும் பண்பு வாய்ந்தவர். அவர் திருப்பெயரைப் பெரியசாமிப் பண்டாரமென்று பேரறிஞர்கள் பெட்புடன் கூறுவார்கள். அச்சீரிய உரை நூலை அச்சிட்டு உபகரிக்க முன்வந்தவர் அவ்வாதீன குருமூர்த்தியா யிலங்கும் பேரருளாளர் “**ஸ்ரீலஸ்ரீ பாலைய சுவாமிகள்.**” அத்திருவாவினன்குடி திருக்கோயில் வடக்கு வீதியில் மெய்யன்பர்கள் தங்க மெய்ந்நிலைபங் கண்ட மேன்மையாளர். அப்பெருந்தகையாளர் பொறுமை மேன்மையும், கொடை மேன்மையும், உபசரிக்கும் உயரிய மேன்மையும் கம்பர், இளங்கோ போன்ற புலவரேறுகளாற்றான் புகழத்தக்கதாகும். இஃது உபசாரமன்று, உண்மையேயாகும். ஒருநாட் செல்லலம், இருநாட் செல்லலம், பலநாட் பயின்று, பலரொடு செல்லினும், தலைநாட்போன்ற விருப்பினன் என்று அதியமானை ஔவையார் கூறியதற்கு இலக்கியமாக இலங்குபவர். இவ்வுரை நூலும், அப்பாலைய சுவாமிகளும் தண்டமிழ் குமரன் தண்ணருளால் நீடுவாழ மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

உண்மையன்புள்ள,

17-2-54
எடையூர்.

**குக சதாசிவ அடிகள்.**
**த. நா. து. சங்கத் தலைவர், எடையூர்.**

## பட்டத்து விநாயகர் துதி.

பூமேவு கற்பகப் பொன்னகர் முன்னோர் புலவனுக்கு
மாமேவு மன்பின் வழங்கிய பேரருள் வள்ளலெனும்
நாமேவு வேற்கைக் குமரனந்தாதிக்கு நற்பழநிப்
பாமேவுசீர் திகழ் பட்டத்தியானை பதந்துணையே.

ஓர் புலவனுக்கு—ஒப்பிலாத (பெருஞ் செல்வத்தையுடைய) தேவேந்திரனுக்கு, முன் பூமேவு கற்பகபொன்னகர்—முன்னொரு காலத்தில் (சூரபத்மன் மகன் பானுகோபனால் சுட்டழிக்கப் பட்ட) மலர்கணிறைந்த கற்பகத் தருவையுடைய சுவர்க்க லோகத்தை, மா மேவும் அண்பின் வழங்கிய பேர் அருள் வள்ளல் எனும்—மிகுந்த நேசத்தினால் (முன்னிலும் சிறப்புற சிருஷ்டித் துக்) கொடுத்தருளிய பெருங் கருணைக் கொடையாளரெனச் சர்வலோகமும் புகழப் பெற்றவராகிய, நாம் மேவுவேல் கை குமரன் அந்தாதிக்கு— (தன்னை வணங்காத பகைவர் மனதில்) அச்சத்தை விளைவிக்குந் திறல்கொண்ட வேலினைத் திருக்கரத்திற் றாங்கிய ஸ்ரீ குமாரக் கடவுளின்மீது (யான் பாடத் தொடங்கி யிருக்கும்) அந்தாதி யென்னும் துதி நூலானது இடையூறின்றி யினிது முடிதற்பொருட்டு, நல் பழநி பா மேவு சீர்திகழ் பட்டத்துயானை பதம் துணையே—நன்மை வாய்ந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய பழநியம்பதியில் திருவருட்பாமாலைகளை அணிந்து திவ்யாலங்கிர்தராய் வீற்றிருந்தருளும் பட்டத்து விநாயகக் கடவுளின் திருவடிகள் (எனக்கு)த் துணையாய் நின்றருளுமாக.

[இச்செய்யுளுக்கு மற்றும் ஓருரை.]

நா மேவு வேல் கை குமரன் அந்தாதிக்கு — அனந்தகோடி சூரியப்பிரகாசமாக விளங்கும் வேலினைத் திருக் கரத்திற்றாங்கிய ஸ்ரீ குமாரக் கடவுளின்மீது யான் பாடத் தொடங்கியிருக்கும் அந்தாதிக்கு, முன் பூ மேவு கற்பக பொன் நகர் ஓர் புலவனுக்கு— முற்காலத்தில் (சூரபத்மனாக்கினைக்கஞ்சி சீர்காழித் தலத்தை யடைந்து மலர்க்காவமைத்து அவ்வனம் செழித்தோங்குதற் குரிய தண்ணீரிலாது வருந்தித் துதித்திடும்) புட்பங்கள் செறிந்த கற்பக நாட்டிற் கிறைவனாகிய இந்திரனுடைய வேண்டுதற்கு, மா மேவும் அன்பின் வழங்கிய பேர் அருள் வள்ளல் எனும்— நிரம்பிய காருண்யங் கொண்டு (காக ரூபத்துடன் சென்று

அகஸ்தியர் கமண்டலத்திலுள்ள நீரைக் கவிழ்த்தி காவிரி நதியென உலகிற் கொணர்ந்து நந்தவனத்திற் பாய்ச்சி இந்திரன் மகிழ) செய்தருளிய பெருங் கருணைத் தியாகமூர்த்தியெனக் கொண்டாடப்பெறும், நல் பழநி பா மேவு சீர்திகழ் பட்டத்து யானை பதம் துணையே — திவ்ய மங்கள சுப நலங்கள் திகழும் திருப் பழநிப்பதியில் அருட்பா மாலைகளை யணிந்து சிறப்புடன் விளங்கா நின்ற பட்டத்து விநாயகக் கடவுளின் திருவடிகள் எனக்குத் துணையாய் நின்றருள வேண்டுகிறேன்.

(பட்டத்து விநாயகரென்பது)

பழநிமா நகரை ஆண்டுவந்த அரசர்களில் ஒருவர் முடிசூடும் தினத்தில் பிரதிஷ்டை செய்து பூசித்து வணங்கியதால் வந்த காரணப் பெயராகுமென்க.

## திருத் தொண்டர்கள் துதி.

பொருந்திரை வேலையருந்திய செல்வனைப் போற்றி யின்பந்
திருந்து மருண கிரிநாதன் பொற்பதஞ் சிந்தையில்வைத்
தருந்திறல் சேர்திருத் தொண்டர் களைப்பணிந் தன்பினர்பால்
வருந்தனி மோனக் குமரனந் தாதி வழுத்துவனே.

பொரும் திரை வேலை அருந்திய செல்வனை போற்றி—கரையில் மோதுகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தை (விருத்திராசுர சம்மாரத்தின் பொருட்டு) குடித்திடும் தபோநிதியாகிய அகஸ்திய முனிவரைத் துதித்தும், இன்பம் திருந்தும் அருணகிரிநாதன் பொன்பதம் சிந்தையில் வைத்து—பரம சுகாநுபவ சீலராய் விளங்கிய அருணகிரிநாத சுவாமிகளின் பொன் போலும் திருவடிகளை மனதில் வைத்தும், அரும் திறல் சேர் திருத் தொண்டர்களைப் பணிந்து—அரிய பெரிய அருட்டிறம் பெற்று (உலகில் அற்புத மகிமைகள் காட்டியருளிய) தெய்வத் தொண்டர்களை (திரிகரண சுத்தியாய்) வணங்கியும், அன்பினர்பால் வரும் தனி மோன குமரன் அந்தாதி வழுத்துவன்—மெய்யடியார்களுக்கு முன் பிரசன்னராகியருளும் ஒப்பிலாத மஹா மவுன யோக நிலையில் விளங்கும் பரம ஞான சுக சொரூபராகிய குமாரக் கடவுளின்மீது அந்தாதி யென்னும் துதி நூலை யான் புகலுவேனாக.

## கணபதி துதி.

அமர னந்தாதி னளினந் தோறுந் துயிலம்பழநிக்
குமர னந்தாதி சோலத்துணை யாமயன் கோபதிவாழ்த்
துமர னந்தாதி பணிவர்கோண் டாடவத் தோன்முகற்காய்
சமர னந்தாதி லகுமைங் கரத்தன்போற் ருளிணையே.

*அனம் தாதின் நளினம் தொறும் அமர் துயில்—அன்னங்களானவை மகரந்த மணமுடைய தாமரை மலர்கடோறும் அமர்ந்து நித்திரை செய்கின்ற, அம் பழநிக் குமரன் அந்தாதி சொல—அழகிய நீர் வளமிக்க பழநியம்பதியில் வீற்றிருந்தருளும் குமாரக் கடவுளின்மீது அந்தாதியென்னுந் தோத்திர நூல் சொல்வதற்கு. அயன் கோபதி வாழ்த்தும் அரன்—பிரம்மதேவனும் தேவேந்திரனும் போற்றிடும் சிவபெருமானும், நந்து ஆதிபன்—பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கத்தைக் கொண்ட தலைவராகிய விஷ்ணுமூர்த்தியும் ஆகிய, இவர் கொண்டாட—இவர்கள் கண்டு புகழ்ந்து கொண்டாட, அதோல் முகன்காய் சமரன்—அந்த (அதி ப்ரபல பராக்ரமசாலியாகிய) கயமுகாசுரனைச் சினந்து கொன்றருளிய போர் வீரனும், நந்தாது இலகும் ஐங்கரத்தன்—கெடாது விளங்கும் ஐந்து திருக்கரங்களை யுடையவருமாகிய விநாயகக் கடவுளின், பொன் தாழ் இணையே துணை ஆம்—பொன் போலும் பிரகாசிக்கின்ற திருவடிகளிரண்டுமே எனக்குத் துணையாய் நின்றருள வேண்டுகிறேன்.*



இந்நூல் உரையாசிரியர் :

**திரு. சு. பெரியசாமி பண்டாரம்,**

**அவர்கள்,**

பழனி.

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்

உ

ஸ்ரீ முருகன் துணை.

# குமரன் அந்தாதி

## நூல்.

புவனங் கடந்த பரம்பொரு ளேயொளிர் பொற்புடைத்துங்
கவனங் கடந்த னடைதன நேர்சசி கண்களிகூர்
தவனங் கடந்த விரமுன் னருள்வர தாமலப்பா
வவனங் கடந்தகந் தாநம்பி னேனின் மலர்ப்பதமே.

**பு**வனங்கள் தந்த பரம்பொருளே — அண்ட புவன சராசரங்கள் அனைத்தையுஞ் சிருஷ்டித்தருளிய மேலான முழுமுதற் கடவுளே, ஒளிர் பொற்பு உடை துங்க—சுயம்பிரகாசமாக விளங்கும் திவ்யாலங்கிர்த சொரூப சிரேஷ்டனே, அனம் கடம் தன் நடை தனம் நேர் சசி கண் களிகூர் தவன் — அன்னப்பக்ஷியும் குடமும் முறையே தனது நடைக்கும் கொங்கைக்கும் ஒத்தவளாகிய இந்திராணியிடத்து விருப்ப மிக்குடைய நாயகனாகிய தேவேந்திரனானவன், அங்கு அடம் தவிர முன் அருள் வரதா— அந்த (வீரமா மகேந்திரபுரத்திலுள்ள சூரனால் அடைந்திருந்த) இழிவான துன்பங்களனைத்தும் நீங்கிட முன்னரே (செந்திலம் பதியில்) அபயங் கொடுத்தாண்டருளிய கிருபாநிதியே, மல பாவ வனம் கடந்த கந்தா—ஆணவாதி மும்மலங்களா லுண்டாகும் பாவமாகிய ஆரண்யத்தை யியல்பாக நீங்கிய கந்தசுவாமியே, நின் மலர்ப் பதமே நம்பினேன்—தேவரீருடைய தாமரை மலர் போன்ற திருவடிகளையே உற்ற துணையாய்க் கொண்டிருக்கின்றேன் (இரக்ஷித்தருள்வாயாக.)

ஒளிர் பொற்பு உடை துங்க அனம் எனக்கொண்டு—பிரகாசிக்கின்ற அழகுடைய சிறப்பு வாய்ந்த அன்னப் பக்ஷியெனவும் பொருள் கூறலாம்.

அங்கு அடம் தவிர—வீரமா மகேந்திரபுரமாகிய அவ்விடத்திலுள்ள சூரபத்மனிடத்திற் கொண்டிருந்த வருமம் நீங்கிட எனவும் பொருள் கூறலாம்.

பதங்கா தலங்குற வஞ்சி கயவர்தம் பாற்சொலிச்சந்
ததங்கா தலங்குற வாக்குமம் மாதரைச் சார்ந்துடலம்
வதங்கா தலங்குற நற்போதந் தந்தெனை மாசடரா
விதங்கா தலங்குற ளாயளந் தோன்றொழு மெய்ப்பொருளே.

*தலம் குறளாய் அளந்தோன் தொழும் மெய்ப் பொருளே — (மாவலிச் சக்கரவர்த்தியி னிடத்தில்) பூமியை சிறிய வாமன ரூபமாகச் சென்று யாசித்து (விஸ்வரூபங்கொண்டு உலகமனைத்தும் இரண்டடிக்குள் அடங்க) அளந்தோராகிய விஷ்ணு மூர்த்தி வணங்கும் மெய்ஞான தெய்வமே, பதம் காதல் அம் குற வஞ்சி—சிந்து காதல் அழகிய குறவஞ்சியென்னும் பாடல்களை, கயவர் தம் பால் சொல்லி—லோபிகளாகிய கீழ் மக்களிடத்திற் சென்று அவர்களைச் சிறப்பித்துக் கூறியும், சந்ததம் காதல் அங்கு உற ஆக்கும் அ மாதரை சார்ந்து — சதாகாலத்திலும் ஆசையானது தாங்களிருக்கும் அவ்விடத்தையே நாடும்படி மையலை யூட்டும் தந்திரமுடைய அந்தப் பெண்களின் சேர்க்கையை யடைந்தும், உடலம் வதங்காது—சரீரம் வாடி வருந்தாமல், அலம்குற நல் போதம் தந்து—சகல துன்பங்களும் குன்றிட மெய் ஞானத்தைக் கொடுத்து, எனை மாசு அடரா விதம் கா— அடியேனைப் பூர்வ வினையின் காரியமாகிய பாவ கர்மங்கள் தொடராத வண்ணம் காத்தருள்வாயாக.*

பதம் என்பதற்கு : '*பல்லவி, அனுபல்லவி, சரணம் யெனும் உருப்புக ளமைந்த பாட்டை பதம்' எனக் கூறவும் பொருந்தும். சேத்திரியப் பதம், புரந்தர தாசர் பதம் முதலானதுகள் காண்க.*

*அலங்கு உற நல்போதம் (எனப் பதப்பிரிவு செய்து) விளங்கா நின்ற நிலைபெற்ற மெஞ்ஞானம் எனப் பொருள் கூறவும் பொருந்தும்.* (2)

மெய்யந் தரங்க முதல்வனைத் தானவர் வீறுயிருட்
குய்யந் தரங்க வருநெடு வேலனைக் கூறுதுதி
செய்யந் தரங்க மெறிகடன் ஞாலத்துட் செல்வமெல்லாம்
பொய்யந் தரங்க வனமுனக் கேனதிற் புன்மனமே.

*புல் மனமே—அற்ப விஷயங்களை அனுஷ்டித் துழலுகின்ற மனமே, அம் தரங்கம் எறிகடல் ஞாலத்துள் செல்வம் எல்லாம் பொய்—அழகிய திரைகள் வீசுகின்ற கடல்சூழ்ந்த உலகத்தின் கண்ணுள்ள செல்வங்களனைத்தும் அழியக்கூடிய அநித்தியப்*

பொருள்களேயாம், அந்தரம் கவனம் உனக்கு அதில் ஏன்—சதா காலமும் இச்சை உனக்கு அப்பொய்ப் பொருள்களிடத்து செல்லுவதில் பிரயோசனம் யாது, (அதனை விடுத்து) அந்தரங்க முதல்வனை—சர்வ சேதனு சேதனங்களிடத்தும் அந்தர்யாமியாயுள்ள தனிமுதற் பொருளாயுடையவரும், தானவர் வீறு உயிர் உள் குய்யம் தரம் கவரு நெடு வேலனை—சூரபன்மனுதிய அசுரர்களின் வலிய உயிரையும் உள்ளிருக்கும் வஞ்சக மாயா சத்தியையும் அறவே பறித்துப் பிளந்த நெடிய வேலாயுதத்தை யுடையவருமாகிய குமாரக் கடவுளை, கூறு துதி செய் மெய்—அவருடைய பெருமைகளைக் கூறுகின்ற அருட்பாசுரங்களைத் தோத்திரம் செய்வாயாக. அதனுல் அழிவிலாச் செல்வமாகிய நித்யானந்தப் பொருளை அடைந்திடுவாய். (3)

உள் குய்யம் தரம்—என்பதற்கு: "உள்ளே வஞ்சக மாயா வல்லபத்தையுடைய கிரவுஞ்ச கிரியை" எனவும் பொருள் கூறலாம்.

புன்னுக மஞ்சு பொறுக்கும் பழநிப் பொருப்பிலுறை
மன்னுக மஞ்சு குணமா தவத்தர் வழுத்துமுமை
துன்னுக மஞ்சு முகமுடை யானரு டோன்றல்விடப்
பன்னுக மஞ்சு பயில்வா கனன்பதம் பற்றுநெஞ்சே.

நெஞ்சே!—மனமே!, புல் நாகம் மஞ்சு பொறுக்கும் பழநி பொருப்பில் உறை மன்—புலிகளும், யானைகளும், மேகங்களும் சஞ்சரித் துலவிடத் தாங்கிய பழநியங்கிரியில் வீற்றிருந்தருளும் தலைவரும், ஆகமம் சுகுண மாதவத்தர் வழுத்தும்—காமிக முதல் வாதுள மிறுதியாகவுள்ள சைவாகமங்களும் சற்குண சீல தவ சிரேஷ்டர்களும் துதிக்கின்ற, உமை துன்னு ஆகம் அஞ்சு முகம் உடையான் அருள் தோன்றல்—உமா தேவியார் பொருந்திய வாமபாக திருமேனியை வாய்ந்த ஐந்து திருமுகங்களை யுடைய சிவபெருமான் (நுதல் விழியில்) அருளிய புதல்வரும், விடபல் நாகம் அஞ்சு மயில் வாகனன் — விஷப் பற்களுள்ள சர்ப்பங்களைப் பயந்து நடுங்கிடச் செய்யும் ஆற்றல் கொண்ட மயிலை வாகனமாக வுடையவருமாகிய குமாரக் கடவுளின், பதம் பற்று—திருவடிகளையே புகலிடமாகக் கொள்வாயாக.

இதனுல் இஷ்ட சித்திகள் யாவும் பெறுவாய் என்பது எஞ்சிய பொருள்.

புல் நாகம் என்பதை, புன்னுகம் எனக்கொண்டு புன்னுக விருக்ஷங்கள் எனவும் பொருள் கூறலாம். (4)

பற்ற கரத்தரங் கெட்டுவெஞ் சூரன் படப்பொருவே
லுற்ற கரத்தரங் கோர்நா ரதன்மகத் தூடெழுந்த
மற்ற கரத்தரங் கஞ்ச மென்றாளை மதித்துருகா
வெற்ற கரத்தரங் கக்கட னேர்பவம் விட்டிலரே.

*பல் தகர தரம் கெட்டு வெம் சூரன் பட—பற்கள் நொருங்கிப் பலமெலாங் குன்றிக் கொடிய சூரபன்மன் மரணமடைந்திட, பொரு வேல் உற்ற கரத்தர்—தாக்கிடும் வேலினைத் தாங்கிய திருக் கரத்தையுடையவரும், அங்கு ஓர் நாரதன் மகத்து ஊடு எழுந்த மல் தக ரத்தர்—அந்த (மேருகிரிச் சாரலில் ஓர் பரிசுத்தமான) இடத்தில் ஒப்பற்ற நாரத முனிவர் செய்த வேள்வியில் தோன்றிய மிகுந்த வலிமைகொண்ட ஆட்டுக்கடா வாகனத்தையுடையவருமாகிய ஸ்ரீ முருகக் கடவுளின், அம் கஞ்சம் மெல் தாளை மதித்து உருகா வெற்று அகர்—அழகிய செந்தாமரை மலர் போன்ற மிருதுவாகிய திருவடிகளை நினைந்து அன்புகொண்டிளகிடாத பாழான மனத்தினர், அ தரங்க கடல் நேர் பவம் விட்டிலர்—அந்த அலைகளையுடைய சமுத்திரம் போன்ற பிறவித் துன்பத்தினின்றும் என்னாளும் நீங்கமாட்டார்களென்க.* (5)

விட்டிலங் காவ தறியாமை யாற்சுடர் மேல்விழல்போற்
கட்டிலங் காவ னிதிவாணுதலிற் கனதிலகப்
பொட்டிலங் காவ லரிவையர் மய்யலிற் போவதென்னே
மட்டிலங் காவ துடையான் மருகனை வாழ்த்துநெஞ்சே.

*நெஞ்சே—மனமே, விட்டில் அங்கு ஆவது அறியாமையால் சுடர் மேல் விழல் போல்—விட்டிற் பூச்சியானது அவ்விடத்து தனக்கு நேரும் விபத்தைத் தெரியாமல் விளக்கின்மேல் வீழ்ந்து மடிவதுபோல, கட்டு இலம்—மாட மாளிகையுடன் கட்டப்பெற்ற வீட்டினிடத்தும், காவல் நிதி—பாதுகாப்புடைய பொன் முதலான திரவியங்களினிடத்தும், வாள் நுதலில் கனதிலக பொட்டு இலங்கு அரிவையர் மையலில்—ஒளி பொருந்திய நெற்றியில் வட்டமாகிய திலகப் பொட்டுள்ள மாதர்களின் மோகத்தினிடத்தும், ஆவல் மட்டில் போவது என்னே—இந்த ஈஷணாத்திரயங்களிடத்தே ஆசையை (நீ) அளவிலாது செலுத்துவதில் பிரயோசனம் யாது, அம் கா அது உடையான் மருகனை வாழ்த்து—அழகிய காத்தற்றொழிலையுடைய திருமாலின் மருகராகிய முருகக் கடவுளை துதித்து வணங்குவாயாக.*

'அம் கா அது உடையான் மருகனே' என்பதற்கு அழகிய கற்பகச் சோலையையுடைய அமரேசன் மருகரெனவும் கூறலாம். (6)

வாழ்வித் தனந்த வறுவதன் றென்று மயங்கிநெறி
தாழ்வித் தனந்த வினைசெய லுற்பவத் தைத்தருமோர்
பாழ்வித் தனந்த கவாநடை யார்சம பாசநெஞ்சே
சூழ்வித் தனந்த மலைக்கும ரேசன் றுணைச்சரனே.

நெஞ்சே — மனமே, வாழ்வு இ தனம் தவறுவது அன்று என்று மயங்கி—நமது வாழ்நாளும் தன தானிய சம்பத்துகளும் அழியக்கூடியதல்லவெனப் பிரமைகொண்டு, நெறி தாழ்வித்து அனந்த வினை செயல் — தர்ம நீதி மார்க்கத்தைக் கீழ்ப்பட விடுத்து அநேக பாவத் தொழில்களைச் செய்வதானது, உற்பவத்தை தரும் ஓர் பாழ் வித்து—(அளவிலாத) பிறவிகளைத் தரும் படியான ஓர் கெடுதி வாய்ந்த விதையேயாம், அனம் தகவா நடையார் சமபாசம்—அன்னப்பக்ஷியும் இணையிலாத அழகிய நடையினையுடைய பெண்களின் (தீய நட்பே) கூற்றுவனது பாசக் கயிறாகும், (ஆதலால்) வித்தன் நம் தம் மலை குமரேசன் துணை சரணே சூழ்—பரம ஞான சொரூபரும் நமது பழநியங்கிரியில் வீற்றிருப்பவருமாகிய குமாரக் கடவுளின் இரண்டு திருவடிகளையே சிந்தித்து வணங்குவாயாக. (7)

சரங்கா விதந்தர மெஞ்ச வயங்குகட் டையலர்பா
லிரங்கா விதந்தர வந்தருள்வாய் போன் னெழினலமு
திரங்கா விதந்தர வஞ்ச நடிக்குஞ் சிகாவளமா
துரங்கா விதந்தர ணிக்குள் வள்ளிக்குறத் தோய்பவனே.

பொன் எழில் நலம் முதிர் அங்கா—பொன் போலும் பிரகாசிக்கின்ற அழகிய புனிதமிக்க திருமேனியை யுடையவரே, அரவு அஞ்ச விதந்து நடிக்கும் சிகா வள மா துரங்கா — சர்ப்பங்கள் பயந்து நடுங்கிட மிகுந்த சிறப்புடன் நடனம் செய்கின்ற மயிலினைப் பெருமை வாய்ந்த வாகனமாக வுடையவரே, தரணிக்குள் வள்ளிக்கு இதம் உற தோய்பவனே—பூவுலகத்தில் வள்ளி நாச்சியார் பூரண இன்பமடைந்திடக் கலந்தருளிய நாயகரே, சரம் காவி தம் தர எஞ்ச வயங்குகண் தையலர் பால் — பாணமும் குவளை மலரும் முறையே செயலும் பண்பும் குறைந்திட விளங்கா நின்ற விழிகளையுடைய பெண்களிடத்தில், இரங்கா விதம் தர வந்து அருள்வாய்—இச்சை கொண்டழியாவண்ணங் கிருபை செய்வதற்கு வந்தருள்வீராக. (8)

தோய வலைக்கு வலயத்து ளென்னைத் துலங்குமெழி
லாய வலைக்கு மிழியைப் பொருமுலை யார்தமது
மாய வலைக்கு வசப்படுத் தேலமர் வாளவுண
ரோய வலைக்கு மயிற்கும ராவரு ளுண்மதியே.

அமர் வாள் அவுணர் ஒய அலைக்கும் அயில் குமரா—யுத்த களத்திலே வாள் முதலான ஆயுதங்களுடன் வந்த அசுரர்கள் மாய்ந்து சிதறிடக் கலக்கிய கூர்மை கொண்ட வேலினைத் தாங்கிய குமாரக் கடவுளே, தோய அலை குவலயத்துள் என்னை — நீர்ப் பெருக்குடைய கடல் சூழ்ந்த நிலவுலகின் கண்ணே அடியேனை, துலங்கும் எழில் ஆய் வல்லை குமிழியை பொரு முலையார் தமது மாய வலைக்கு வசப்படுத்தேல்—பிரகாசிக்கின்ற அழகு வாய்ந்த சொக்கட்டான் காயையும் நீர்க்குமிழியையும் ஒத்த தனத்தை வாய்ந்த பெண்களுடைய மோக வலைக்குள்ளே அகப்படுத்தாமல்; உள் மதி அருள்—எனக்கு அந்தர் முக ஞான திருஷ்டியை அனுக்கிரகம் செய்வீராக.

மயில் எனப் பதப்பிரிவு செய்து — மயில் வாகனத்தை யுடையவரெனவும் பொருள் கூறலாம். (9)

மதியா தவனற் சினமூடர் கட்கு வரந்தரச்சம்
மதியா தவனற் குடகுஞ் சரிமண வாளனவிர்
மதியா தவனற் சுரர்பணி வேளருள் வாழ்வுறத்தா
மதியா தவனற் புதமலர்த் தாளை வழுத்துநெஞ்சே.

நெஞ்சே—மனமே, மதியாத அனல் சின மூடர்கட்கு வரம் தர சம்மதியாதவன் —(அருள் வசப்பட்ட மெய்யடியார்களை) மதிக்காத அக்கினிபோலுங் கொடிய கோபத்தையுடைய அறிவீனர்களுக்கு அவர்களெண்ணிய வரங்களைக் கொடுக்க (சிறிதும்) இணங்காதவரும், அல் குழல் குஞ்சரி மணவாளன்—இருள் போலுங் கரிய கூந்தலையுடைய தெய்வயானை நாயகிக்குக் கணவரும், அவிர் மதி ஆதவன் நல் சுரர் பணி வேள் — விரிந்த கிரணங்களையுடைய சந்திர சூரியரும் நன்மை வாய்ந்த தேவர்களும் புகழ்ந்து வணங்கும் செவ்வேட் பெருமானாகிய ஸ்ரீ முருகக் கடவுளது, அருள் வாழ்வு உற — திருவருட் செல்வத்தை யடைவதற்கு, தாமதியாது அவன் அற்புத மலர் தாளை வழுத்து (நீ)சிறிதுந் தாமதியாமல் அக்கடவுளுடைய அழகிய மகத்துவ தாமரை மலர்போலுந் திருவடிகளை துதித்து வணங்குவாயாக. (10)

வழுத்த விரும்பழ வாரணத் துச்சியில் வாழ்முருகன்
கொழுத்த விரும்பழ னம்புடை சூழ்ந்து குறைவிலின்பம்
பழுத்த விரும்பழ நிக்கும ரேசன் பதத்தினையுள்
ளழுத்த விரும்பழ னீள்வினைப் பாச மறற்குநெஞ்சே.

நெஞ்சே—மனமே, அழல் நீள் வினை பாசம் அறற்கு-நெருப்பினுங் கொடுமை மிக்க வினையினு லடையும் கர்ம பந்தங்களினின்றும் விடுபட்டுய்வதற்கு, வழு தவிரும் பழ ஆரணத்து உச்சியில் வாழ் முருகன்— மாசற்ற பழமையான வேதத்தின் முடியில் அமர்ந்தருளும் முருகனென்னும் திருநாமத்தை யுடையவரும், பழனம் புடை சூழ்ந்து கொழுத்து அவிரும் இரும் பழநிக் குமரேசன்—வயல்களானவை பக்கங்களிற் சூழ்ந்து செழித்தோங்கி விளங்கும் பெருமை வாய்ந்த பழநியம்பதியில் வீற்றிருப்பவருமாகிய குமாரக் கடவுளுடைய, குறைவு இல் இன்பம் பழுத்த பதத்தினை—(இஷ்ட சித்திகளை யருளும் இனிய) பரிபூரண சுகங் கனிந்த புனித பாதங்களை, உள் அழுத்த விரும்பு — (உன்னிடத்தில்) பதித்தருளும் வண்ணம் (அவர் பணிவிடைகளில்) நீ இச்சை கொள்வாயாக. (11)

அறந்த வளமலை யாற்குரைத் தோயங் கவன்சடைமேற்
சிறந்த வளமலை யன்பாமைந் தாவினை செய்யமதித்
தறந்த வளமலை கொங்கையர் மைய றவிர்த்தருள்சீர்
பிறந்த வளமலை வின்மா பழநிப் பிரபலனே.

அறம் தவள மலையாற்கு உரைத்தோய் — வேத சாரமாக விளங்கா நின்ற பிரணவப் பொருளை வெள்ளிமலைக் கிறைவராகிய சிவபெருமானுக்கு உபதேசித்தருளிய குருநாதனே, அங்கு அவன் சடைமேல் சிறந்தவள் அமலை அன்பாம் மைந்தா—அவ்விடத்திலேயுள்ள பரமசிவனுடைய சடையின்மீது சிறப்புற்று விளங்கும் பகீரதிக்கும் பார்வதிக்கும் மிகுந்த விருப்பமுள்ள புத்திரனே பிறந்த வளம் அலைவு இல் மா பழநி பிரபலனே—உற்பத்தியான சகல செல்வ வளங்களும் கெடுதலில்லாது விளங்கும் பெருமை வாய்ந்த பழநியம்பதியிலே (அற்புத மகிமைகள் பற்பல காட்டியருளும்) உலகப்ரசித்தமாய் விளங்கும் மெஞ்ஞான தெய்வமே, வினை செய்ய மதித்தல்—இவ்வுலகத்தில் வஞ்சகமான விஷயங்களைச் செய்ய எண்ணுதலையும், தந்தாவளம் மலை கொங்கையர் மையல் தவிர்த்து — யானையின் மத்தகமுந்திகைத்திடத்தக்க

தனேபாரங்களையுடைய பெண்களினிடத்துண்டாகு மோகத்தையும் அடியேனுக்கு நீக்கி, சீர் அருள்—பரமானந்த வாழ்வை அனுக்ரகிப்பாயாக.

'அறம்' என்பது வேதத்தின் பரியாய நாமங்களின் ஒன்று. (12)

பிரமனந்தத்த மிசையேந்து மாயன் பிறங்குவெண்மா
திரமனந்தத்த வசித்தர் புகழ்மந் திராவெனகங்
கரமனந்தத்த துறுதருள் செய்பொற்கமலநிரந்
தரமனந்தத்த மதுப்பெய் பழநித் தயாபரனே.

பிரமன்—பிரமதேவனும், நந்து அத்தம் மிசை ஏந்து மாயன்—பாஞ்ச சன்யமென்னும் சங்கத்தைக் கரத்திற் றாங்கிய விஷ்ணு மூர்த்தியும், பிறங்கு வெண் மாதிர மன்—விளங்குகின்ற வெள்ளை யானைக் கிறைவனுகிய தேவேந்திரனும், அந்த தவ சித்தர் புகழ் மந்திரா—அந்த அகஸ்திய முனிவராதி போகர் புலிப்பாணிவரையுள்ள பூரண தவ சிரேஷ்டர்களும் துதிக்கின்ற சடாக்ஷர மந்தர சொரூபனே, செய் பொன் கமலம் நிரந்தரம் அனம் தத்த மது பெய் பழநி தயாபரனே—வயல்களிலுள்ள அழகிய தாமரை மலர் கடோறும் அன்னப் பக்ஷிகள் தாவிச் சஞ்சரிப்பதினுல் தேனெழுகிப் பெருகுகின்ற வளமிக்க பழநிப்பதியில் வாழும் கிருபாநிதியாகிய கடவுளே, என் அகங்கர மனம் தத்து அது உறுது அருள்—என்னுடைய கர்வங்கொண்ட மனமானது (அநித்யப் பிரபஞ்ச வாழ்க்கையிலாசையுற்று) இடர்ப்படாதவண்ணம் ரக்ஷித்தருள்வீராக. (13)

பரவற்கரிய பதந்தரு ஞானம் பயிற்றுமலர்
விரவற்கரிய குழலார் மயல்வெவ் வினைதவிர்க்குங்
கரவற்கரிய திகர்தொழுந் தூயன் கனவமளி
யரவற்கரிய தளித்தான் மகன்சர ணம்புயமே.

கர வற்கரி அதிகர் தொழும் தூயன்—கையிலே கமண்டலத்தையுடைய புண்ணிய தவமிக்க அகத்தியராதி முனிவர்கள் துதித்து வணங்கிடும் புனித மூர்த்தியும், கன அமளி அரவற்கு அரி அது அளித்தான் மகன்—பெருமை வாய்ந்த அணையாகப் பாம்பினைக் கொண்ட திருமாலுக்கு (சலந்தராசுரனைச் சங்கரித்த) சக்ராயுதத்தைக் கொடுத்தருளிய சிவபெருமான் புதல்வருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளின், சரண அம்புயமே—பாதார விந்தங்களே,

மலர் விரவு அல் கரிய குழலார் மயல் வெவ் வினை தவிர்க்கும்—மலர்களை அணிந்த இருள்போலுங் கரிய கூந்தலையுடைய பெண்களின் காம வாஞ்சையால் அடையுங் கொடிய துன்பங்களை யறவே நீங்கிடச் செய்வதோடும், பரவற்கு அரிய பதம் தரு ஞானம் பயிற்றும்—சொல்லுதற்கரிய திருவடி சாயுச்சிய பதவியைக் கொடுப்பதாகிய மெஞ்ஞான மார்க்கத்தையும் விளங்கிடக் கற்பித்தருளுமாம்.

ஆதலால் மனமே அம்முருகப் பெருமானுடைய திருவடிகளையே வணங்கித் துதிப்பாயாக. (14)

புயங்கந்தனக்கு நிகரான வல்குலும் பூவுலக
மயங்கந்தனக்கு வடுமுடை யாரின்ப வாழ்வுநற்செவ்
வியங்கந்தனக்கு வியுநிலை யோநெஞ்ச மேயிதநித்
தியங்கந்தனக்கு மரனரு ளாகிய செல்வமெய்யே.

நெஞ்சமே—மனமே, புயங்கம் தனக்கு நிகரான அல்குலும்—பாம்பின் படத்தை யொத்த நிதம்பத்தையும், பூவுலகம் மயங்கும் குவடு தனமும் உடையார்—பூதலத்துள்ள புருடர்கள் இச்சித்து மயங்கத்தக்க அழகினை வாய்ந்த மலையை நிகர்த்த கொங்கைகளையுங் கொண்ட பெண்களுடைய, இன்ப வாழ்வும்—(தரும நெறி தவறி) அனுபவிக்கும் சிற்றின்ப வாழ்க்கையும், நல் செவ்வி அங்கம்—அழகிய திடகாத்திரமான யவ்வனமுள்ள தேகமும், தன குவியும்—சுவர்ண முதலான திரவியப் பெருக்கமும், நிலையோ—நிச்சயமாமோ, இது அநித்தியம்—இதுவெல்லாம் அழியக்கூடிய பொய்ப் பொருளேயாம். கந்தன் அ குமரன் அருள் ஆகிய செல்வம் மெய்யே—கந்தசுவாமியெனுந் திருநாமங்கொண்ட அந்த ஸ்ரீ குமாரக் கடவுளுடைய திருவருட் செல்வத்தை அடைதலே நித்யமாயுள்ள மெய்யான பொருளேயாம்.

(ஆதலால்) நீயும் சதா சிந்திப்பாயாக. (15)

செல்லங்கவனத் தொடையான் மருகன் செகமெனுமிவ்
வில்லங்கவனத் தமதகன் றூர்க்கருண் மெய்க்குமரன்
புல்லங்கவனத் துகைப்பான்மைந் தன்பதம் போற்றுநெஞ்சே
சொல்லங்கவனத் திருப்புகழ் வைவச் சுதனஞ்சவே.

நெஞ்சே — மனமே, செல் அங்க வன தொடையான் மருகன் நீலமேகத்தை யொத்த திருமேனியும் துளவமாலையுமுடையவராகிய திருமாலுக்கு மருகரும், செகம் எனும் இ வில்லங்க

அனத்தம் அது அகன்றூர்க்கு அருள் மெய் குமரன் — பிரபஞ்ச வாஞ்சையாகிய ஈஷணாத்திரய துன்ப பந்தங்கள் விடுபட்ட பெரியோர்களுக்குக் கிருபை செய்யும் உண்மையான குமாரக் கடவுளும், புல்லம் கவனத்து உகைப்பான் மைந்தன்—ரிஷபவாகனத்தை விரைவாகச் செலுத்துகின்ற சிவபெருமானுடைய புதல்வருமாகிய ஸ்ரீ முருகக் கடவுளின், பதம் போற்று—திருவடிகளைச் (சித்த சுத்தியுடன் தெரிசித்து) வணங்கு, அங்கு அவன் அ திருப்புகழ் வைவச்சுதன் அஞ்ச சொல்—அவ்விடத்தில் அக் கடவுளின்மீது (அநுபூதி பெற்ற அகஸ்தியர், நக்கீரர், அருணகிரிநாதர் முதலான பெரியார்கள் திருவாய் மலர்ந்தருளிய) அந்தத் திருப்புகழ்களைக் கூற்றுவன் பயந்து நடுங்கிட (நீ) துதிப்பாயாக. (16)

அஞ்சரிதான புலன்மற் றதனைவென் றங்கமேவை
யுஞ்சரிதான வனிவாழ்வு பொய்யென் றுணர்ந்துதெய்வ
குஞ்சரிதான வனவள்ளி கோனன்பு கொண்டவர்பாற்
சஞ்சரிதான தவமிது முத்தி தருநெஞ்சமே.

நெஞ்சமே—மனமே, அரிதான அஞ்சு புலன் அதனை வென்று—(ஞானேந்திரிய வாயிலா யனுபவிக்கும் சப்த பரிச ரூப ரச கந்தமெனும்) அரிய பஞ்சப் புலன்களை வென்றும், அங்கம் எவையும் சரிதான்—(சகத்தில் சாதி வித்பாச) சரீர பேதங் கருதாது சமத்துவம் கொண்டும், அவனி வாழ்வு பொய் என்று உணர்ந்து—பிரபஞ்ச வாழ்க்கை யனைத்தும் அநித்யமாமென அறிந்து விடுத்தும், தெய்வ குஞ்சரி வனதான வள்ளி கோன் அன்பு கொண்டவர் பால்—தெய்வயானை யம்மைக்கும் வனத்தினிடங் கொண்ட வள்ளிநாச்சிக்கும் மணாளராகிய குமாரக் கடவுளின் திருவடிகளில் பேரன்பு கொண்ட பெரியோர்கள் வசிக்கும் இடத்தில்,சஞ்சரி—(நீ) சென்று வாசஞ் செய்வாய், இது தானம் தவம் முத்தி தரும்—இஃது (உனக்கு) தர்மாதி தவத்தின் பிரயோசனமாகிய மோக்ஷத்தைக் கொடுத்திடும்.

மற்று — அசை. (17)

தருமங்களங்கலங் காரம் பெறத்திருத் தார்பிறர்மேல்
வருமங்களங்கலங் குங்கொலை காமம் வளர்த்துவர்செந்
திருமங்களங்கலந் தோங்கும் பழநிச்செவ் வேளையுன்ஞர்
கருமங்களங்கலந் தீர்வதெவ் வாறு கனநிலத்தே.

கன நிலத்தே—பெருமை வாய்ந்த இப்பூமியின் கண்ணே, தருமங்கள் அங்கு அலங்காரம் பெற திருத்தார்—புண்ணிய தர்மங்களைச் செய்யவேண்டிய அவ் வவ்விடங்களில் சிறப்புற்று விளங்கிடச் செய்யாதவர்களும், பிறர் மேல் வருமம் கள்ளம் கலங்கும் கொலை காமம் வளர்த்துவர்—அன்னியர்மீது வருமத்தையும் திருட்டையும், துன்புறத்தக்க கொலையையும் சுமத்துவதற்குள்ள கெட்ட எண்ணத்தை தன்னுள்ளே வளர்த்துவோர்களும்,செந்திரு மங்களம் கலந்து ஓங்கும் பழநி செவ்வேளை உன்ஞர்—திவ்ய மங்களாலங்கிர்தமான பொருள் வளங்களொடும் இனிய சுப காரியங்களும்நிரம்ப வோங்கிய பழநியம்பதியில் வீற்றிருந்தருளும் செவ்வேட்பெருமானைச் சிந்தியாதவர்களுமாகிய இவர்கள், எவ்வாறு கருமம் களங்க அலம் தீர்வர்-எவ்விதமாக (வினைத்தொடர்பாகிய) பாவ கர்மங்களா லடையும் குற்றமாகிய மனே சஞ்சலத்தை நீக்கிக்கொள்வார்கள்.

நீங்கமாட்டார்கள் என்பது குறிப்பு. (18)

கனகமலைக்குங் கவின்றரு பூண்முலை காதடர்கண்
பனகமலைக்குங் கடிதடங் கொண்டவர் பற்றுமிகுந்
தேனசமலைக்குந் துயர்தீ ரரிக்கு மிலங்குமயி
லனகமலைக்குந் திருமரு காநின் னடைக்கலமே.

அரிக்கும் இலங்கு மயில் அன்ன கமலைக்கும் திருமருகா—விஷ்ணுமூர்த்திக்கும் விளங்குகின்ற மயில்போலுஞ் சாயலையுடைய லெக்ஷுமிதேவிக்கும் பெருமையான மருகோனே, நின் அடைக்கலம்—உன்னைப் புகலிடமாகவுடையேன் யான், (ஆதலால்) கனக மலைக்கும் கவின் தரு பூண் முலை—பொன் மலையினுஞ் சிறந்து விளங்கும் அழகினை வாய்ந்த ஆபரணங் களணிந்த கொங்கைகளையும், காது அடர் கண்—காதுவரை நீண்டு நெருங்கிய விழிகளையும், பன்னகம் மலைக்கும் கடி தடம் கொண்டவர்—படத்தை

யுடைய பாம்பும் கண்டு பிரமிக்கத்தக்க நிதம்பத்தையுங்கொண்ட பெண்களிடத்தில், பற்று மிகுந்து என் அகம் அலைக்கும் துயர் தீர்—காம வாஞ்சை மிகுந்து அடியேன் மனதைச் சலனப்படுத்துகிற துன்பத்தை நீக்கியருள்வாயாக. (19)

கலங்கா மனத்தின மன்கைப் படாதேனைக் காவுனடைக்
கலங்கா மனத்தின தென்ற லுலாவக் கடிகமழ்ந்த
கலங்கா மனத்தின மின்புற வந்தகந் தாகதிபு
கலங்கா மனத்தின மூர்பழ நாபுரிக் காவலனே.

காமன் நந்தின தென்றல் உலாவ கடி கமழ்ந்து அகல் அம்கா மன்—மன்மதன் விரும்பிய (ரதமாகக் கொண்ட) தென்றற் காற்றானது வந்து தவழ்ந்துலாவுவதால் சுகந்த மலர் மணம் மிகுந்து வீசுகின்ற கற்பகச் சோலைக்கிறைவனாகிய தேவேந்திரன், அத்தினம் இன்பு உற வந்த கந்தா—அன்னாளினில் (சூரபத்மனாலடைந்த துன்பத்தினின்றும் விடுபட்டு) இனிய சுகம் பெற்று வாழ்க வந்தருளிய கந்தசுவாமியே, கதி புகல் அம் காம நத்து இனம் ஊர் பழனாபுரி காவலனே — (மூழ்கிய பேர்களுக்கு) இக பர சுகத்தை தருமெனப் புகலுகின்ற புண்ணிய தீர்த்தங்களில் அழகிய சங்கினங்கள் ஊர்ந்து சஞ்சரிக்கின்ற நீர்வளமிக்க பழநியம்பதிக்கு நாயகனே, உன் அடைக்கலம்—தயாநிதியாகிய உன்னையே தஞ்சமாக அடைந்தேன், (ஆதலால்) என்னை கலங்கா மனத்தின் நமன் கைப்படாது கா-அடிமையாகிய என்னை கொலை செய்வதில் அஞ்சாத மனமுடைய கூற்றுவன் கைவசப்பட்டுத் துன்புறாமல் காத்தருள்வாயாக. (20)

காவம்பரத்தை யளாவுஞ்சேந் தூர்க்கதிர் வேற்குமர
மேவம்பரத்தை யனைய கவலை மிடிகொடிய
பாவம்பரத்தை யராசை கிரகப் பகைதவிர்த்துத்
தாவம்பரத்தை யுணருமெய்ப் போதஞ் சதாநந்தமே.

கா அம்பரத்தை அளாவும் செந்தூர் கதிர் வேல் குமர—சோலைகள் ஆகாயம்வரை வளர்ந்தோங்கிச் சூழ்ந்திருக்கப்பெற்ற (மிக்க பெருமை வாய்ந்த) திருச் செந்தூரையுடைய பிரகாசம் பொருந்திய வேலினைத் தாங்கிய ஸ்ரீ குமாரக் கடவுளே, மேவு அம்பரத்தை அனைய கவலை—என்னை அடைந்திருக்கிற கடல் போலும் நிறைந்த கிலேசத்தையும், மிடிகொடிய பாவம்—தரித்திரத்தையும் தீய பாவ கர்மங்களையும், பரத்தையர் ஆசை பொருட்

பெண்டிர்க ளிடத்திலுண்டாகும் இச்சையையும், கிரகப் பகை தவிர்த்து — நவக்கிரங்களின் (பகை நீச சட்டாட்ட கவியஸ்தான பேதங்களால்) அடையும் தோஷங்களேயும் அறவே நீக்கி, அம்பரத்தை உணரும் மெய்ப்போதம் சுதானந்தம் தா — அழகிய மேலான நின் யதார்த்த சொரூபத்தை யறியும் மெய்ஞானத்துடன் அழிவிலாத நித்யானந்தத்தையும் தந்தருள்வாயாக. (21)

நந்தாமலக லிடம்புகழ் சைவத்தை நாட்டியவேற்
கந்தாமலக முடையா ருளத்தணு காக்குமரா
முந்தாமலக வனந்தர சேநின் முதிரருளின்
பந்தாமலக வனத்தால் வருமுற் பவமறவே.

அகலிடம் புகழ் சைவத்தை — விசாலமான இப்பூமியின் கண்ணே (மேலோர்களால்) போற்றுகின்ற பெருமை வாய்ந்த சைவ சமயத்தை, நந்தாமல் நாட்டிய வேல் கந்தா — (சமணர்கள் முதலான புறச்சமயிகளால்) கெடுதியடையாவண்ணம் திருஞான சம்பந்த சுவாமியாய் அவதரித்து வந்து தேவாரப் பாசுரத்தால் நிலைபெறச் செய்தருளிய வேலினைத் தாங்கிய கந்தசுவாமியே, மலக்கம் உடையார் உளத்து அணுகா குமரா — கலக்கமுடையார்கள் மனத்தின்கண் பொருந்தாத குமாரக் கடவுளே, முந்து அமலக வனத்து அரசே — புராதனமாய் விளங்கும் நெல்லிவன க்ஷேத்திரமாகிய திருவாவினன்குடித் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே, மல கவனத்தால் வரும் உற்பவம் அற — ஆணவாதி மும்மலச் செயலால் அடைகின்ற பிறவியை யான் அறவே நீங்கும்பொருட்டு, நின் முதிர் அருள் இன்பம் தா — நினது பெருங் கருணைப் பரமசுகத்தைக் கொடுத்தருள்வாயாக. (22)

பவளம்பரவ வருமிதழ் வேல்விழிப் பார்மகளா
யவளம்பரவ மரருய்ய வந்தமெய் யாவினைதீர்
திவளம்பரவ மருத வயல்புடை சேர்ந்துதுலவ
குவளம்பரவ வளரும் பழநிக் குமரய்யனே.

பவளம் பரவ வரும் இதழ்வேல் விழி பார்மக ளாயவள் — பவளமுங் கண்டு புகழப் பொருந்திய சிவந்த அதரமும் வேல் போன்ற நீண்ட கண்களேயுமுடைய பூமிதேவியென்பவளும், அம்பர அமரர் — ஆகாய வாசிகளாகிய தேவர்களும், உய்ய வந்த மெய்யா — (முறையே அக்ரமச் செயல்கொண்ட அசுரர் கூட்டங்களில் பெரும் பாரத்தையும் அவர்கள் செய்யும் அனேக துன்பத்

தையும் நீங்கி) வாழ்ந்திட வந்தருளிய நித்ய வஸ்துவாயுள்ள மூர்த்தியே, திவள் அம்பு அரவம் அறாத வயல் புடை சேர்ந்து—(கால்வாய்கடோறும்) தவழ்ந்து செல்லும் தண்ணீரானது ஒலி மாறாது பாய்கின்ற வயல்கள் பக்கங்களில் சூழ்ந்து, துளங்கு வளம் பரவ வளரும் பழநி குமரய்யனே—விளங்குகின்ற சகல வளங்களும் நிறைந்தோங்கிய பழநியம்பதியில் வாழும் குமரக் கடவுளே, வினை தீர் — எனது ஊழ்வினைத் தொடர்பால் வரும் துன்பங்களை நீக்கியருள்வாயாக. (23)

ஐவரையங்க சனைநெடுங் கூற்றை யடக்கிமுழு
மைவரையங்க ணியரைவெல் வீரன்று வள்ளியஞ்சக்
கைவரையங்க மதமா வழைத்தருள் காரணன்மெய்ச்
சைவரையங்க முதமேற்று வான்பெயர் சாற்றுமினே.

(உலகீர்காள்)

அன்று வள்ளி அஞ்ச—அந்நாளில் (தினைப்புனத்திருந்த) வள்ளி நாச்சியார் கண்டு பயப்படும்படிக்கு, கை வரை அங்க மத மா அழைத்து அருள் காரணன்—(முன் காரணப்படி நிகழ வேண்டிய கல்யாண காரியத்தை முன்னிட்டு விநாயகக் கடவுளை) துதிக்கையை யுடைய மலைபோன்ற பெரிய வடிவமுள்ள மத யானையாக வரவழைத்தருளிய கடவுளும், மெய் சைவரை அங்கு அமுதம் ஏற்றுவான் பெயர் சாற்றுமின்—உண்மையான சைவ சமயத்தோர்களை எல்லாம் அந்த ஆச்சாபுரத்தின்கண்ணே (ஞான சம்பந்தமூர்த்தியாக வந்தருளித் தமது திருமணப் பந்தலிலே) மோக்ஷத்தை யடையச்செய்தவருமாகிய ஸ்ரீ முருகப்பெருமானது திருநாமங்களைச் சொல்லித் துதிப்பீர்களேயானால் (நீங்கள்), ஐவரை அங்கசனை நெடுங்கூற்றை அடக்கி—சப்த பரிச ரூப ரச கந்தமெனும் ஐம்புல நுகர்ச்சியால் அனுபவிக்கும் அநித்ய ப்ர பஞ்ச விடய வாசனையையும் மன்மத பாணங்களால் நேரும் விகாரத்தையும் பருத்து நீண்ட யமன் பாசபயத்தையும் அறவே யொழித்தும், முழு மை வரை அம் கண்ணியரை வெல்வீர்—மிகுந்த கரிய அஞ்சன மெழுதிய விழிகளையுடைய பெண்களாலடையும் காம மயக்கமும் அணுகாமல் செயம்பெற்று வாழ்வீர்கள். (24)

மின்னலங்கார தனிலெழல் போலுமிம் மேதினியிற்
பொன்னலங்கார மனைமுதல் வாழ்வதிற் போயுழன்று
பின்னலங்கார மிகுகோப மேவும்பித் தீர்குமரன்
றன்னலங்கார மலர்த்தாளெஞ் ஞான்றுந் தலைக்கொண்மினே.

அங்காரம் மிகு கோபம் மேவும் பித்தீர்—தீயினு மிகுந்த கொடிய கோபங்கொண்டு திரியும் பித்தர்காள்! இம் மேதினியில் பொன் அலங்கார மனை முதல் வாழ்வு அதில் போய் உழன்று பின்னல்—இவ்வுலகத்தின்கண்ணே சுவர்ணத்துடன் அழகிய மாட மாளிகை முதலான வாழ்வுகளாகிய சம்பத்தெல்லாம் சதமென நினைந்து அதிற் சென்றுழன்று சிக்கிக்கொண்டிருப்பதானது, அம் கார் அதனில் மின்னல் எழல்போலும் — (இந்த ஈஷணத்திரயங்களெல்லாம்) நீருண்ட மேகத்தினிடத்தில் தோன்றி மறையும் மின்னல்போல அழியக்கூடிய பொருள்களேயாம், (ஆதலால் நீங்கள்) குமரன் தன் அலங்கு ஆர மலர்த்தாள் எஞ்ஞான்றும் தலைக் கொண்மின்—ஸ்ரீ குமாரக் கடவுளுடைய பிரகாசம்பொருந்திய தாமரை மலர்போலுந் திருவடிகளேயே எப்போதும் சிரமேற்கொள்வீர்களாக.

அதுவே அழிவிலாப் பரமானந்தசெல்வத்தை அருளும். 25)

கொண்டலைவாவி வெருட்டிக் கமுகின் குலையுதிர்த்துத்
தண்டலைவாவி தனில்வாளை மேவுந் தமிழ்ப்பழநி
வண்டலைவாவி கடமிடி தீர்திதி மைந்தர்வலி
கண்டலைவாவி பொருந்திமை யோரைமுன் காத்தவனே.

வாளை—வாளை மீனானது, கொண்டலை வாவி வெருட்டி—(வானிற் சஞ்சரிக்கின்ற) மேகத்தினிடத்திற் பாய்ந்துழக்கியோட்டியும் கமுகின் குலை உதிர்த்து—கமுக மரத்திலுள்ள பாக்குக் குலைகளை யுதிர்த்தும் தண்டலை வாவிதனில் மேவும்—சோலைகளிற் (பாய்ந்து கனிகளைச் சிந்தமோதியும்) மீண்டுங் குளத்தில் வந்து குதித்துலவுகின்ற நீர்வள மிகுந்த, தமிழ் பழநி வண் தலைவா—அமிழ்தினு மினிய தமிழ்மொழி வழங்கும் பழநிப்பதியில் வாழும் பரம கருணாநிதியாகிய இறைவனே, திதி மைந்தர் வலி கண்டு ஆவி அலைவு பொருந்து இமையோரை முன் காத்தவனே—திதியென்பவள் புதல்வர்களாகிய சூரபத்மன் முதலானவர்களுடைய பராக்கிரமத்தைக் கண்டு பயந்து உயிர் வருந்திச் (சரணாகதியடைந்த) தேவர்களை முற்காலத்தில் ரக்ஷித்தருளிய முருகக் கடவுளே, விகட மிடி தீர்—என்னைப் பலவித துன்பங்களுக்குள்ளாக்குந் தரித்திரத்தை நீக்கியருள்வாயாக. (26)

தவந்தானமல வினைகொண்டு காலந் தனைக்கழித்த
லவந்தானமல ரளிநாடல் போலும்பர் யாருமதிப்
பவந்தானமல னெனுங்கும ரேசன் பழநியென்று
முவந்தானமல மொழிப்பானைத் தேடி யுருகுநெஞ்சே.

நெஞ்சே—மனமே, தவம் தானம் அல வினை கொண்டு காலம் தனை கழித்தல் அவம்—புண்ணிய விரதந் தியாக முதலான புகழ் பெருஞ் சற் கர்மங்களையல்லாத விஷயங்களை அனுஷ்டித்துப் பொழுதைப் போக்குவது வீணேயாகும், (ஆதலால்) உம்பர் யாரும் மதிப்பவந்தான்—அரி பிரமேந்திராதி தேவர்களெல்லோரும் சிந்தித்துப் போற்றி வணங்கிட அவதரித்து வந்தருளியவரும், அமலன் எனும் குமரேசன்—மல ரகிதராய் விளங்கும் ஸ்ரீ குமாரக் கடவுளும், பழநி என்றும் உவந்தான்—பழநியம்பதியில் எப்போதும் அனவரத சாநித்யராய் விருப்பங்கொண்டு வாழ்பவரும், நம் மலம் ஒழிப்பானை—நம்முடைய ஆணவாதி மும்மலங்களை அகற்றுவோருமாகிய மெஞ்ஞான மூர்த்தியை, தான மலர் அளி நாடல் போல்—தேனுடைய மலர்களை வண்டுகள் தேடிச் செல்வதுபோல, (நீயும்) தேடி உருகு—ஆராய்ந்து அன்புகொண்டுருகித் துதித்து வணங்குவாயாக. (27)

உருவாரமர மனையா ருமை யுளத்துணரார்
தருவாரமர மகன்றாரைப் பாடித் தயங்குவனே
மருவாரமர வணிந்தசெவ் வேணி வரன்புதல்வா
திருவாரமர தளாதிப னேநற் செயலருளே.

மரு ஆர் அம் அரவு அணிந்த செவ்வேணி வரன் புதல்வா—வாசனை பொருந்திய ஆத்தி மலரையும் கங்கையையும் சர்ப்பத்தையும் அணிந்த சிவந்த சடாபாரத்தையுடைய சிவபெருமானது செல்வப் புதல்வனே, திரு வார் அமர தளாதிபனே—மகா மேன்மை வாய்ந்த தேவ சேனாபதியாய் விளங்கும் தெய்வமே, உருவாரம் மரம் அனையார்—மண் பிரதிமையையும் மரத்தாற் செய்த பதுமையையும் ஒத்தவர்களாயும், அருமை உளத்து உணரார்—(செய்யுட் பொருள்) அருமையைச் சிறிதும் அறியாதவர்களாயும், தரு வாரம் அரம் அகன்றாரை — ஈகை அன்பாகிய (உதார குணத்தை அதர்மமெனும்) அரத்தால் ராவி யகற்றிய லோபியர்களாயும் உள்ளவர்களைக் கண்டு, பாடி தயங்குவனே—புகழ்ந்து பாடி மனக்கவலை கொண்டலைவேனே, நல் செயல் அருள்—(இவ்வித இடறுற்றலையாமல் எனக்கு அருட் பெருஞ் செல்வத்தை அனுக்ரகிப்பாயாக. (28)

செயமந்தராசல வண்டோட் குகனைத் தினமறந்தம்
புயமந்தராசல னங்குழ லோப்பவர் புன்னலநம்
பியமந்தராசல நீங்கா வவர் திருப்பெற்றியெல்லா
நியமந்தராசல மேலாங் குமிழி நிலைத்தென்பவே.

செயமந்தராசல வள் தோள் குகனை தினம் மறந்து—வெற்றி பெற்று விளங்கும் மந்தரகிரியை யொத்த வலிய புயங்களையுடைய ஸ்ரீ குகப்பெருமானை அனுதினமும் (நினைந்து துதியாமல்) மறந்து, அம் புயம் அந்த ரா சலனம் குழல் ஒப்புவர் புல் நலம் நம்பிய மந்தர் ஆசு அலம் நீங்கா—தாமரை மலரையும் அந்தக் கரிய இருளையும் முறையே பாதத்திற்குங் கூந்தலுக்கும் உவமையாகக்கொண்ட பெண்களுடைய சிற்றின்ப சுகத்தையே நிலையென விரும்பிய அறிவீனர்களின் குற்றமும் மனோ சஞ்சலமும் ஒழிந்திடாது, (அன்றியும்) அவர் திரு பெற்றி எல்லாம் நியமம் தரா—அவர்களுடைய செல்வச் செருக்கின் பெருமையெல்லாம் நிச்சயத்தைக் கொடுக்கமாட்டாது, சலம் மேல் ஆம் குமிழி நிலைத்து என்ப—நீர்மேற் குமிழிபோல் அழியக்கூடிய நிலைமையே யாகுமென்க.

ஆதலால் மனமே அம் முருகக் கடவுளையே சதா நினைந்து வணங்கி அழிவிலாப் புகழை அடைவாயாக. (29)

பவராகவத்திரி பாசொழி யானும்பர் பற்றலரேன்
பவராகவத்திரி யத்தடிந் தானுற் பவந்தவிரின்
பவராகவத்திரி யாதி முனிவர் பணிகுகன்சு
பவராகவத்திரி யானுண் டேமக்கோர் பயமில்லையே.

பவர் ஆக அ திரிபு ஆசு ஒழியான்—பாவிகளுடைய சரீரத்தி லுண்டாகும் அவ்வேறுபாடுகளை விரைவில் நீக்கிடாதவரும், உம்பர் பற்றலர் என்பவர் ஆகவத்து இரிய தடிந்தான்—தேவர் களுக்குப் பகைவராயுள்ள சூரபத்மனாதி அசுரர்களைப் போர்க் களத்தில் புறங்காட்டி யோடிடக் கொன்றவரும், உற்பவம் தவிர் இன்ப அராக அத்திரியாதி முனிவர் பணி குகன்—பிறப்பினை யொழிக்கும் இன்ப சாதனமாகிய நிராசையையுடைய அத்திரி அங்கீரசர் கௌதமர் சமதக்கினி பரத்துவாசர் வசிஷ்டர் விசுவா மித்திரர் என்னும் சப்த முனிவர்களும் தியானித்து வணங்கு கின்ற குகனெனும் திருநாமத்தையுடையவரும், சுப வராக அத் திரியான் உண்டு—நன்மை மிக்கோங்கி விளங்கும் வராகமலைக்

கிறைவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுள் (என் குல தெய்வமாய்) இருப்பதால், எமக்கு ஓர் பயம் இல்லை—அடிமையாகிய எனக்கு யாதொரு பயமும் இல்லை என உறுதியாய்க் கூறுவேனாக. (30)

பயம்புவைப்பாரத் திகள்போன் மயலுட் படேல்சிரத்துந்
தியம்புவைப்பாரத் திருநுத னாட்டத் தினிலுதித்த
சுயம்புவைப்பாரத் தனையுந்தந் தானைத் தொழுதுதமி
ழியம்புவைப்பாரத் தனிவேன் மயிலையு மெண்ணுநெஞ்சே.

நெஞ்சே—மனமே, பயம்பு வைப்பு ஆர் அத்திகள் போல் மயல் உள் படேல்—கொப்பத்தினிடத்தில் பட்டுக்கொண்டு வருந் தும் யானைகளைப்போல பிரபஞ்ச இச்சையாகிய மயக்கத்தினுள் அகப்பட்டுக்கொள்ளாமல், உந்தி அம்பு சிரத்து வைப்பார் அ திரு நுதல் நாட்டத்தினில் உதித்த சுயம்புவை—சுழிந்து செல் லும் கங்கா நதியை சிரசின்மீது வைத்தவராகிய சிவபெருமா னுடைய அந்த அழகிய நெற்றிக்கண்ணிலே அவதரித்தருளிய தனி முதற் கடவுளும், பார் அத்தனையும் தந்தானை — (முன்னொரு காலத்தில் பிரமனைச் சிறையில் வைத்து) உலகங்களையெல்லாம் சிருஷ்டித்தருளியவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளை, தொழுது தமிழ் இயம்பு—வணங்கி (ஆன்றோர்கள் கூறிய) தமிழ்ப் பாசுரங் களைத் துதி செய், வை பார தனி வேல் மயிலையும் எண்ணு— (அன்றியும் அப்பெருமானின்) கூர்மை வாய்ந்த நெடிய ஒப்பற்ற வேலாயுதத்தையும் மயில் வாகனத்தையும் சிந்தனை செய்வாயாக. (31)

செஞ்சகத்தானந்த நீப முளான்கரி நீள்வதன
வஞ்சகத்தானந்த வான்புகத் தாக்கு மயிற்குமரன்
விஞ்சகத்தானந்த மெய்யடி யாரை விடானைமறந்
தஞ்சகத்தானந்த னந்தவர்க் கீந்துமென் னுவதுவே.

(உலகீர்காள்)

நெஞ்சகத்து ஆனந்த நீபம் உளான்—மார்பினிடத்தில் இனி மையான மணங் கமழுகின்ற கடம்ப மலர்மாலையை அணிந்துள்ள வரும், கரி நீள் வதன வஞ்சகத்தான் அந்த வான் புக தாக்கும் அயில் குமரன்—யானையினது நீண்ட முகத்தையுடைய கபடங் கொண்ட தாருகாசுரனாத்மாவானது அந்த மகா உன்னதமாக விளங்கும் கைலாசகிரியிலுள்ள நந்திகேஸ்வரனிடத்தடையும்படி (அவ்வசுரனை) மோதிக் கொன்றருளிய வேலினைத்தாங்கிய

ஸ்ரீ குமாரக் கடவுளும், விஞ்சு அகத்தால் நந்த மெய்யடியாரை விடானை மறந்து—மிகுந்த பாவ கர்மங்களிற் சிக்கி கெடும்படி சத்திய விரதசீலத் தொண்டர்களை விடாதவருமாகிய சண்முகப் பெருமானை நினையாமல், அம் சகம் தானம் தனம் தவர்க்கு ஈந்தும் ஆவது என்—அழகிய இப்பூமியின் கண்ணே தானமாக பொன் முதலான பொருள்களைத் தபோதனர்களுக்குக் கொடுப்பதினாலே அடையக்கூடிய பிரயோசனம் யாது.

'மயிற் குமரன்' என்பதற்கு மயில்வாகனத்தையுடைய குமாரக் கடவுள் எனவும் கூறலாம். (32)

ஆவலரும்பணி மென்னகை மங்கைய ராடவந்து
மேவலரும்பணி செல்வரும் போன்றினர் வீணதன்றோ
நீவலரும்பணி லஞ்சூழ் வயற்பழ நிக்குமரன்
பூவலரும்பணி மார்பன் கழற்கன்பு பூண்மனமே.

மனமே—மனதே, ஆவல் அரும்பு அணி மெல் நகை மங்கையர் ஆட—விரும்பத்தக்க முல்லை யரும்பின் வரிசைபோன்ற மெல்லிய (சிறிய)பற்களையுடைய பெண்கள் (வந்து) நடனஞ் செய்யவும், மேவலரும் வந்து பணி செல் வரும் போன்றினர்—பகைவர்களும் வந்து வணங்கிடும் ஆற்றல் வாய்ந்த ராசரீகப் பெருஞ் செல்வத்தையுடையவர்களும் இறந்தொழிந்தனர் என்றால், அது வீண் அன்றோ—அதுவெல்லாம் பிரயோசனமற்றதல்லவோ, நீ அலரும் பணிலம் வயல்சூழ் பழநி குமரன் — (ஆதலால் மனமே) நீயும் சப்திக்கின்ற சங்கினங்கள் சூழ்ந்துலவும் நீர்வளமிக்க வயல்களையுடைய பழநியம்பதியில் வாழும் குமாரக் கடவுளும், அலரும் பூ பணி மார்பன் கழற்கு அன்பு பூண்—மணங்கமழ மலர்ந்த புஷ்ப மாலையுடன் ரத்ன கசித சுவர்ணபரணங்களையும் அணிந்து விளங்காநின்ற மார்பினையுடையவருமாகிய ஸ்ரீ முருகப்பெருமானது திருவடிகளினிடத்து அன்பு கொள்வாயாக.

அதுவேதான் பேரின்ப நிலையை அருளும். (33)

பூண்டவிராதவ மாமுலை மங்கையர் போகமென
மூண்டவிராதவ வன்ப ரிதய முளரிவிள்ள
வாண்டவிராதவ னுங்கும ரேசனை யன்பினோடு
வேண்டவிராதவ மாசேளி தாமுயர் மெய்க்கதியே.

அன்பர் — மெய்யடியார்களுக்கு, பூண் தவிராத அம் மா முலை மங்கையர் போகம் என மூண்டு அவி ராதவ—ஆபரணங்கள்

அகலாது விளங்கும் அழகிய பருத்த தனேபாரங்களேயுடைய பெண்களின் சிற்றின்பமே (கதி) என முயன்று அழிந்திடச் செய்யும் அஞ்ஞான இருளானது கெட்டொழியவும், இதய முளரி விள்ள—(அவர்களின்) இருதய தாமரை விகசிக்கவும், ஆண்டு அவிர் ஆதவன் ஆம் குமரேசனே—அவ்விடத்தில் விரிந்த கிரணப் பிரகாச ஞான சூரியனுகத் தோன்றி விளங்கும் ஸ்ரீ குமாரக் கடவுளே, அன்பினெடு வேண்ட — (மனமே நீ) விருப்பத்துடன் பிரார்த்திப்பாயாகில் தவ மாசு இரா—நீ செய்யும் புண்ணிய தவ விரதாதி சத் கர்மங்களில் யாதொரு குற்றமும் சம்பவியாது, உயர் மெய் கதி எளிதாம்—மேலான நித்யானந்த பதவியையும் எளிதில் அடைவாய். (34)

கதித்தவரும்பரல் வேங்கான் புகுதக்கை கேசிசொற்சம்
மதித்தவரும்பர கோர மறலி மயக்கிகந்த
விதித்தவரும்பர வுங்கும ராவன்பர் மெய்ப்பிணிதீ
துதித்தவரும்பர நாதாமெஞ் ஞான சுகமருளே.

கதித்தவரும்-சிறந்த பெருஞ் செல்வ சம்பன்ன சீலர்களும், பரல் வெம் கான் புகுத கைகேசி சொல் சம்மதித்தவர்—பருக்கைக் சற்களேயுடைய கொடிய கானகத்தினுட் செல்வதற்கு சிறிய தாயாராகிய கைகேசி உத்திரவுக்கிணங்கிய ஸ்ரீ ராமாவதாரங் கொண்ட விஷ்ணுமூர்த்தியும், உம்பர்—பிரமேந்திராதி தேவர்களும், அகோர மறலி மயக்கு இகந்த விதி தவரும்—குரூரத்தையுடைய கூற்றுவனு லடையும் மயக்க வாதனேயற்ற நித்யாத்மாக்களாகிய தபோதனர்களும், பரவும் குமரா—துதித்து வணங்கும் ஸ்ரீ குமாரக் கடவுளே, அன்பர் மெய் பிணி தீது தித்த வரும் பர நாதா—மெய்யடியார்கள் தேகத்தில் நோய் முதலான குற்றங்கள் அணுகாமல் திருந்தி வாழ்ந்திட வந்தருளிய சர்வோத்கிருஷ்டமாக விளங்கும் இறைவனே, மெய் ஞான சுகம் அருள் — (அடியேனுக்கு) உண்மை யறிவானந்த கதியை அருள்வாயாக. (35)

சுகந்தங்கமழ முகையவிழ் கற்பகத் தூயநிழ
லகந்தங்கமழ களிற்றிந் திரனைவைத் தாயதிபா
தகந்தங்கமழ கியமாதர்க் காகநெஞ் சத்தேணிட்போய்
யுகந்தங்கமழ லுருதேனே யாண்டரு ளுத்தமனே.

உத்தமனே—மாயாதீதமாய் விளங்கும் சாமியே, சுகந்தம் கமழ முகை அவிழ் கற்பக தூய நிழல் அகம் தங்க—நறுமணங்

கமழ்ந்து வீச அரும்பு விரிந்த புட்பங்களையுடைய கற்பகத் தருவின் பரிசுத்தமான நிழலின்கண் இருந்து வாழும்படிக்கு, மழகளிற்று இந்திரனை வைத்தாய்-இளமை வாய்ந்த வெள்ளையானைக்கிறைவனாகிய தேவேந்திரனை (சூரபத்மனா லடைந்த துன்பத்தினின்றும் நீக்கி)க் குடியேற்றி வைத்தருளிய தயாநிதியே, அழகிய மாதர்க்காக தங்கம் நெஞ்சத்து எண்ணி—(மையலை யுண்டாக்குகின்ற) அழகிய பெண்களுக்காக செம்பொன் திரவியம் தேடச் சிந்தையிற் கருதி, அதி பாதகம் பொய் உகந்து—மிகுந்த துரோகஞ் செய்யவும் பொய் பேசவும் விருப்பங்கொண்டு, அங்கம் அழல் உறுது எனை ஆண்டருள்—(இவ்வுலகிலே அலைந்து வருந்தி உயிரிழந்து) எனது உடலம் தீயினால் தகிக்கப்படாத வண்ணம் (அடிமையை) தடுத்தாட்கொண்டருள வேண்டுகிறேன். (36)

மனத்திருக்கானவை வாராநன் முத்தி வழிவருஞ்சந்
தனத்திருக்கானவை தீகமெய்ஞ் ஞானத் தமிழ்முனிசெஞ்
சொனத்திருக்கானவை தீரும் படிபுகழ் தூயவன்போய்
யினத்திருக்கானவை வானோர் தலைவனை யெண்ணுமினே.

(உலகீர்காள்)

சந்தன திரு கான வைதீக மெய்ஞ்ஞான தமிழ் முனி செம்சொல் நத்தி—சந்தன விருக்ஷங்களின் அழகிய சோலையையுடைய (பொதியமலையிலே வாழும்) வேதநெறி முறையுள்ள தத்துவ ஞான தவசிரேஷ்டராகிய அகஸ்திய முனிவர் (சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளப் பெற்றுக்கொண்டவாறு) கூறிய செந்தமிழ் மொழியை ஆதரித்து, ருக்கால் நவை தீரும்படி புகழ் தூயவன்—இருக்குவேத சாரமாகிய தேவாரப் பதிகத்தை (திருஞானசம்பந்த மூர்த்தியென உலகில் வந்து சைவ சமயத்திற்குச் சமணர்களால் நேர்ந்த) தீமை அகலும்படியாகப் பாடியருளிய புண்ணிய புனித மூர்த்தியும், பொய் இனத்து இருக்கான்—அசத்தியர்களிடத்தில் ஒரு கணப்பொழுதேனும் தங்கியிருக்காதவரும், வானோர் அவை தலைவனை எண்ணுமின்—அரி பிரமேந்திராதி தேவர்களின் சபாநாயகராயுடையவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளை சிந்தித்து வணங்குமின், மன திருக்கு ஆனவை வாரா நல் முத்தி வழி வரும்—மனமயக்கமாகிய குற்றங்களை நீங்கள் அடையாமல் மேலான மோக்ஷம் பெறுவதற்குரிய சாதனங்களை அடைவீர்கள். (37)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல்வரிசை எண்: 2329
... காமராசர் ... அவ்வை ... சண்முகம் ...

மின்னகரிக லருந்தவத் தோரு மிகமயங்கப்
பன்னுகரிக வுளமுதற் கீதம் பயிலுநல்லா
ரின்னுகரிக மறக்குங்கண் டீர்சகத் தீர்மலர்த்தார்
மன்னுகரிக பரந்தரு வேலர் வரம்பெறினே.

சகத்தீர்—உலகீர்காள், மலர் தார் மன்னு ஆகர்—புஷ்பமாலைகளை யணிந்து விளங்காநின்ற மார்பினையுடையவரும், இகம் பரம் தரும் வேலர் வரம் பெறின்—வழிபடும் தொண்டர்களுக்கு இக பர லோகங்களில் இன்ப வாழ்க்கையைத் தந்தருளுகின்ற வேலாயுதத்தையுடையவருமாகிய ஸ்ரீ குமாரக்கடவுளின் அனுக்ரகத்தை அடையப்பெற்றால், மின் நாகர்—(கந்தருவ கானத்தில் களிப்படைந்திருக்கும்) ஒளி கொண்ட பொன்னகரத்துள்ள இந்திராதி தேவர்களும், இகல் அரும் தவத்தோரும் மிக மயங்க—காமம் வெகுளி மயக்க மென்னு முக்குற்றங்களையும் வென்ற அரிய தபோதனர்களும் கேட்டவுடன் அதி ப்ரமைகொள்ளும்படியாக, பன்னு ஆகரி கவுளம் முதல் கீதம் பயிலும் நல்லாரின்—இசைநூலில் சொல்லப்பட்ட ஆகரி கவுளம் முதலான ராகங்களை (சுதி லய முறையில்) இனிமையாய்ப் பாடிடும் பெண்களுடைய, நாகரிகம் மறக்கும் கண்டீர்—கலவி விநோதங்களின் நினைவற்றிடும். இதனை ப்ரத்யக்ஷமாய்த் தெரிவீர்கள். (38)

வரம்பினத்தோடு மதுரா புரியில் வழுதியர்கோன்
சுரம்பினத்தோடு தவிர்த்தமெய் யாதொண்டர் தூய்மனத்தா
தரம்பினத்தோடு மினமன்று ளாடிய சம்புமைந்தா
நிரம்பினத்தோடு விரிகடம் பாசர ணின்பதமே.

வரம்பில் நத்து ஓடு மதுராபுரியில்—வயலின் வரம்புகளில் சங்கினங்கள் சஞ்சரிக்கும் வளமிக்க மதுரைமா நகரில், வழுதியர் கோன் சுரம் பின்னத்தோடு தவிர்த்த மெய்யா—பாண்டியராசனுடைய சுர நோயை (திருஞான சம்பந்த மூர்த்தியென வந்து திருநீற்றினால்) அவன் சரீரத்தேற்பட்டுள்ள கூனொடும் நீக்கியருளிய மெய்ஞ்ஞான தேய்வமே, தொண்டர் தூய் மனத்து ஆதரம் பின்ன தோடு மின்ன மன்றுள் ஆடிய சம்பு மைந்தா—பதஞ்சலி வியாக்ர பாத முனிவர்களுடைய பரிசுத்த மனத்தின்கண்ணே அன்பு மிகப் பெருகவும் செவியில் தோடு எனும் அணி பிரகாசிக்கவும் கனக சபையிலே திருநடனஞ் செய்த சிவபெருமானுடைய புதல்வரே, நிரம்பின தோடு விரி கடம்பா நின் பதமே சரண்—நிறைந்த இதழ்கள் விரிந்த கடம்ப மலர் மாலையை அணிந்து

விளங்கும் ஸ்ரீ குமாரக் கடவுளே உனது திருவடிகளையே தஞ்ச மாக அடைந்தேன் ரக்ஷித்தருள்வாயாக. (39)

பதனம்பதனந் தளரிடை யென்னப் பணைத்தோளிர்கும்
பதனம்பதனந் துருமதுச் சொற்பர னைப்பொருச
பதனம்பதனந் தரமாங்க ணுள்ளவர் பற்றறவேள்
பதனம்பதனந் தருஞான மோன பலநெஞ்சமே.

நெஞ்சமே—மனமே, தளர் இடை பதனம் பதனம் என்ன பணைத்து ஒளிர் கும்ப தனம்—மெல்லிய இடையைச் சூதானம் சூதானம் என்று சொல்லும்படியாக பருத்து விளங்கும் குடத்தினை நிகர்த்த கொங்கைகளையும், பதம் நந்துரு மது சொல்—பக்குவங் கெடாத தேனைப்போலு மினிய சொல்லையும், பரனை பொரு சபதன் அம்பு அதன் அம் தரமாம் கண் உள்ளவர் பற்று அற-(பிரமனுக்கி னைக்குப் பயந்து சம்மதமின்றி)ப் பரமனிடத்தில் அமர் செய்வதாகச் சபதங் கூறிச் சென்ற மன்மதன் பாணங்களின் அந்தக் கருங் குவளையை நிகர்த்த கண்களுமுடைய பெண்களின் இச்சை யொழிவதற்கு, வேள் பதம் நம்பு—செவ்வேட் பெருமான் திருவடிகளையே விரும்பித் துதித்திடுவாயாக, ஞான மோன பலம் அதனம் தரும்—மெஞ்ஞான முடிவாயுள்ள மகா மவுன நிலையெனும் பேரின்பப் பேற்றைப் பூரணமாய் தந்தருளுமென்க. (40)

பலவாமகத்துவந் தோங்கு மயக்கவை பாரவினை
கலவாமகத்துவந் தங்குமெய்ஞ் ஞானக் கதியருள்சொற்
புலவாமகத்துவந் தெல்லாம் பெறுமப் புனிதர்புகழ்
வலவாமகத்துவந் தன்ன நடைத்தகர் வாகனனே.

சொல் புலவா—சிறப்பித்து யாவராலும் புகழாநின்ற தெய்வப் புலவரெனுந் திருநாமத்தையுடையவனே, மகத்து வந்து எல்லாம் பெறும் அ புனிதர் புகழ் வலவா—(மந்திரோபதேசம் கேட்டுக்கொள்வதற்குரிய சிறந்த நாளாகிய) மாசி மக நட்சத்திரத்தில் வந்து பிரணவத்தின் உண்மைப் பொருளையெல்லாம் தேவரீர் உபதேசிக்க பெற்றுக்கொண்ட மலரகிதராகிய சிவபெருமான் புகழ்ந்து கொண்டாடும் சர்வ சக்தி வாய்ந்த பரம ஞான தேசிகனே, மகத்து வந்து அன்ன நடை தகர் வாகனனே—(நாரதர் செய்த) வேள்வியிற் றோன்றிக் காற்றினும் விரைந்து நடக்கின்ற வலிமை பெற்ற ஆட்டுக்கடா வாகனத்தை யுடையவனே, பல வாய் அகத்து உவந்து ஓங்கும் மயக்கு அவை--பல்வகைப்பட்ட

அநித்யப் பொருள்களை மனதிலிச்சித்து ஓங்கும் மயக்கங்களும், பார வினை கலவா—மிகுந்த ஊழ்வினைத் தொடர்பின் செயல்களும் (என்னைச்) சேராத வண்ணம், மகத்துவம் தங்கும் மெய்ஞ் ஞான கதி அருள்—சர்வோற் கிருஷ்டமான உண்மை ஞானப் பலப் பிராப்தியாகிய சாயுச்சிய பதவியை தந்தருள்வீராக. (41)

வாகாதுவருமங் கோவ்வாத மேனி வரன்றருமைந்
தாகாதுவருமங் காக்குழை யாயினந் தாமதமேன்
ஆகாதுவருமங் கேகய மீதுவந் தாரருள்செய்
தேகாதுவருமங் குற்குழ லாரன்பு தீர்த்தேன்றுமே.

வாகா—திவ்யாலங்கிர்த சொரூபனே, துவரும் அங்கு ஒவ்வாத மேனி வரன் தரு மைந்தா—சிவந்த பவளமும் அவ்விடத் திணையாகாத திருமேனியை யுடைய பரமேஸ்வரன் தந்தருளிய புதல்வனே, காது வரும் மங்கா குழையாய்—செவிகளிற் பொருந்தியுள்ள (கோடி சூர்ய ப்ரகாசமாக) கெடாது விளங்கும் குண்டலங்களையுடையவனே. இனம் தாமதம் ஏன் - (அடிமையை யாட் கொள்ள) இன்னமும் தாமதம் செய்வதின் காரணம் யாது, வருமம் ஆகாது—(திருவுள்ளத்தில்) வைராக்கியம் கொள்ளலாகாது, கேகயம் மீது வந்து ஆர் அருள் செய்தே—(ஆதலால் தேவரீர்) மயில் வாகனத்தில் ஆரோகணித்துவந்து நிறைந்த பெருங் கருணையைப் பாலித்து, துவ் அரு மங்குல் குழலார் அன்பு தீர்த்து என்றுமே கா—நீருண்டிருண்ட அரிய மேகத்தை யொத்த கரிய கூந்தலையுடைய பெண்களின் இச்சையை அறவே யொழித்து எப்பொழுதுமே என்னைக் காத்தருள்வாயாக. (42)

தீர்த்தமனந்தர மானத லம்பல சென்றிடினுங்
கூர்த்தமனந்தர முண்டாகு மோகதி கூடவென்றூற்
கார்த்தமனந்தர தத்துதிப் பானெனக் காய்ந்தமனைப்
பார்த்தமனந்தர ரேத்துங் குமரனைப் பாடுமினே.

(உலகீர்காள்)

பலதீர்த்தம் அனந்தரம் ஆன தலம் சென்றிடினும்—அனேக தீர்த்தங்களுக்கும் மேன்மையான க்ஷேத்திரங்களுக்கு (முறையே) மூழ்கவும் தெரிசிக்கவும் போனாலும், கூர்த்த மனம் தரம் உண்டாகுமோ—ஏஷணாத்திரயங்களில் இச்சை மிகுந்துழலும் (உங்கள்) மனமானது நன்னிலையை அடையுமோ, கதி கூட என்றால்—ஆத

லால் அருட்பெருஞ் செல்வத்தை அடையவேண்டுமேயானால், கார் தமம் நந்த ரதத்து உதிப்பான் என்ன காய்ந்த மனை பார்த்த மன்—கரிய இருள் கெட்டிடத் தேரிற் கதிரவன் இயல்பாய்த் தோன்றுவான் (அதனால் மாண்டவ்ய முனிவர் சாபப்படி மாங் கல்ய மிழக்க நேரிடுமே என நினைத்து அச்சாப நிவாரணம்வரை சூரியன் உதியாதிருக்கக்) கோபித்துச் சபித்தவளாகிய நளாயி னியே வந்து மற்றொரு காரணத்தால் அக்கினியிற் பிறந்திடுந் துரோபதையை மனைவியாகக்கொண்ட அருச்சுனனும், அந்தரர்—தேவர்களும், ஏத்தும் குமரனை பாடுமின்—துதித்து வணங்கிடும் ஸ்ரீ சண்முகப் பெருமானைத் தோத்திரஞ் செய்வீர்களாக. (43)

பாடலங்காத வழிமணங் காட்டும் பழநிமுத
னீடலங்காத னெறிமறை யெங்கு நிறைகுகனைக்
கேடலங்காத மனத்துட்கோண் டார்பவக் கேதமிப்பார்
மூடலங்காத வனைக்கண்ட தென்ன முடிவுறுமே.

பாடலம் காத வழி மணம் காட்டும் பழநி முதல் நீள் தலம்—பாதிரிப் புஷ்பங்கள் ஓர் காதவழிதூரம் வாசனையை வீசுகின்ற பழநியம்பதி முதலான ஆறு திருப்படை வீட்டு க்ஷேத்திரங்களி டத்தும், காதல் நெறி மறை எங்கும் நிறை குகனை—விரும்பத் தக்க தர்ம நீதி முறைகளைக் கூறும் வேதங்களின் முதல் நடு முடி யில் அந்தர்யாமியாய் வியாபித்திருப்பவருமாகிய ஸ்ரீ குகப்பெரு மானை, கேடு அலங்காத மனத்துள் கொண்டார் பவ கேதம்—கெடுதி சிறிதும் விளங்காத சிந்தையினுள் அமையத் தியானிப்ப வர்களின் பிறவித் துன்பமானது, இ பார் மூடு அல் அங்கு ஆத வனை கண்டது என்ன முடிவு உறும்—இப்பூமியை மூடி மறைத் திடும் இருளானது அவ்விடத்து உதயகிரியிற் றோன்றுஞ் சூரிய னைக் கண்டவுடன் அழிந்துபோவதுபோல நீங்கிப்போய்விடு மென்க.

ஆதலால் மனமே நீயும் அக்கருணாநிதியாகிய குகப்பெருமா னின் திருவடியைக் குறித்துத் தியானிப்பாயாக. (44)

முடிக்குமராம மலர்க்குழல் வேழ முதல்வியென்ப
வடிக்குமராம னுலகும் பணிவள்ளி யென்னுமிரு
குடிக்குமராம துவையுண்டு வண்டினங் கூடியிசை
படிக்குமராம லணிபுய னேகின் பதமருளே.

அராம மலர் முடிக்கும் குழல் வேழ முதல்வி என்பவள்—கற்பகச் சோலையிலுள்ள புஷ்பங்களை அணிந்திடுங் கூந்தலையுடைய

தெய்வானை நாயகியென்பவளும், திக்கும் அரா மன் உலகும் பணி வள்ளி என்னும் இரு குடி குமரா—எண்டிசைகள் சூழப் பெற்ற மண்டலத்தோர்களுடன் பாம்பரசனுக்குரிய பாதலவாசி களும் வணங்குகின்ற வள்ளிநாச்சி யென்பவளுமாகிய இரண்டு மனைவிகளையுடைய குமாரக் கடவுளே, மதுவை உண்டு வண்டு இனம் கூடி இசை படிக்கும் மரா அணி மல் புய[illegible]—தேனை யுண்டு சுரும்பினங்கள் சேர்ந்து இன்னிசையாய் ரீங்காரம் செய் யும் கடம்பமலர் மாலையைப் புனைந்த வலிய புயங்களையுடைய வனே, நின்பதம் அருள்—நினது திருவடி யின்பப் பேற்றை அடி மைக்கு அருள்வாயாக. (45)

பதக்கமலங்க வளர்மார்ப னேதண் பணைதொறுமுச்
சிதக்கமலங்க டனைமேய்ந்து காவியைச் சேவினம்வாய்
குதக்கமலங்க துறங்கும் பழநிக் குருபரதீ
துதக்கமலங்க வலைதவிர்த் தாண்மெய்த்து ணிவுதந்தே.

பதக்கம் அலங்க வளர் மார்பனே — இரத்தினங்க ளமைந்த பொற் பதக்கம் விளங்க நிமிர்ந்த அழகிய மார்பை யுடையவனே, தண் பணை தொறும் உச்சித கமலங்கள் தனை சே இனம் மேய்ந்து காவியை வாய் குதக்க—குளிர்ந்த வயல்கடோறுமுள்ள அழகிய தாமரை மலர்களைப் பசுவின் கூட்டங்கள் மேய்ந்தும் குவளை மலர்களைக் கடித்து வாயு தப்பிட, மலங்கு அது உறங்கும் பழநி குரு பர—அங்கே மலங்குமீன் உறங்குகின்றதாயுமுள்ள நிறைந்த நீர்வளமிக்க பழநிப்பதியில் வாழும் பரம தேசிகனே, தீது தக்கு அம் மலம் கவலை தவிர்த்து மெய் துணிவு தந்து ஆள்—தீமை தங் கிய அவ்வாணவாதி மும்மலங்களாலுண்டாகும் கிலேசத்தை நீக்கி உண்மைப் பொருளையுணரும் திட ஞானத்தைக் கொடுத்து ஆட் கொண்டருள்வாயாக. (46)

தந்திக்குமார முடியிமை யோர்க்குமச் சந்தணித்தோன்
உந்திக்குமார னுறுசிறை நீத்த வுனக்கரிதோ
முந்திக்குமார னமர்கடந் தோங்கு முனிவருளஞ்
சிந்திக்குமார முதமே யெனக்கருள் செய்வதுவே.

முந்து இக்கு மாரன் அமர் கடந்து ஓங்கும் முனிவர்—முற் பட வந்து கரும்பு வில்லையுடைய மன்மதன் செய்யும் காமப் போரை வென்றுயர்ந்தோராகிய தபோதனர்கள், உளம் சிந்திக் கும் ஆர் அமுதமே—மனதிற் றியானிக்கும் பரமாமிர்த திவ்ய

சொரூபனே, தந்திக்கும் ஆரம் முடி இமையோர்க்கும் அச்சம் தணித்தோன்—கஜேந்திரனென்னும் யானைக்கும் மாலையை யணிந்த கிரீடத்தையுடைய இந்திராதி தேவர்களுக்கும் முறையே முதலையினாலும் இராக்ஷதர்களாலும் ஏற்பட்ட பயத்தை நீக்கிய வரான விஷ்ணுமூர்த்தியின், உந்தி குமாரன் உறு சிறை நீத்த உனக்கு—உந்திக் கமலத்திலுதித்த மைந்தனாகிய பிரமன் (பிரண வப் பொருளை அறியா வகையால்) அடைந்த சிறையை (சிவபெ ருமான் வேண்டுதற் கிணங்கி) விடுத்தருளிய தேவரீருக்கு, எனக்கு அருள் செய்வது அரிதோ—அடிமையாகிய எனக்கு திருவருள் பாலிப்பதென்பது முடியாத விஷயமோ.

எளிதிலாகுமென்பது குறிப்பு. (47)

செய்யவடங்கவி மார்ப னயனிந் திரனுவப்ப
வெய்யவடங்கவி புன்மனத் தானவர் வீடவன்பர்
உய்யவடங்கவி ரூபஞ் சரவணத் தூடுதித்த
துய்யவடங்கவி னார்முலை மாதர் துறவருளே.

செய்யவள் தங்கு அவி மார்பன் அயன் இந்திரன் உவப்ப—மகாலக்ஷிமி வசிக்கும் மலைபோல் விளங்கும் மார்பினையுடைய திருமாலும், பிரமனும், தேவேந்திரனும் மகிழ்ச்சி கொள்ளவும், வெய்ய அடம் கவி புல் மன தானவர் வீட—கொடிய வன்மங் கொண்ட அற்பப் புத்தியையுடைய சூரபத்மனாதி அவுணர்க ளெல்லாம் மரணத்தையடையவும், அன்பர் உய்ய — மெய்யடி யார்கள் பரம சுகத்தில் வாழவும், அவி அடங்கு ரூபம் சரவ ணத்து ஊடு உதித்த துய்ய—அனந்தகோடி சூரியப் பிரகாசமும் அடங்கத்தக்க திவ்ய தேசோமய சொரூபமாகச் சரவணப் பொய் கையின் கண்ணே தோன்றியருளிய சர்வ கர்த்தத்துவ பரிசுத்த மூர்த்தியே, வடம் கவின் ஆர் முலை மாதர் துறவு அருள் முத்து வடங்களைப் பூண்டழகு பொருந்திய கொங்கைகளையுடைய மங் கையர்களிடத்திற் செல்லும் இச்சையை நீக்கியருள்வாயாக. (48)

துறக்கவரம்பயர் போகநன் றேன்னினுந் தூயருள
மிறக்கவரம்பயர் கட்பார்மின் னார்பற் றெனினுமதை
மறக்கவரம்பய னாக வெனக்கருள் வார்செழுங்கன்
னறக்கவரம்பயல் சூழ்பழ னாபுரி நாயகனே.

வார் செழும் கன்னல் தக்க வரம்பு அயல் சூழ் பழனாபுரி நாயகனே—நீண்டு செழித்த கரும்புகள் விளைந்திருக்கின்ற தகுதி

வாய்ந்த வரம்புகளமைந்த வயல்கள் பக்கங்களில் சூழப்பெற்ற வளமிக்க பழநிப்பதியில் வீற்றிருந்தருளும் இறைவனே, துறக்க அரம்பையர் போகம் நன்று எனினும்—(பரலோக சுக போகங் களில் ஒன்றாகிய) சுவர்க்கலோகத்திலுள்ள தெய்வப் பெண்களின் இன்ப நுகர்ச்சி நலமெனக் கூறியிருப்பினும், தூயர் உளம் இற கவர் அம்பு அயர் கண் பார் மின்னார் பற்று எனினும்—(இக லோக வாழ்க்கை யின்பங்களில் ஒன்றாகிய) முனிவர்களுடைய மனோ திடமுங் கெடக் கவர்ந்திடும் கணைகளையுந் தளர்ந்திடச் செய்யுங் கண்களையுடைய இவ்வுலக மாதர்களின் சம்மந்தமெனி னும், அதை மறக்க வரம் பயனாக எனக்கு அருள்—அவ்வா றுள்ள இருவகை இன்பங்களையும் அறவே மறந்துவிட அடிமை யாகிய எனக்கு வரத்தின் பிரயோசனமாகிய திருவருட் பேற்றை அனுக்கிரகஞ் செய்வாயாக. (49)

கனவஞ்சனஞ்சின மன்னவோன் னார்புறங் கண்டவெங்க
கனவஞ்சனஞ்சின மில்வாழ்வும் பெற்றவர் காலமுமோர்
கனவஞ்சனஞ்சின முற்றகண் ணார்சுகங் காட்டுமின்வா
கனவஞ்சனஞ்சின கைக்கும ராநின் கழலருளே.

வாகன அஞ்சன் அஞ்சின கை குமரா—வாகனமாக அன் னப் பக்ஷியைக் கொண்ட (பிரணவப் பொருளை யறியாது மயங் கிய) பிரமதேவனை அஞ்சும்படி குட்டிய திருக் கரத்தையுடைய ஸ்ரீ குமாரக் கடவுளே, கன வஞ்ச நஞ்சு இனம் அன்ன ஒன்னார் புறங்கண்ட வெம் ககன—மிகுந்த வஞ்சகத்தையுடைய விஷத் திரளையொத்த பகைவர்களைத் தோல்வியுறச் செய்யும் விரும்பத் தக்க படை வீரர்களையும், அம் சனம் சினம் இல் வாழ்வும்—அழகிய சுற்றத்தார்களுடன் வெறுப்பிலாத பெருஞ் செல்வங்களை யும், பெற்றவர் காலமும் ஓர் கனவு—அடைந்த பெரிய அரசர்க ளாயுள்ளவர்களின் வாழ்நாளும் ஓர் சொர்ப்பனம்போல் அழியக் கூடிய பொய்யேயாம், அஞ்சனம் சின்னம் உற்ற கண்ணார் சுகம் மின் காட்டும்—அஞ்சன மை தீட்டிய அழகிய கண்களையுடைய பெண்களின் சிற்றின்பமானது மேகத்திற் றோன்றி விரைவில் மறையும் மின்னலைப்போலாகும், (ஆதலால் அடிமைக்கு) நின் கழல் அருள்—நித்யமாயுள்ள உனது திருவடி சாயுச்சியத்தைக் கொடுத்தருள்வாயாக. (50)

கழங்காடியன்ன நடையாரைக் கூடிவெங் கள்ளருந்தி
வழங்காடியன்ன குருவைநிந் தித்துயிர் மாய்த்தொழியார்
பழங்காடியன்ன யெனினுமுண் டின்னருள் பற்றுவரி
மிழங்காடியன்ன வநிகர்சேந் திற்குக வேடொண்டரே.

அன்னவம் நிகர் இமிழ் அங்காடி செந்தில் குக வேள் தொண்டர்—கடல்போற் சப்திக்கின்ற கடை வீதிகளையுடைய திருச்செந்தூரில் கோயில்கொண்டருளிய குகவேள் என்னுந் திருநாமங்களையுடைய குமாரக் கடவுளின் திருத்தொண்டர்களாயுள்ளவர்கள், கழங்கு ஆடி—சூது விளையாடியும், அன்ன நடையாரை கூடி — அன்னப்பக்ஷிபோலும் நடையையுடைய பெண்களை மோகித்துச் சேர்ந்தும், வெம் கள் அருந்தி—கொடுமையுள்ள கள் முதலான போதை வஸ்துக்களைக் குடித்தும், ஆடி அன்ன வழங்கு குருவை நிந்தித்து—கண்ணாடியானது தன்னுள் பெரிய வடிவங்களை அடக்கிக் காட்டுதல்போல சுருங்கிய சொல்லில் பெரும் பொருள் விளங்கிட எடுத்துக் கூறும் ஆசிரியனை யிகழ்ந்தும் உயிர் மாய்த்து ஒழியார்—உயிர் நீங்கி அழியாதவர்களாய், பழங் காடி அன்னம் எனினும் உண்டு இன் அருள் பற்றுவர்—பழைய புளி தண்ணீரிலுள்ள சோறுணுலும் புசித்து இனிய திருவருட் பெருஞ் சுகத்தையே சிந்தித்து வாழ்வார்கள். (51)

வேடுவரிக்கலை நேர்மனத் தோடேறி வெவ்வலைக்குள்
வாடுவரிக்கலை தப்புவ தென்ன மதிக்குநல்லோர்
நீடுவரிக்கலை மண்டலத் தாசை நெருக்ககன்று
கூடுவரிக்கலை செய்சூழ் பழநிக் குருவருளே.

வேடுவர் இ கல்லை நேர் மனத்தோடு எறி வெவ்வலைக்குள்—கிராதகர்கள் இக்கல்லையொத்த சித்தத்தோடு வீசாநின்ற கொடிய வலையினுள்ளே, வாடு வரிக்கலை தப்புவது என்ன—அகப்பட்டு வருந்தும் புள்ளிமானானது (தெய்வாதீனமாய் அவ்வலையினின்றும்) விடுபட்டகல்வதுபோல, மதிக்கும் நல்லோர்—உலகம் மதிக்கத்தக்க பேரறிவாளர்கள், நீடு உவரி கலை மண்டலத்து ஆசை நெருக்கு அகன்று—நீண்ட கடலை ஆடையாகவுடைய பிரபஞ்சத்தின் கண்ணுள்ள ஏஷணத்திரய இச்சாபந்த துன்பத்தினின்றும் நீங்கி, இக்கு அலை செய் சூழ் பழநி குரு அருள் கூடுவர்—கரும்புகள் விளைந்து அசைகின்ற கழனிகள் சூழ்ந்த பழநியம்பதியில் வீற்றிருந்தருளும் பரம தேசிகராகிய ஸ்ரீ சண்முகப் பெருமான் திருவருளைச் சேர்ந்துய்வார்கள். (52)

குருவருணத்துவர் மெல்லிதழ் வள்ளி கொழுநனங்கை
மருவருணத்துவ கைக்கோ மகன்சுதை வானவர்கந்
தருவருணத்துவ ளக்கட லேக்கடைந் தான்மருகன்
றிருவருணத்துவர் பேர்கூ றினும்பவத் தீதஞ்சுமே.

குரு வருணத்துவர் மெல் இதழ் வள்ளி கொழுநன்—சிவந்த நிறமுள்ள பவளம்போலும் மிருதுவான அதரத்தையுடைய வள்ளிநாச்சிக்கு நாயகரும், அம் கை மருவு அருணத்து உவகை கோ மகன்—அழகிய இடது கரத்திற் பொருந்திய மானிடத்து மகிழ்வைக் கொண்ட சிவபெருமானுடைய புதல்வரும், சுதைவானவர் கந்தருவர் உண்ண கடலே துவள கடைந்தான் மருகன்—அமிர்தத்தை இந்திராதி தேவர்களும் கந்தருவர்களும் அருந்தும் வண்ணம் பாற்கடலைக் கலங்கும்படி கடைந்த திருமாலின் மருகருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளின், திருவருள் நத்துவர் பேர் கூறினும் பவதீது அஞ்சும்—திருவருளைச் சதா விரும்பியிருக்கும் திருத்தொண்டர்களின் பெயரைப் புகன்றிடினும் பிறவித் தீமையானது பயந்தோடிவிடும் என்ப. (53)

அஞ்சுவர்க்கத்தலே நெஞ்சைத் திருத்தி யணிமகரந்
துஞ்சுவர்க்கத்தலே யாழி யனேயமெய்த் தூயவனுக்
குஞ்சுவர்க்கத்தலே வற்குமெட் டாத குமரனன்பு
விஞ்சுவர்க்கத்தலே மோனமுண் டாமெனும் வேதங்களே.

அஞ்சு வர்க்கத்து அலே நெஞ்சை திருத்தி—பஞ்சேந்திரிய வாயிலாக விடயங்களை நுகரும் புலன்களால் அலைப்புண்டுழலும் மனதை ஒழுக்க வசப்படுத்தி, அணி மகரம் துஞ்சு கத்து அலே உவர் ஆழி அனேய மெய் தூயவனுக்கும்—வரிசையாக மகர மீன்கள் உறங்கிடும் கத்துகின்ற அலைகளையுடைய உவர்க்கடல் போலும் திருமேனிகொண்ட புனிதரான திருமாலுக்கும், சுவர்க்க தலே வர்க்கும்—பொன்னகர்க்கிறைவனுகிய இந்திரனுக்கும், எட்டாத குமரன்—ஆராய்ந்தறிய முடியாத பரம ஞானப்பிரகாச சொரூபராய் விளங்கா நின்ற ஸ்ரீ குமாரக் கடவுளினிடத்தில், அன்பு விஞ்சு வர்க்கு—அன்பு மிகக்கொண்ட மெய்யடியார்களுக்கு, அ தலே மோனம் உண்டாம் எனும் வேதங்களே—அந்த முதன்மையான மகா மவுனத்தின் பிரயோசனமாகிய பேரின்பம் எளிதில் சித்திக்குமென வேதங்களே கூறுகின்றன; என்ப. (54)

தங்கச்சிலம்பகங் காநதி மைந்த தனத்திடைதோ
யுங்கச்சிலம்பகங் காட்டுமின் ஞரைவென் றோர்மதியு
மங்கச்சிலம்பகங் காரித்தெய் வோன்குடை மைதவழுந்
துங்கச்சிலம்பகங் காமுற்று ளோய்தள்ளேன் றோல்பவமே.

தங்க சிலம்ப—செம்பொற் சிலம்புகளை யணிந்த திருவடிகளை யுடையவனே, கங்கா நதி மைந்த—புண்ணிய கங்காநதியின் புதல்வனே, தனத்திடை தோயும் கச்சில் அம்பகம் காட்டும் மின்ஞரை—கொங்கையிற் பொருந்திய கச்சினிடத்தில் (காளையர்கள் காதலுறும்படி) கண்களைக் காட்டுகின்ற பெண்களின் சாமர்த்திய மாயா தந்திரங்களை, வென்றோர் மதியும் மங்க—செயித்தவர்களாகிய துறவிகளுடைய புத்தியும் மயங்கி மழுங்கிட, சில் அம்பு அகங்காரித்து எய்வோன் குடை மை தவழும்-(கருங்குவளை முதலான) சில கணைகளை கருவங் கொண்டெய்கின்ற மன்மதனுடைய குடையாகிய சந்திரனும் மேகங்களும் தவழுகின்றதாயுள்ள, துங்க சிலம்பு அகம் காமுற்றுளோய்—உயர்ந்த பருவதங்களினிடத்து விருப்பங்கொண்டு வாழும் ஸ்ரீ குமாரக் கடவுளே, என் தொல் பவம் தள்ளு—என்னுடைய ஊழ்வினைத் தொடர்பால் வந்த பிறவியை நீக்கியருள்வாயாக. (55)

பவர்க்கஞ்சமர விழிமாதர் பற்றறும் பற்பலபே
தவர்க்கஞ்சமர சமதாமெய்ஞ் ஞானத் தவம்பலிக்குந்
துவர்க்கஞ்சமர மதுசூழ் பழநிச் சுகபரன்று
னவர்க்கஞ்சமர ரிடர்தீர்த்த வேள்பத நம்புவர்க்கே.

துவர் கஞ்சம் மரபு அது சூழ் பழநி சுகபரன்—சிவந்த தாமரை மலர்களின் கூட்டங்கள் சூழ்ந்திருக்கின்ற நீர்வளமிக்க பழநியம்பதியில் வாழும் பரமானந்த சொரூபராக விளங்கும் இறைவனும், தான வர்க்கு அஞ்சு அமரர் இடர் தீர்த்த வேள்—சூரபத்மனுதிய அவுணர்களுக்குப் பயந்து (சரணடைந்த) தேவர்களுடைய துன்பத்தை நீக்கியருளிய வேள் என்னும் திருநாமத்தைக்கொண்ட ஸ்ரீ முருகப்பெருமானது, பதம் நம்புவர்க்கு—பாதார விந்தமே கதியென அடைந்தவர்களுக்கு, பவர்க்கம் சமர விழி மாதர் பற்று அறும்—நரகத்திற் புகுத்துவதான காமப் போர்க்கணையாகிய கண்களையுடைய பெண்களின் இச்சையானது அறவே யொழியும், (அன்றியும்), பற்பல பேத வர்க்கம் சமரசம் அது ஆம் மெய்ஞ்ஞான தவம் பலிக்கும்—பலவகை வேறுபாடுள்ள பிரபஞ்ச தோற்றங்களனைத்தையும் சமத்துவமாய் பாவிக்கத்தக்க உண்மை ஞானேதய தபோ பலமும் சித்திக்கும். (56)

நம்புங்கவரிய மாதிகண் டோர்பணி நாதர்மல
ரம்புங்கவரிய வேண்மைத் துனரோன்ன லார்பலமும்
வம்புங்கவரிய னீள்வேலர் தாளை வழுத்தினும்பால்
வெம்புங்கவரிய மன்புகு மோசோலும் வீணர்களே.

வீணர்களே—பிரயோசனமிலாத வம்பர்களே, புங்கவர் இய மாதி கண்டோர் பணி நம் நாதர்—இந்திராதி தேவர்களும் இயம முதலான அட்டாங்க யோக சித்திகள் வாய்ந்த தபோதனர்களும் வணங்கித் துதித்திடுகின்ற நம்மை யாட்கொளும் பரம ஞான தேசிகரும், மலர் அம்பு உங்கு அவ்வேள் அரிய மைத்துனர்—புஷ்ப பாணங்களை உவ்விடத்துச் செலுத்தும் அந்த மன்மதனுக்கு அருமையான மைத்துனரும், ஒன்னலார் பலமும் வம்பும் கவரிய நீள் வேலர்—பகைவர்களாகிய சூரபத்மனாதியர்கள் பராக்கிரமத்தையும் தீய செயல்களையும் பறித்தெறிந்த நெடிய வேலாயுதத்தையுடையவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளின், தாளை வழுத்தில்—திவ்ய சரணார விந்தங்களைத் துதித்து வணங்குவீர்களேயானல், நும்பால் வெம்பும் கவரி யமன் புகுமோ சொல்லும்—நீங்களிருக்குமிடத்திற்குக் கொடூரமான எருமைக்கடா வாகனத்தையுடைய கூற்றுவன் அணுகுவனே கூறுவீர்களாக. யமன் அணுகா னென்பது குறிப்பு. (57)

களவரவிந்த மதியர் சினத்திற் கடியவிட
முளவரவிந்த னமுமனை யார்நட் பொழித்துனது
தளவரவிந்த பதம்பெறு நேமமுந் தந்தருள்வாய்
மேளவரவிந்த வகந்தணித் தோன்பணி வேலவனே.

மெள்ள வர விந்தம் அகம் தணித்தோன் பணி வேலவனே—(விருத்த வேதிய வடிவங்கொண்டு) தளர்நடையொடு வந்து சந்தித்த கெட்ட எண்ணத்தையுடைய விந்தகிரியின் கெர்வத்தை அடக்கிய அகஸ்திய மகாமுனிவர் வணங்கிடும் வேலாயுதக் கடவுளே, களவர்—திருடர்களாயும், அவிந்த மதியர்—கெட்ட புத்தியை வாய்ந்தவர்களாயும், சினத்தில் கடிய விடம் உள அரவு இந்தனமும் அனையார்—கோபத்தில் கொடிய விஷத்தையுடைய சர்ப்பத்தையும் அக்கினிச் சுவாலையையும் ஒத்தவர்களாகவும் உள்ளவர்களிடத்தில், நட்பு ஒழித்து—சிநேகங்கொள்வதை நீக்கியும், உனது தள அரவிந்த பதம் பெறு நேமமும் தந்தருள்வாய்—தேவரீருடைய இதழ் விரிந்த செந்தாமரை மலர்போலுந் திருவடித்

துணையை அடையும்படியான நியம நெறியையும் அனுக்ரகஞ் செய்தருளுவாயாக.

விந்தகிரியானது விருத்த வேதிய வடிவமாய் அகஸ்திய முனிவரை மயக்கிடவந்த வரலாறு காசி காண்டத்திற் காண்க. (58)

வேலாவலய மடைத்தோன் சுரர்மக வேந்துமறை
நூலாவலய னுவப்பப் பொருப்பற நூறியவேற்
கோலாவலய ரவருங் கொடுங்கதிர்க் கோனுமிணை
சாலாவலய மணிபுய னேமுத்தி தந்தருளே.

வேலா வலயம் அடைத்தோன் — ஸ்ரீ ராமாவதாரத்தில் சமுத்திரத்தில் சேதுபந்தனம் செய்து இலங்கைக்குச் சென்ற திருமாலும், சுரர்—தேவர்களும், மக வேந்து—யாக கர்த்தாவாகிய இந்திரனும், மறை நூல் ஆவல் அயன்—வேதங்களினிடத்தில் மிகுந்த விருப்பமுள்ள பிரமதேவனுமாகிய இவர்களெல்லோரும், உவப்ப பொருப்பு அற நூறிய வேல் கோலா—மகிழ்ந்து கொண்டாடும் வண்ணம் மாயா வல்லபத்தையுடைய கிரவுஞ்ச கிரியைப் பிளந்தழித்த வேலினைத் தாங்கிய திவ்யாலங்கிர்த சொரூபனே, அல் அயர வரும் கொடும் கதிர்க்கோனும் இணை சாலா வலயம் அணி புயனே—இருளானது கெடும்படி தோன்றுகிற வெய்ய கிரணங்களையுடைய ஸ்ரீ சண்முகக் கடவுளே, முத்தி தந்து அருள்—அடிமைக்கு மோக்ஷ பதவியைக் கொடுத்தருள் வாயாக. (59)

தந்தத்தத்திக்கு வருதுணை வாவரந் தந்தருள்வீ
தந்தத்தத்திக்கு மதன னடத்துந் தனிரதநி
தந்தத்தத்திக்கு தொறுமணஞ் சூழ்செந்தி லாய்தமிழோர்
தந்தத்தத்திக்கு மடமை தவிர்க்குந் தவக்கொழுந்தே.

தந்தத்து அத்திக்கு வரு துணைவா—ஒற்றைக் கொம்பினையுடைய யானைமுகத்தைக் கொண்ட விநாயகக் கடவுளுக்கு மகிழ்வுறவந்த சகோதரனே, வீதந்து — (பூஞ் சோலையினிடத்தில்) மலர்கள் தோன்றி விளங்கிட, அத்தத்து இக்கு மதனன் நடத்தும் தனி ரதம் நிதம் தத்த—கரத்திலே கரும்பு வில்லைக்கொண்ட மன்மதன் ஏறிச் செலுத்தும் ஒப்பற்ற தேராகிய தென்றற் காற்றானது (அம்மலர்களின்மீது) தினமும் வந்து தவழ்ந்துலாவுவதால், திக்கு தொறும் மணம் சூழ் செந்திலாய் — திசைகள்

தோறும் சுகந்த வாசனை மிகுந்து கமழச் செய்கின்ற திருச்செந் திற்பதியையுடையவனே, தமிழோர் தம் தத்து அதிக்கு மடமை தவிர்க்கும் தவக் கொழுந்தே—செந்தமிழ்ப் புலமைச் சீலர்களுக்கு அவமிருத்தையும் அதனாலுண்டாகும் பயத்தையும் அறியாமையையும் நீக்கியருளும் தவத்தின் பிரயோசனமாக விளங்கும் தனிப் பரஞ்சுடரே, வரம் தந்து அருள்—(அடியேனுக்கு) மேன்மையான அருட்பெருஞ் செல்வத்தைக் கொடுத்தருள்வாயாக. (60)

தவளவிலங்க றனையன் றெடுத்த தரனுமிடை
துவளவிலங்க முலைப்பூ மகணலந் துய்ப்பவெண்ணி
யவளவிலங்க மழிந்தான்புன் காமனன் றன்றுதொண்ட
கவளவிலங்க லுறைவேலற் போற்றுமின் காதல்கொண்டே.

**தொண்ட-தொண்டர்காள்,**

தவள விலங்கல் தனை அன்று எடுத்த தரனும்—வெள்ளிய கைலாச மலையை அக்காலத்தில் பெயர்த்துத் தூக்கிய பலத்தையுடைய ராவணேஸ்வரனும், இடை துவள இலங்கு அம் முலை பூ மகள் நலம் துய்ப்ப எண்ணிய அளவில்—இடையானது தளர்ந்து தொசிந்திட விளங்கும் அழகிய தனங்களையுடைய திருமகள் அமிசமான சீதாபிராட்டியினிடத்தில் இன்பநுகர எண்ணிய மாத்திரத்தில், அங்கம் அழிந்தான்—தேகம் அழிந்திட்டான், (ஆதலால்) புன்காமம் நன்று அன்று-சிற்றின்ப வாஞ்சையானது நன்மையுடையதல்ல (என்பதை நீங்களுணர்ந்து), காதல் கொண்டு—மெய்யன்புகொண்டு, தொண்டக வளவில் அங்கு உறை வேலனை போற்றுமின்—குறிஞ்சிப்பறையையுடைய (குறவர்களிருக்கும்) மலை நிலத்துள்ள சிறு குடிசையாகிய அவ்விடத்தில் மகிழ்வுகொண்டு வசிக்கின்ற வேலாயுதக் கடவுளைத் துதித்து வணங்குவீர்களாக.

**அன்றியும்**

தொண்ட கவள் விலங்கல் உறைவேலனை (எனப் பதப்பிரிவு செய்து) துதிக்கையைக் கொண்டதாய் சோற்றுருண்டையை விழுங்குகின்ற யானை வாகனத்து வீற்றிருந்தருளும் வேலாயுதப் பெருமானை எனவும் பொருள் உரைக்கலாம்.

தொண்டை மண்டலம், தொண்ட மண்டலம் என்றார்போல, தொண்டையெனுஞ் சொல், தொண்ட என்று விகாரித்து நின்றது.

அல்லாமலும்

(தொண்டக வளவில் அங்கு உறை வேலனை (எனக்கொண்டு) குறிஞ்சிப்பறையையுடைய (குறவர்களிருக்கும்) மலைநிலத்து இருக்கும் சிறு குடிசையாகிய அவ்விடத்தில் மகிழ்ந்து இருந்த வேலாயுதக் கடவுள் எனவும் பொருள் கூறலாம்.

அல் சாரியை (61)

காதகப்பாவரைத் தேடிப் புகழ்ந்துபற் காட்டிமுறை
யேதகப்பாவரைக் காசுக்கும் பாடிப்புண் ணெய்துவனே
மூதகப்பாவரைக் கோக்குஞ்செந் தூர்ச்சண் முகாவெவர்க்கு
மாதகப்பாவரைக் குங்கலி தீர்த்தருண் மாசின்மையே.

வரைக்கு ஒக்கும் அகப்பா மூது செந்தூர் சண்முகா—மலைக்கு நிகராயோங்கிய மதில் சூழ்ந்து விளங்கும் புராதன க்ஷேத்திரமாகிய திருச்செந்தூரில் கோயில் கொண்டருளும் ஸ்ரீ சண்முகக் கடவுளே, எவர்க்கும் மா தகப்பா—சர்வான்மகோடிகளுக்கும் பெருமை வாய்ந்த தந்தையாகவுள்ளவரே. காதக பாவரை தேடி புகழ்ந்து பல் காட்டி—கொலை முதலான கொடிய பாவச் செயல்களுடையவர்களைத் தேடிக்கொண்டு பெருங்கொடை வள்ளலே எனப் புகழ்ந்து பல்லைக்காட்டிப் பேசியும், முறையே தகு அப்பா அரைக் காசுக்கும் பாடிப் புண் எய்துவனே—இலக்கணப்படியே யமைந்த சிரேஷ்டமான அப் பாடல்களை அரைக்காசுக்காகப் பாடியும் மனம் நொந்து வருந்துவேனே, (ஆதலால்) அரைக்கும் கலி தீர்த்து மாசு இன்மை அருள்—(அடியேனை) நசுக்கித் துன்புறுத்துகின்ற தரித்திரத்தை நீக்கி குற்றமிலாத திருவருட் செல்வத்தை அனுக்ரகஞ் செய்வாயாக. (62)

மாசினமாவரு துன்பத்து ளேன்னை மயக்கலுனக்
கேசினமாவரு ளாற்புறந் தோனிகர் கேழ்முகிலை
மூசினமாவரு டேரகத் தோய்முறை யோவிதுநீ
பேசினமாவரு மஞ்சிறி யேன்செய்த பேதமென்னே.

அருளால் புரந்தோன் நிகர்கேழ் முகிலை—கருணையினால் உலகங்களை ரக்ஷிக்கின்ற திருமாலைப் போலும் நிறத்தையுடைய கரிய மேகத்தை, மூசின மா வருடு ஏரகத்தோய்—நெருங்கிய யானைகளானவை தன்னினமெனத் தடவுகின்ற பெருமை வாய்ந்த திருவேரகமெனும் திவ்ய க்ஷேத்திரத்தையுடையவரே, மாசு

இனமா வருதுன்பத்துள் என்னை மயக்கல்—காமாதி முக்குற்றங்களால் அடையும் துன்பத்தினுள் என்னை மனங்கலங்கச் செய்வதானது, உனக்கே சினமா—பரம தயாநிதியாகிய உனக்கென்ன கோபமா, இனமா வருமம்—இன்னமுமா என்மீதில் வருமங்கொண்டிருக்கிறாய், இது முறையோ—(உமது பெருந்தகைக்கு) இது ஒழுங்காகுமோ, சிறியேன் செய்த பேதம் என் நீ பேசு—அறிவிற் சிறியேனாகிய யான் செய்த ஒவ்வாத குற்றம் யாது அதனைத் தேவரீர் கூறியருள்வீராக. (63)

பேதாமனங்கன தம்பட ராதேனைப் பேணமுடி
யாதாமனங்கன கக்கிரி நேர்புயத் தார்ந்தநிம்ப
மாதாமனங்கன ஞேய்தீர நீறு வழங்குகுரு
நாதாமனங்கன கல்லோ வின்றேநன் னடுநிலையே.

மன் அம் கனககிரி நேர் புயத்து ஆர்ந்த மா நிம்ப தாமன்—நிலைபெற்ற அழகிய பொன்மலை போன்ற புயங்களினிடத்திற் பொருந்திய சிறப்புவாய்ந்த வேப்பமாலையை யுடையவனாகிய பாண்டியனுக்கு, அங்கு அனல் நோய் தீர நீறு வழங்கு குருநாதா—அம் மதுரையம்பதியிலே சுரநோயைக் (கூனுடன்) நீங்கும் வண்ணம் திருஞானசம்மந்தமூர்த்தியாய் வந்து திருநீறு வழங்கியருளிய பரமஞான தேசிகனே, பேது ஆம் அனங்கன் அது அம்பு அடராது எனை பேண முடியாதா—மதி மயக்கமடையச் செய்கின்ற மன்மதனுடைய மலர்ப் பாணங்கள் பொருதிடாமல் அடியேனை ரக்ஷிக்க முடியாதா, மனம் கன கல்லோ—தேவரீருடைய மனமானது திண்ணிய கல்லோ, நல் நடு நிலை இன்றே—(அன்றியும் உம்மிடத்தில்) நல்ல நியாய மார்க்கமென்பது இல்லையோ, ஏழையாகிய என்னை ரக்ஷித்தருள்வது நின் கடமையேயாம். (64)

நடுக்கந்தரத்தம மாமேனச் சூழ்ந்து நலிந்தபவங்
கடுக்கந்தரத்தம னத்துண் மயலுங் கடிதகல
முடுக்கந்தரத்தம ரேசன் றேழப்புவி முற்றுமுன்கார்
வடுக்கந்தரத்தமர் வான்சொற் படிவலம் வந்தவனே.

அந்தரத்து அமரேசன் தொழ— வானுலகுக் கிறைவனாகிய இந்திரன் கண்டு தொழுது வியந்து போற்றிட, புவி முற்றும்—பூமண்டல முழுதையும், முன் கார் வடு கந்தரத்து அமர்வான் சொல்படி வலம் வந்தவனே—முன்னொரு காலத்தில் கரிய

விஷ தழும்பு கண்டத்திற் பொருந்திய சிவபெருமானுடைய திருவாக்கின்படி (ஓர் நொடிப்பொழுதில்) பிரதக்ஷிணம் வந்தருளியவனே, நடுக்கம் தரு அத்தமம் ஆம் என சூழ்ந்து நலிந்த பவங்கள்—அச்சத்தைக் கொடுக்கும் அவ் வந்தகாரத்தைப் போலச் சூழ்ந்து வருந்தச் செய்கின்ற அளவிலாத பிறவிகளேயும், துக்கம் தரத்த மனத்துள் மயலும்—துன்பத்தாலுண்டாகும் மனோ மயக்கத்தையும், கடிது அகல மூடுக்கு—சீக்கிரத்தில் நீங்கும்படி ஓட்டியருள்வாயாக. (65)

வந்தித்தியங்கு மவர்க்கெளி யாய்மெய் மறந்தறிவன்
புந்தித்தியங்கு நயங்காட்டப் பாடுமப் பூவையற்பாற்
சிந்தித்தியங்கு மதத்தோ ரிடத்துஞ் செலாமலென்சித்
தந்தித்தியங்கு முழுதும் புகழ்பதந் தந்தருளே.

வந்தித்து இயங்கும் அவர்க்கு எளியாய்—வந்தனை செய்து (விபூதிருத்ராக்ஷதாரணங்களோடு) விளங்கா நின்ற மெய்த் தொண்டர்களுக்கு எளிதில் காக்ஷி தந்தருள்பவனே, அறிவு அன்பு உந்தி மெய்மறந்து தியங்கும் நயம் காட்ட பாடும்—கேட்போர் புத்தியில் இச்சைமிகக் கொண்டு தன்னை மறந்து மயங்கும்படி இனிமைதோன்றப் பாடுகின்ற, அப் பூவையர்பால்—அந்தப் பெண்களினிடத்திலும், சிந்தித்து இயங்கு மதத்தோர் இடத்தும்—(மேற்கூறிய பெண்களின் போகமே மோக்ஷமென) நினைந்து திரிந்துழல்கின்ற உலகாயதன் முதலான புறச் சமயிகளிடத்திலும், செலாமல் என் சித்தம் தித்தி—போகாமல் என் புத்தியை நன் மார்க்கத்திற் செலத்திருத்தி, அங்கு முழுதும் புகழ் பதம் தந்து அருள்—அவ்விடத்தில் சகல வேதாகம சாஸ்திரங்களும் புகழுகின்ற பேரின்பப் பேற்றைக் கொடுத்தருள்வாயாக. (66)

தந்தாவளக்கரும் பூதர வாய்தனிற் சார்ந்தநன்னீர்
சேந்தாவளக்கரும் பென்னமின் ஞர்வசஞ் சேர்தனன்றே
நந்தாவளக்கரும் போதாத மோக நவைதவிர்ப்பாய்
கந்தாவளக்கரும் பூரண ஞானக் கதிக்கொழுந்தே.

கந்தா—கந்தசுவாமியெனுங் காரணப் பெயருடையவனே, அளக்க அரும் பூரண ஞான கதிக்கொழுந்தே—அளவிடற்கரிய பரிபூரண ஞானனந்தச் செழும்பரஞ்சுடரே, கரும் பூதர தந்த வள வாய் தனில் சார்ந்த—கரியமலை போன்ற யானை வாயினுள் அகப்பட்ட, நல் நீர் செம் தாவள கரும்பு என்ன — நல்ல நீர்

வளமிக்க செழித்த இடத்திலுண்டாகிய கரும்பானது அரைபட்டழிவதுபோல, மின்னார் வசம் சேர்தல் நன்றே—பெண்களிடத்தில் இச்சைகொண்டு கூடுதல் நன்மையாகுமோ, (ஆகாதாதலால்) நந்தா அளக்கரும் போதாத மோக நவை தவிர்ப்பாய்—அழிவிலா கடற் பெருக்கமும் குறைவாமென நிறைந்த காமவாஞ்சையாகிய கொடிய குற்றத்தை நீக்கியருள்வாயாக. (67)

கொழுங்கோகனக முகவேளன் றுயர் குடியிடைத்த
வழுங்கோகனக குபேரனேன் றேகுங்கு மச்சுமைகொண்
டெழுங்கோகனக சடரைப் புகழ்ந்துபோய் யீங்குரைப்ப
தொழுங்கோகனக வலைதீர்க்கு மையனை யுன்னுநெஞ்சே.

நெஞ்சே—மனமே, குங்கும சுமை கொண்டு எழும் கோகு அன்னகசடரை—குங்கும மூட்டையைப் பிரயோசனமின்றித் தூக்கிக்கொண்டு கிளம்புகிற கழுதையைப் போன்ற லோபிகளாகிய கீழ்மக்களைக் கண்டு, கொழும் கோகனக முகவேள்—செழிய செந்தாமரை மலர்போலு முகத்தையுடைய மன்மதனே என்றும், அன்று ஆயர் குடியிடை தவழும் கோ - அன்னாளினில் ஆயர்பாடியின் கண்ணே தவழ்ந்து விளையாடிய கிருஷ்ணவதாரனேயென்றும், கனக குபேரன் என்றே—பெருநிதிச் செல்வனாகிய குபேரனே யென்றும், புகழ்ந்து பொய் ஈங்கு உரைப்பது ஒழுங்கோ—புகழ்ச்சிசெய்து (உண்மைக்கு மாறான) பொய்யை இங்ஙனம் கூறித்திரிவது முறையோ, (முறையல்லவாதலால்) கனகவலை தீர்க்கும் ஐயனை உன்னு—பெருந்துன்பங்களையெல்லாம் நீக்கியருள்கின்ற பரம கருணாநிதியாகிய ஸ்ரீ முருகக் கடவுளைச் சிந்தித்திடுவாயாக. (68)

உன்னங்கிரியை வழுத்தார் கிளைபெண் டொடுதநயர்
சொன்னங்கிரியை பெறினுமுண் டோகதி சூதயர்ந்து
முன்னங்கிரியை வருக்கருள் செய்த முதன்மருகா
மின்னங்கிரியை யடர்த்தசெவ் வேற்படை வித்தகனே.

முன் சூது அயர்ந்து அங்கு இரி ஐவருக்கு அருள் செய்த முதல் மருகா—முன்னாளினில் சூதாட்டத்தில் தோல்வியுற்றுத் தளர்ந்து அவ்வஸ்தினாபுரத்தைவிட்டு ஆரண்யத்திற்கேகிய பஞ்ச பாண்டவர்களுக்கு துணையாயிருந் தருளிய திருமாலின் மருகனே, கிரியை அடர்த்த மின் அம் செவ்வேற்படை வித்தகனே—கிரவுஞ்சமலையைப் பொருதிப் பிளந்த ஒளி கொண்ட அழகிய

சிவந்த வேலாயுதத்தையுடைய ஞான நாயகனே, உன் அங்கிரியை வழுத்தார்—உனது திருவடிகளைத் துதித்து வணங்காத பேர்கள், கிளை பெண்டு ஒடு தநயர் சொன்னம் கிரியை பெறினும் கதி உண்டோ—சுற்றத்தாரையும் மனைவியுடன் மைந்தரையும் பொன் முதலான திரவியத்திரளையும் சிறந்த பல அதிகாரத்தையும் பொருந்தப்பெற்றிருந்தாலும் (அவைகளால் அவர்களுக்கு) நற்கதியுண்டாகுமோ.

இல்லையென்பது குறிப்பு. (69)

வித்தம்புயங்க மணிதண்டி கைகரி வெம்பரிபல்
வித்தம்புயங்க மிளிர்கண்மி ஞர்முதன் மெய்த்திருமே
வித்தம்புயங்க டதும்பநின் றுலுமுள் வேட்கைதுன்ப
வித்தம்புயங்க ணிகர்குகன் றுளில் விவேகிகட்கே.

விவேகிகட்கு—சிறந்த பேரறிவாளர்களுக்கு, வித்தம் புயங்க மணி தண்டிகை கரி வெம்பரி பல் வித்து—செம்பொற் றிரவியங்கள் நாகரெத்தினங்கள் சிவிகைகள் யானைகள் பிரியமான குதிரைகள் (களஞ்சியம் நிறைந்த) பலதானியங்களுடனே, அம்பு உயங்க மிளிர் கண்மின்னார் முதல்—கணைகளும் தளர்ந்திடப் பிரகாசிக்கின்ற கண்களையுடைய பெண்டிர் முதலான (மைந்தர் சுற்றத்தார் வரையுள்ள), மெய் திரு மேவி தம் புயங்கள் ததும்ப நின்றுலும்—உண்மையான பெருஞ் செல்வங்களை புண்ணிய வசத்தாற் பொருந்தி தங்கள் புயங்கள் பூரிக்க வாழ்ந்திடப் பெற்றுலும், (அவர்களுக்கு) உள் வேட்கை—மனோவிருப்பமானது, துன்பு அவித்த குகன் அம்புயங்கள் நிகர் தாளில்—(சரணடைந்தார்க்குச்) சகல துன்பங்களையும் நீக்கியருளும் ஸ்ரீ சண்முகப் பெருமானது தாமரை மலர்போலுந் திருவடிகளில் சதாபற்றி நிற்குமென்க. (70)

கட்கம்பணிய மிளிர்ந்துசெவ் வேலைக் கடிந்துதெவ்வ
ருட்கம்பணிய முதுசிந்த வீறி யுயர்நமற்குள்
வேட்கம்பணிய விழிமாத ராசை மிகாதெனையாள்
புட்கம்பணிய வயல்சூழ் பழநிப் புரவலனே.

புள் கம்பு அண்ணிய வயல்சூழ் பழநி புரவலனே—அன்னப் பக்ஷிகளும் சங்கினங்களும் அமைந்த வயல்கள் சூழ்ந்த வளமிக்க பழநிப்பதியில் வாழ்கின்ற சர்வலோக ரக்ஷகனே, கட்கம் பணிய

மினிர்ந்து—வாளாயுதமானது வணங்கப் பிறழ்ந் தொளிர்ந்தும், செவ்வேலை கடிந்து—சிவந்த வேலினைக் கோபித்தும், தெவ்வர் உட்கு அம்பு அணி அமுது சிந்த வீறி—பகைவர்களைப் பயமுறச் செய்யும் பாணத்தையும் அழகிய அமிர்தத்தையும் சிதறும்படி வீறுப்புக் காட்டியும், உயர் நமனுக்கே உள் வெட்கம் பண்ணிய விழிமாதர்—பெரிய கூற்றுவனுக்கு மனத்தினுள் நாணமடையச் செய்தும் விளங்குவதாகிய கண்களையுடைய பெண்களினிடத்தில், ஆசைமிகாது என்னை ஆள்—காமவாஞ்சை மிகுந்துழன்றழியா வண்ணம் அடியேனை ஆட்கொண்டருள்வாயாக.

இங்கு கூறிய கண்ணின் சமஸ்கார இயற்கை அழகுக்குத் தோல்வியுற்ற உவமானப் பொருள்களாகிய வாளாயுதம் வளைத் தொடிக்கப்பட்டும் வேலாயுதம் வடிவமைக்கும்போது அக்கினியிற்றேய்த்துக் காய்ச்சப்பட்டும் கணை செய்யப்படுங் காலத்திற் கடையப்பட்டும் அமிழ்தைச் சிதறப் பகிர்ந்து தேவர்களுக்கு உணவாகும்படி செய்தும் யமனைச் சிவபெருமானுல் உதையுண் டுருளச் செய்தும் தண்டிக்கப்பட்டன என்று வருணனை சொல் நயம் தோன்றக்கூறியதென்க. (71)

வலஞ்செய்ய வஞ்சக மில்லார்புண் காய்மருந் தேகலர்மேய்
யிலஞ்செய்யவஞ்சக மோடெதிர்ப் போனைவென் றேய்தவர்விண்
டலஞ்செய்ய வஞ்சக மேத்துங்கு காகதி தந்தருணித்
திலஞ்செய்யவஞ்சக திச்சங்கு குஞ்செந்திற் சேவகனே.

செய் சகதி சங்கு நித்திலம் அவம் உகும் செந்தில் சேவகனே—வயலின் சேற்றினிடத்திலே சங்கினங்கள் முத்துக்களை வீணுகச் சொரிந் தூருகின்ற வளமிக்க திருச்செந்தூரில் கோயில் கொண்டருளும் சர்வ வல்லமையுடையவனே, வலம் செய்ய அஞ்சு அகம் இல்லார் புண்காய் மருந்தே—பிரதக்ஷிணஞ் செய்வ தற்கு வருந்தி அஞ்சும் மனமிலாத அடியார்களின் அகப்புண்ணை ஆற்றுகின்ற அவுஷத அமிர்த சஞ்சீவியே, மெய்யில் மலர் அஞ்சு எய்ய வஞ்சகமோடு எதிர்ப்போனை வென்று ஏய்தவர்—தேகத் திலே புஷ்பபாணங்களைந்தையும் எய்யுமாறு மறைவோ டெதிர்க் கின்ற மன்மதனைச் செயித்துப் பொருந்திய தபோதனர்களும், விண்தலம்—வானுலகத்துள்ள தேவர்களும், செய்ய அம் சகம்—சிறந்த அழகிய பூவுலகத்துள்ளவர்களும், ஏத்தும் குகா—துதித்து வணங்குகின்ற ஸ்ரீ குகப்பெருமானே, கதி தந்தருள்—அடியேனுக் குப் பேரின்பப் பதவியைக் கொடுத்தருள்வாயாக. (72)

சேவற்கனத்து வசமுருகோனருட் சீர்மறந்து
மேவற்கனத்து நடையார் பதத்தினும் வீழ்ந்துகணைப்
பூவற்கனத்து வரிக்குத்தென் றற்குப் பொருங்குயிற்கு
மாவற்கனத்து முழுமூடர்க் கென்று வருங்கதியே.

கனசேவல் துவச முருகோன் அருள்சீர் மறந்து—பெருமை வாய்ந்த சேவற்கொடியையுடைய ஸ்ரீ முருகக் கடவுளின் அருட் பெருஞ் சுகமேன்மையை மறந்து, அனத்து நடையார் மேவற்கு — அன்னத்தைப்போலும் நடையை வாய்ந்த பெண்களின் அற்ப சுகத்தையடைவதற்கு நினைந்து, பதத்தினும் வீழ்ந்து— (அந்தப் பெண்களின்) பாதத்திலும் விழுந்து கும்பிட்டுக் கெஞ்சி, கணை பூவற்கு—பாணமாக மலர்களைக் கொண்ட மன்மதனுக்கும், அன்னத்து உவரிக்கு—(அவன் முரசமாகிய) அந்தச் சங்குகளை யுடைய சமுத்திரத்திற்கும், தென்றற்கு—(அன்னவன் ரதமாகிய) தென்றற் காற்றுக்கும், பொரும் குயிற்கு—(அவனது காளமாக) அமைந்த குயிலுக்கும், மா அற்கு—(அவனது) யானையாகிய இருளுக்கும், அனத்தும் முழு மூடர்க்கு என்று கதி வரும்—வருந் தித் திணறுகின்ற முழு மூடர்களுக்கு எக்காலத்தில் நற்கதி கிடைக்கப்போகிறது. கதி இல்லையென்பது குறிப்பு. (73)

வருந்தும்புலவருந் தேகம்போய் யேயது வான்கழுகும்
பருந்தும்புலவருந் துந்தகைத் தென்ற பரிசுணர்ந்தே
யிருந்தும்புலவருந் தீதகற் றுமதி யீர்மறையுந்
திருந்தும்புலவருந் தேடுங் குகன்புகழ் செப்புமினே.

வருந்தும் புலவர் உம் தேகம் பொய்யே — லோபிகளைப் புகழ்ந்து பாடி வருந்தித் திரிகின்ற புலவர்காள் உங்களுடைய சரீரம் அநித்யமேயாம், அது வான் கழுகும் பருந்தும் புலவு அருந் தும் தகைத்து—அத்தேகமானது வானிற் பரந்துலவுகின்ற கழுகு களும் பருந்துகளும் புலால் புசித்தற்கிடமாயுடைய தன்மையது, என்ற பரிசு உணர்ந்தே இருந்தும் புல்ல வரும் தீது அகற்று மதி யீர்—என்கிற விதத்தை நீங்கள் தெரிந்தேயிருந்தும் உங்களைப் பொருந்தியலைக்க வருகின்ற தீமையை நீக்காப் புத்தியையுடை யீர், மறையும் திருந்தும் புலவரும் தேடும் குகன் புகழ் செப்பு மின்—(இனிமேலாகிலும்) வேதங்களும் சிறப்பு வாய்ந்த தேவர் களும் ஆராய்ந்தறிந்து வணங்கும் ஸ்ரீ குகப்பெருமானுடைய அருட்பிரபாவத்தைப் புகழ்ந்தோதுவீர்களாக. (74)

செப்பந்தவிரக வான்க டமதுபுன் சிந்தைவிட்டுத்
தப்பந்தவிரக னுங்குக னன்பர் தமக்கிருத
னப்பந்தவிரக லக்கோதை மார்தந் நளினவலே
யப்பந்தவிரக நோய்தணிக் கின்ற வருமருந்தே.

செப்பம் தவிர் அகவான்கள் தமது புன் சிந்தை விட்டு தப்பு அந்த விரகனும் குகன்—தரும நீதி நெறியிற் றவறிய பாவிகளுடைய இழிவான மனதை விட்டகன்றிடும் அவ்வுவாயமுடையவனும் குகக் கடவுள், அன்பர் தமக்கு—சித்த சுத்தி வாய்ந்த மெய்யடியார்களுக்கு, இரு தன பந்து அவிர் அகல கோதைமார் தம்—இரண்டு கொங்கைகளாகிய திரண்ட பந்துகள் விளங்கும் மார்பினையுள்ள பெண்களினுடைய, நளின வலை அ பந்த விரக நோய் தணிக்கின்ற அரு மருந்து—இங்கித வலையதனில் அகப்பட்டுழலும் காம நோயை நீக்குகின்ற அரிய அமிர்த சஞ்சீவி அவுஷதமாயுள்ளவனும் ஆம்.

ஆதலால் மனமே சண்முகப் பெருமானுடைய சரணாரவிந்தங்களை வழிபட்டுய்வாயாக. (75)

அரும்பரஞ்சோதிக் குமதனன் செங்கை யயினெடுங்கட்
சுரும்பரஞ்சோதிக் கவின்மாதர் பாசச் சுருக்ககல்பண்
பரும்பரஞ்சோதிக் கவிசொல் பவரும் பணியழநி
வரும்பரஞ்சோதிக் கடியார்க்கிங் கேது மறுசென்மமே.

மதனன் செம் கை—மன்மதனது சிவந்த கரத்திலுள்ள, அரும்பு அரம் சோதிக்கும் அயில் நெடும் கண்—அரும்புகளமைந்த அரத்தினால் ராவப்பட்ட முனையினுமிகுந்த கூர்மையுடன் விளங்கும் வேலினைப்போன்ற நீண்ட கண்களையும், சுரும்பர் அஞ்சு ஓதி கவின் மாதர்—வண்டுகள் கண்டஞ்சும்படியான கரிய கூந்தலையுமுள்ள அழகிய பெண்களினுடைய, பாச சுருக்கு அகல் பண்பர்—ஆசைக் கண்ணியில் அகப்படாது நீங்கிய பெருமை வாய்ந்த சற்குண தபோதனர்களும், உம்பர்—இந்திராதி தேவர்களும், அஞ்சு ஓதி கவி சொல்பவரும்—பஞ்ச லக்ஷணங்களையும் படித்துணர்ந்து அருட் பாமாலைகளைப் புகலுகின்ற புலவர் சிகா மணிகளுமாகிய மேலோர்கள், பணி—அன்புடன் வணங்குகின்ற,பழநி வரும் பரஞ்சோதிக்கு அடியார்க்கு—பழநியம்பதியில் வந்து வீற்றிருந்தருளும் சுயம்பிரகாசராக விளங்கும் ஸ்ரீ தண்டபாணிக்கடவுளின் திருவடித் தொண்டர்களுக்கு, இங்கு மறு சென்மம் ஏது—இப்பிரபஞ்சத்திலே வேறு பிறவியென்பதேது. சென்மமே இல்லையென்பது குறிப்பு. (76)

மறுத்தவிராகம னோகர யாவு மதித்துவரை
யறுத்தவிராகம னத்தவர் தேடமு தாயகுக
சிறுத்தவிராகம லர்ப்பத நாதவென் றீமைமுற்றும்
பொறுத்தவிராகம மெய்ப்பொரு டந்து புரந்தருளே.

மறு தவிர் ஆக மனோகர—மாசற்ற திருமேனியை வாய்ந்த திவ்யாலங்கிர்த புனித சொரூபனே, யாவும் மதித்து வரையறுத்த விராக மனத்தவர் தேடு அமுது ஆய குக—தேகாதிப் பிரபஞ்ச விஷயங்களனைத்தையும் (அநித்யமென) அறிந்தளவுபடுத்திய நிராசைத் தூய சிந்தை நிஷ்டானுபூதியாளர்கள் தேடுகின்ற இனிய பரமாமிர்த மயமாக விளங்கும் ஸ்ரீ குகப்பெருமானே, சிறுத்த இராக மலர் பத நாத—சிறிய அழகிய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளையுடைய எப்பொருட்கும் இறைவனே, என் தீமை முற்றும் பொறுத்து—யான் செய்த பொல்லாங்குகள் முழுதையும் மன்னித்து, அவிர் ஆகம மெய்ப்பொருள் தந்து புரந்தருள்—ஒளிர்கின்ற ஆகமத்திலுள்ள உண்மை ஞானப் பொருளைக் கொடுத்து ரக்ஷித்தருள்வாயாக. (77)

புரவலருந்தவ வேத்துநற் கீரன் புலம்பொழிய
விரவலருந்தவ ருங்கதி ரோன்பொரு வேல்விடுத்தற்
பரவலருந்தவ ருக்குமெட் டாத பரமவென்மேல்
கரவலருந்தவ னங்கனு ருவகை காவென்றுமே.

புரவலரும் தவ ஏத்தும் நற்கீரன் புலம்பு ஒழிய—பாண்டியன் முதலான அரசர்களும் மிகப் புகழப்பெற்ற செந்தமிழ்த் தெய்வப் புலவராகிய நக்கீரனுக்கு கற்கி முனியெனும் பூதத்தால் நேர்ந்த கலக்கம் நீங்கும்படியாகக் கிருபை கூர்ந்து, விரவு அல் அருந்த வரும் கதிரோன் பொரு வேல் விடும் தற்பர—நெருங்கிச் சூழும் இருளை விழுங்க உதித்திடும் சூரியனைப்போன்ற பிரகாசமுடைய வேலாயுதத்தை விடுத்தப் பூதத்தை வதைத்திடும் சர்வசத்தி வாய்ந்த தனிமுதற் கடவுளே, வல் அரும் தவருக்கும் எட்டாத பரம—திடங்கொண்ட அரிய தவ சிரேஷ்டர்களுக்கும் தேடிக் காண முடியாத பரப்பிர்ம சொரூபனே, என்மேல் கரவு அலர் உந்த அனங்கன் உருவகை என்றுமே கா—என்மீது மறைந்து நின்று மலர்ப் பாணங்களைச் செலுத்த மன்மதன் அடையாத வண்ணம் என்னாளுமே ரக்ஷித்தருள்வாயாக. (78)

காவிரிவானதி ரும்பல நாகக் கவின்சுனைகோ
தாவிரிவானதி தோய்வார் குமரன் சரண்கருதார்
நோவிரிவானதி கத்தா றெழுத்தை யுநோக்கலரந்
தோவிரிவானதி கைப்பென்ற கல்வரிச் சோம்பர்களே.

காவிரி—காவேரியாற்றிலும், வான் அதிரும் பல நாக கவின் சுனை—மேகங்கள் முழங்குகின்ற பல பர்வதங்களிலுள்ள அழகிய சுனைகளிடத்தும், கோதாவிரி—கோதாவிரி நதியிலும், வான் நதி-கங்கா தீர்த்தத்திலும், தோய்வார் குமரன் சரண் கருதார்—(போய் வீணே) முழுகுவார்களேயல்லாமல் குமாரக் கடவுளுடைய திருவடிகளை நினையாதவர்களாயும், நோவு இரி வான் அதிகத்து ஆறு எழுத்தையும் நோக்கலர்—சகல நோய்களையும் ஓட்டுகின்ற ஞான பண்டிதனது மேன்மையுள்ள சடாக்ஷரத்தையும் தெரியாதவர்களாயுமிருக்கின்றார்கள், அந்தோ இ சோம்பர்கள் விரிவான திகைப்பு என்று அகல்வர் — ஐயோ இந்தச் சோம்பேரிகள் பெரிய பிரபஞ்ச மயக்கத்தினின்றும் எக்காலத்தில் நீங்குவார்கள். (79)

ஒருகாலத்திலும் நீங்காரென்பது துணிபு.

களங்கக்கரவரி நேரல்குன் மாதர்சங் கத்துமுறை
களங்கக்கரவரி யுந்தெரி யாத கவடமனக்
களங்கக்கரவரி னத்தும்பு காதெனை க்காத்தருடு
களங்கக்கரவரி மாவுரி யான்பெற்ற கண்மணியே.

துகள் அங்க கர அரி மா உரியான் பெற்ற கண்மணியே—திருநீற்றை யணிந்த திருமேனியும் கரத்தினில் மானைத் தாங்கி யானைத்தோற் போர்வையுடன் விளங்குபவருமாகிய சிவபெருமான் தந்தருளிய அருமைக் கண்மணியாகிய முருகக் கடவுளே, களம் கக்கு அரவு அரி நேர் அல்குல் மாதர் சங்கத்தும்—விஷத்தையுமிழ்கின்ற பாம்பின் படத்தையும் தேர்த்தட்டையும் ஒத்த நிதம்பத்தையுடைய பெண்களின் கூட்டத்திலும், அங்கு முறைகள் அக்கர வரியும் தெரியாத கவட மன களங்க கரவர் இனத்தும்—அவ்விடத்தில் அருட் பாசுரங்களமைந்த புத்தகங்களிலுள்ள அக்ஷர வடிவையே சிறிதும் பாராத வஞ்சக மன மாசுடைய திருடர்கள் கூட்டத்திலும், புகாது என்னை காத்தருள்—நுழைந்திடாமல் அடிமையாகிய என்னை ரக்ஷித்தருள்வாயாக. (80)

கண்ணியரும்பின கொண்டு குமரன் கழலிணையை
நண்ணியரும்பின மெய்ப்புள கத்தொடு நாளுமர்ச்சித்
தெண்ணியரும்பின மாமயல் போக்கி யிராரெனிலெத்
திண்ணியரும்பின மன்பதி காண்பது திண்ணமன்றே.

கண்ணி அரும்பு இன்ன கொண்டு—மலர்மாலைகளுடனே புட்பிக்குந் தருண அரும்புகளாகிய இன்னவைகளைச் சீலமாய்த் தாங்கிக்கொண்டு, குமரன் கழல் இணையை நண்ணி—ஸ்ரீ குமாரக் கடவுளின் திருவடிகளிரண்டையுஞ் சார்ந்து, அரும்பின மெய் புளகத்தொடு நாளும் அர்ச்சித்து எண்ணிய—அன்பிற்றோன்றிய சரீர புளகாங்கிதத்துடன் ஒவ்வொரு நாளும் மாலைகளைச் சூட்டி அரும்புகளை அருச்சித்து நினைந்து போற்றி, அரும் பின்ன மாம் மயல் போக்கி இரார் எனில்—மிகக் கொடிய தவறுதலான மனோ மயக்கத்தை நீங்கி இருந்ில ரென்றால், எத்திண்ணியரும் பின் நமன் பதி காண்பது திண்ணம்—எத்துணை வலிமையுடையவர்களாயிருந்தாலும் பின்னே யமலோகத்தை யடைவது நிச்சயமாம் என்க. அன்றே அசை. (81)

அன்றலங்கோதை நெடுங்கடற் சூரை யடர்த்துயர்வேந்
தன்றலங்கோதை யுறுத வகைவைத் தனைமயின்மேற்
சென்றலங்கோதை யொருத்திக் கொழித்தனை தேன்கதம்ப
மன்றலங்கோதை முருகா வெனக்கோர் வரமருளே.

தேன் கதம்ப மன்றல் அம் கோதை முருகா—தேன் பொருந்திய கடம்ப மலர்களாற் றொடுத்த மணமுடைய அழகிய மாலையை யணிந்த முருகக் கடவுளே, அன்று ஓதை நெடும் கடல் அலங்கு சூரை அடர்த்து—அன்னாளிலே ஆரவாரத்தையுடைய நெடிய கடலினிடத்தில் (மாமரவடிவமாய்) விளங்கிய சூரபத்மனைப் பொருதிக் கொன்று, உயர் வேந்தன் தலம் கோதை உறுத வகை வைத்தனை—வானுலகுக் கிறைவனாகிய தேவேந்திரனது பொன்னகரைத் தீமையடையாத வண்ணம் நிலைபெற வைத்தனை, மயில் மேல் சென்று கோதை ஒருத்திக்கு அலம் ஒழித்தனை—மயில்வாகனத்தின்மீது சென்று (முருகாவென நின்றிரு நாமத்தைச் சதா மொழிந்துகொண்டிருந்த) செட்டிப் பெண்ணொருத்திக்குத் தன் கணவனாலேற்பட்ட துன்பத்தை நீக்கியருளினை, (ஆதலால்) எனக்கு ஓர் வரம் அருள்—(இத்தகைய திருவருட்டிறமுடைய கருணாநிதியாகிய தேவரீர்) அடிமையாகிய எனக்கும் அருட் பெருஞ் செல்வத்தை அனுக்ரகஞ் செய்வாயாக. (82)

அருளமருந்து திகள்பல செய்துகொண் டாடியபத்
தருளமருந்து களைநீங்க வூடெழுந் தற்பரதெவ்
வருளமருந்து கதிர்வே லவபுன் மதித்தமியேன்
றெருளமருந்து தரநீய லான்மற்றோர் தேவில்லையே.

அருள் அமரும் துதிகள் பல செய்துகொண்டாடிய பத்தர்—அருள் அமைந்த தோத்திரங்கள் பல மொழிந்து கொண்டாடி வணங்கிய மெய்யடியார்களுடைய, உளம் அரும் துகளை நீங்க ஊடு எழும் தற்பர—மனத்திலுள்ள சிறிய குற்றங்களையும் நீங்கிட அங்ஙனம் எழுந்தருளும் தனிப் பரஞ்சோதியே, தெவ்வர் உள் அமர் உந்து கதிர் வேலவ—சூரபத்மனாதிய பகைவர்களிடத்தில் நேர்ந்த யுத்தத்திலே செலுத்திய மிகுந்த கிரணப் பிரகாசமுடைய வேலாயுதனே, புல் மதி தமியேன் தெருள மருந்து தர—அற்பப் புத்தியையுடைய தமியேனைத் தெளிவடையும்படி அவுஷதம் கொடுத்தருள்வதற்கு, நீ அல்லால் மற்று ஓர் தேவு இல்லை—ஞான பண்டிதனாகிய உன்னையன்றி வேறொரு தெய்வமே கிடையாது யென்பது துணிபு. (83)

தேவாங்குகனகத் தாந்தை குரங்கிந் தியமுடும்பி
னாவாங்குகனகத் திட்டரைத் தூட்டி நயந்துயிரை
யேவாங்குகனகத் தாமபின் னோர்பற் றிகந்தமரர்
கோவாங்குகனகத் தன்புசெய் வீர்கதி கூடுதற்கே

உலகீர்காள்,

கதி கூடுதற்கு—பேரின்ப பதவியைப் பெற்றுய்ய வேண்டுமேயானால், தேவாங்கு—தேவாங்கினுடைய (கண் பீளையும்) கனகத்து ஆந்தை—உரக்கக் கத்துகின்ற ஆந்தைப் பக்ஷியின் (பிச்சும்), குரங்கு இந்தியம் — குரங்கினுடைய இந்திரியமும், உடும்பின் நாவு — உடும்பினுடைய நாவும், ஆங்கு கன் அகத்து இட்டு அரைத்து—அவ்விடத்திலே கல்லில் வைத்தரைத்தெடுத்து, ஊட்டி நயந்து உயிரையே வாங்கு கனக தாம பின்னோர்—விட புருஷர்களுக்கு அம்மருந்தை உணவிற் கலந்தூட்டிக் கனிவுறப் பேசி மயக்கி உயிரையே கவரும்படியான பொன்னாபரண மாலைகள் பூண்ட பெண்களுடைய, பற்று இகந்து—காம வாஞ்சையை அறவே களைந்து, அமரர் கோ ஆம் குகன் அகத்து அன்பு செய்வீர்—தேவர்களுக்கெல்லாம் மேலான தெய்வமாகிய ஸ்ரீ குகப் பெருமானை (நீங்கள்) மனதிலே அன்புகொண்டு தியானிப்பீர்களாக. (84)

கூடங்கடக்குஞ் சரதவி னேதக் குமரனைப்போ
ராடங்கடக்குஞ் சரமுகத் தாருக னாற்றல்விண்ணோர்
பாடங்கடக்குஞ் சரவண வேளைப் பணியதிவி
சேடங்கடக்குஞ் சரமின் னாரன்பு தீருநெஞ்சே.

நெஞ்சே—மனமே, கூடம் கடக்கும் சரத விநோத குமரனை—மாயாதீதமாய் விளங்கும் மெஞ்ஞானப் பிரகாச விசித்திரராகிய குமாரக் கடவுளும், போர் ஆடு அம் கட குஞ்சர முக தாருகன் ஆற்றல்—யுத்தஞ் செய்யவந்த அழகிய மதங்கொண்ட யானை முகத்தையுடைய தாருகாசுரனது வலியையும், விண்ணோர் பாடு- இந்திராதி தேவர்கள் (அவ்வசுரனாலடைந்த) துன்பங்களையும், அங்கு அடக்கும் சரவண வேளை—அந்த மாயா நகரத்தில் (கிரவுஞ்சகிரியுடன்) அடக்கியருளிய சரவண வேளென்னுந் திருநாமமுடையவருமாகிய ஸ்ரீ சண்முகப்பெருமானை, பணி—நீ வணங்குவாயாக, அதி விசேடங்கள் தக்கும்-சர்வோத்கிருஷ்டமான மேன்மைகள் சித்திக்கும், சரச மின்னார் அன்பு தீரும்-(அன்றியும்) பரிகசிக்கும் சாகசம் வாய்ந்த பெண்களின் இச்சையும் நீங்கிடுமென்க. (85)

தீரம்பயிலு மதிதந்து பாவமுந் தீவினையுங்
கூரம்பயிலு மயங்கவஞ் சங்குடி கொண்டவிழி
யாரம்பயிலு மணுகாம லென்றனை யாண்டருள்வாய்
வாரம்பயிலு முகிறவழ் சோலை மலைக்கந்தனே.

வார் அம்பு அயிலும் முகில் தவழ் சோலைமலை கந்தனே—நெடிய கடல் நீரை யுண்டிடு மேகங்கள் வந்து தவழுகின்ற சோலைகள் சூழ்ந்த பழகிமலையில் வீற்றிருந்தருளும் கந்தசுவாமியே, பாவமும்—அனேக பாவச் செயல்களும், தீவினையும்—கொடிய வினைத் தொடர்களும், கூர் அம்பு அயிலும் மயங்க வஞ்சம் குடிகொண்ட விழியார் அம் பயிலும்—கூர்மையான பாணமும் வேலுந் திகைத்திடக் கபடமே குடிகொண்ட கண்களையுடைய பெண்களின் அழகிய சாமர்த்திய சைக்கினையும், என்றனை அணுகாமல்—அடிமையாகிய என்னையடையாமல், தீரம் பயிலும் மதி தந்து ஆண்டு அருள்வாய்—தேவரீருடைய திருவடித்தொண்டில் உறுதி கொண்டு பழகிடும் புத்தியைக் கொடுத்து ஆண்டருள்வாயாக.

சோலைமலை கந்தனே என்பதை ஆறுவது படைவீட்டு க்ஷேத்திரமாகிய சோலைமலையில் திருக் கோயில்கொண்டருளிய கந்தசுவாமியே எனவும் பொருள் கூறப் பொருந்துமென்க. (86)

கந்தனந்தாமஞ் சரிமேன் கதம்பக் கனகபுயா
நந்தனந்தாமஞ் செறிவா விகள்பழ னங்கடோறும்
வந்தனந்தாமஞ் சுகச்சேந்தி லாய்நின் வரமேனவோ
துந்தனந்தாமஞ் சளகமின் ஞர்மருட் சூதொழித்தே.

கந்தம் நந்தா மென் கதம்ப மஞ்சரி கனக புயா—வாசனை கெடாத மிருதுவான கடம்ப மலர் மாலையை யணிந்து விளங்கும் விளங்கும் பொன்மலை போன்ற பன்னிரு புயங்களையுடையவனே, நந்தனம் தாமம் செறி வாவிகள் பழனங்கள் தொறும்—பூஞ்சோலைகள் புட்பங்கணிறைந்த குளங்கள் வயல்களாகிய இவ்விடங்களிலெல்லாம், அனம் வந்து தாமம் சுக செந்திலாய் — அன்னப் பக்ஷிகள் வந்து வரிசை வரிசையாய்த் தங்கி யின்புறுகின்ற வளமிக்க திருச்செந்தூரில் வாழ்பவனே, மஞ்சு அளக மின்ஞர் மருள் சூது ஒழித்து—மேகத்தையொத்த கரிய கூந்தலையுடைய மாதர்களின் மையலாகிய வஞ்சகத்தை நீக்கி, நின் வரம் என ஓதும் தனம் தா—தேவரீருடைய திவ்யானுக்ரக மெனப் புகலுகின்ற அருட்பெருஞ் செல்வத்தை அடியேனுக்குத் தந்தருள்வாயாக. (87)

சூதங்கமுகப் புயரேய் மதுரையிற் சூழமணர்
தீதங்கமுகப் புறுகழு வேற்றுந் திருக்குமரன்
மாதங்கமுகப் புனிதற் கிளைய வரன்பழநிக்
கோதங்கமுகப் பணிமார்ப வேளெங் குலதேய்வமே.

சூதம் கமுகு அப்புயல் தோய் மதுரையில்—மா விருக்ஷங்களும் பாக்கு மரங்களும் அம்மேக மண்டலத்தை யளாவியிருக்கின்ற வளமிக்க மதுரைமா நகரத்திலே, சூழ் அமணர் தீது அங்கம்—சூழ்ந்திருந்த சமணர்களுடைய தீமை வாய்ந்த சரீரத்தை, உகப்பு உறு கழு ஏற்றும் திரு குமரன்—(திருஞான சம்பந்த சுவாமியென அவதரித்து வந்து) நிமிர்ந்த கழு மரத்தேற்றிய அழகிய குமாரக் கடவுளும், மாதங்க முக புனிதற்கு இளைய வரன்—யானை முகத்தைக்கொண்ட பரிசுத்தராகிய விநாயக மூர்த்திக்குத் தம்பியாகிய சிரேஷ்டரும், பழநி கோ-பழநியம்பதியில் வீற்றிருந்தருளும் இறைவரும், தங்க முகப்பு அணி மார்ப வேள்—பொன் முகப்புகளமைந்த பூஷணங்களை யணிந்து விளங்கும் மார்பினையுள்ள வேள் என்னும் திருநாமத்தையுடையவருமாகிய ஸ்ரீ தண்டபாணிக் கடவுளானவர், எம் குல தெய்வம்—என்னுடைய குல தெய்வமாக இருக்கின்ருர். ஆதலால் அறிவிலா என்னை ஆதரித்தருள்வார் என்பது துணிபு. (88)

குலவம்பரவை பருகிய வேற்கைக் குகாதிகழ்பொற்
கலவம்பரவை நெடுங்குலி சன்மரு காகணல்குல்
வலவம்பரவை நிகர் மடமாதர் வசத்தழுந்தும்
பலவம்பரவை புகாதாண் டருள்செய் பரகதியே.

பரவை குலவு அம் பருகிய வேல் கை குகா — கடலிற் பொருந்திய நீரைக் குடித்திடும் வேலினைக் கொண்ட திருக்கரத்தையுடைய குகப்பெருமானே, திகழ் பொன் கல—பிரகாசிக்கின்ற செழும் பசும் பொன்னாலமைந்த பூஷணனே, அம்பர ஐ நெடும் குலிசன் மருகா—வானுலகுக்கரசனாகிய நெடிய வஜ்ராயுதத்தையுடைய தேவேந்திரனுக்கு மருகனே, கண் அல்குல் வல அம்பு அரவை நிகர் மட மாதர் வசத்து அழுந்தும்—நேத்திரமும் நிதப்பமும் முறையே பாணத்தையும் பாம்பின் படத்தையுமொத்த மடமைக் குணமுள்ள பெண்களிடத்தில் மனம் பதிந்துழலும், பல வம்பர் அவை புகாது ஆண்டு—பல துஷ்டர்களாகிய காமாதுரர் கூட்டத்திலே நுழையாமல் என்னைத் தடுத்தாட்கொண்டு, பரகதி அருள் செய்—பேரின்பப் பேற்றைக் கொடுத்தருள்வாயாக.

உக்கிர குமார பாண்டியராக அவதாரம் செய்தபோது கடல் சுவற வேல் விட்டருளியவரெனவும் பொருள் கூறலாம். (89)

பரந்தகரந்தம முண்ணச்சேல் வானெனப் பாய்மதத்தா
பரந்தகரந்தம யூரத்து லாவும் பகவசுரும்
பரந்தகரந்தம தோதியிற் கொண்டபொற் பாவையராற்
பரந்தகரந்தம தற்குமு னின்னருட் பார்வைசெய்யே.

பரந்த கரம் தமம் உண்ண செல்வான் என—விரிந்த கிரணங்களுடனே இருளை விழுங்கிட (உதயகிரியினின்றும்) புறப்படுகின்ற சூரியனைப்போல, பாய் மதத்தாபரம் தகர் அந்த மயூரத்து உலாவும் பகவ—ஒழுகுகின்ற மதமலையாகிய யானையின் மீதும் ஆட்டுக்கடாவின் மேலும் அழகிய மயிலின் மீதும் எழுந்தருளி (அஞ்ஞான திமிரமகன்றிட) உலாவிவரும் அனந்தகோடி கிரணஞான பாஸ்கரனாகிய அற்புத மூர்த்தியே, சுரும்பர் அம் தகரம் தமது ஓதியில் கொண்ட பொன் பாவையரால்—வண்டுகளையும் அழகிய மயிர்ச் சாந்தையும் தம்முடைய கூந்தலிற் கொண்ட பொற் பதுமைபோன்ற பெண்களினால், பரம் தகர் அந்தம் அதற்கு முன்—என்னுடலம் நொருங்கி மரணாந்தமாவதற்கு முன்னே, நின் அருள் பார்வை செய்—உனது கருணாகடாக்ஷ வீட்சணத்தைப் பாலித்தருள்வாயாக. (90)

பாரம்பரிய மிகுபந்த பாசப் பயிரேழுப்புந்
தாரம்பரிய தளையதிற் சிக்கித் தளர்ந்துமதன்
கூரம்பரிய மயங்காமன் ஞானங் கோடுத்துமயிற்
சீரம்பரிய தனில்வந்து காத்தருள் சிற்பரனே.

சிற்பரனே—சுத்த ஞானப் பிரகாச சொரூபனே, மதன் கூர் அம்பு அரிய—மன்மதனுடைய கூர்மை கொண்ட மலர்ப் பாணங் கள் பாய்ந்து சேதிப்பதினல்—பாரம் பரியம் மிகு பந்த பாச பயிர் எழுப்பும்—தொன்று தொட்டு வழிவழியாய் விர்த்தியாகிற ஆசைத் தொடர்பால் வரும் பிறவிப் பயிரைக் கிளப்புகின்ற, தாரம் பரிய தளை அதில் சிக்கி—மனைவியாகிய பெரிய சிறைக் குள்ளே யகப்பட்டு, தளர்ந்து மயங்காமல்—யான் வருந்தி மயங் காமலிருக்கும்படிக்கு, மயில் சீர் அம் பரி அதனில் வந்து ஞானம் கொடுத்து காத்து அருள்—மயூரமாகிய சிறப்பு வாய்ந்த அழகிய குதிரையின்மீது ஆரோகணித்து வந்து மெய் ஞானத்தைத் தந்து ரக்ஷித்தருள்வாயாக. (91)

சிற்பங்கணிதங் கரண மிலக்கணந் தேர்ந்திடினுங்
கற்பங்கணிதங் களித்துண் ணினுநற் கதிவருமோ
வெற்பங்சணிதங் குறைந்துள தாருகன் மெய்கலங்க
முற்பங்கணிதங் கியகதிர் வேலனை முன்னுமினே.

(உலகீர்காள்)

சிற்பம்—சிற்ப சாஸ்திரத்தையும், கணிதம்—சோதிட நூலை யும், கரணம்—பண்ணலாதி பரிவட்டனை யீருவுள்ள) இசைக் கரணமுடைய சங்கீத சாஸ்திரத்தையும், இலக்கணம்—எழுத் துச் சொற்பொருள் யாப்பு அணி யெனும் பஞ்ச லக்ஷணங்களை யும், தேர்ந்திடினும்—வாசித்துணர்ந்து தேர்ச்சிபெற்றிடினும், கற் பங்கள் நிதம் களித்து உண்ணினும்—(சரீரத்தைப் பலப்பிக்கும்) காயகற்ப மருந்துகளைத் தினமும் மகிழ்ந்து புசித்திடினும். நற்கதி வருமோ—இதனலுங்களுக்கு மோக்ஷ பதவி கிடைக்குமோ, முன் வெற்பு அங்கண் இதம் குறைந்துள தாருகன் மெய் கலங்க பங்கு—முன்னளிலே கிரவுஞ்சகிரியுடன் அங்ஙன மிருந்த நன்மை யற்ற தாருகாசுரனையும் உடலம் வருந்தப் பிளந்து கொன்ற, அணி தங்கிய கதிர் வேலனை முன்னுமின்—அழகு வாய்ந்த ஒளிப் பிரபை கொண்ட வேலாயுதக் கடவுளை சதா நினைமின்கள்.

அதனல் நற்கதியடைவீர்கள். (92)

முன்னாட்டமனிய வெற்பசைத்தாயுடன் முற்றுநிறை
நன்னாட்டமனிய னாடளித் தாய்குரு நாதனெங்குஞ்
சொன்னாட்டமனிய கல்விதந் தாயேத் தொழிலுமுள்ளா
யுன்னாட்டமனிய ராரறி வார்மறை யுட்பொருளே.

*மறை உள் பொருளே—வேதங்களின் அந்தரார்த்தமாயுள்ள வஸ்துவே, முன்னாள் தமனிய வெற்பு அசைத்தாய்—முற்காலத்தில் செய்தருளிய பால லீலையில் மகா மேருவாகிய பொன்மலையை நிலை தளரக் குலுக்கியருளினை (அன்றியும்) உடல் முற்றும் நிறை நல் நாட்ட மன் இயல் நாடு அளித்தாய்—தேக முழுதும் நிறைந்த சிறப்பு வாய்ந்த ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரனுக்குரிய சுவர்க்க லோகத்தைக் கொடுத்தரசுபுரியச் செய்தருளினை, (அதுவுமன்றி) குருநாதன் எங்கும் சொல் நாட்ட மன்னிய கல்வி தந்தாய்—குருமுனி யெனும் அகஸ்திய ரானவர் எவ்வுலகத்தினும் (தமிழ் முனியெனத் தன் பெயரைப் புகலும்படி) ஸ்தாபித்துக் கொள்ள அவருக்கு நிலைபெற்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி யதனைத் தந்தருளினை, (அதுவுமல்லாமல்) எத்தொழிலும் உள்ளாய்—சிருஷ்டியாதிய பஞ்ச கிர்த்தியங்களையு மியற்றும் சர்வ வல்லமையு முற்றனை, (ஆதலால்), உன் ஆட்டம் அன்னியர் ஆர் அறிவார்—தேவரீருடைய திருவிளையாட்டின் மகா மகிமையை (நின் அநுபூதி பெற்றவரன்றி) வேறுள்ளவர்கள் யார்தான் தெரிந்துகொள்ள முடியும்.*

*அறிய முடியாதென்பது குறிப்பு.* (93)

பொருகந்தருவ விரதவெய் யோனைப் பொருந்திநிற்கு
முருகந்தருவ ரிசைசூழ் பழநியின் மோனர்விண்ணோர்
வருகந்தருவ ரெவருந் தொழவள ருங்குமரா
மிருகந்தருவ னிதைத்தலை வாவின்ப வீடருளே.

*பொரு கந்தருவ இரத வெய்யோனை பொருந்தி நிற்கும்—இருளைப் பொருதிட எழு குதிரைகள் பூட்டிய தேரின்மீது வருகின்ற சூரியனது மண்டலத்தை யளாவி நிற்கின்ற, முருகு அம் தரு வரிசை சூழ் பழநியில்—வாசனை வீசும் மலர்களையுடைய அழகிய விருக்ஷங்கள் வரிசையாகச் சூழ்ந்திருக்கும் செழிப்பு வாய்ந்த பழநியம்பதியில் மோனர்—மவுன ஞான யோகிகளும், விண்ணோர்—இந்திராதி தேவர்களும், வரு கந்தருவர்—வானில் உலவிவரும் கந்தருவர்களும், எவரும்—மற்றுமுள்ள பக்தகோடிகளுமாகிய எல்லோரும், தொழ வளரும் குமரா துதித்து வணங்*

கிட அனவரத சாந்நித்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குமாரக் கடவுளே, மிருகம் தரு வனிதை தலைவா—மான் பெற்ற மகளாகிய வள்ளி நாயகிக்கு மணாளனே, இன்ப வீடு அருள்—அடியேனுக்குப் பேரின்ப வீட்டைக் கொடுத்தருள்வாயாக. (94)

வீடம்பரந்தரு வேந்தநெஞ் சுந்திரு வெண்கொடிமேன்
மாடம்பரந்தரு விண்ணினு மேவி வளர்ந்தபுக
ழாடம்பரந்தரு ணம்பெறி னும்பய னன்றதிவி
சேடம்பரந்தரு நாதாநின் பார்வை செலாவிடினே.

அதி விசேடம் பரம் தரு நாதா—சர்வோத் கிருஷ்டமான மோக்ஷ பதவியைத் தந்தருளுகின்ற இறைவனே, நின் பார்வை செலா விடின்—உனது கருணைகடாக்ஷ வீக்ஷணம் பொருந்தப் பெறுவிடில், அம் பரம் வீடு தரு வேந்தன் எஞ்சும் திரு—வானுலகத்தில் வசந்த மாளிகையும் கற்பகத் தருவுமுள்ள தேவேந்திரனுடைய நவ நிதிகளையுங் குறைவெனச் சிறந்த பெருஞ் செல்வமும், வெண் கொடிமேல் மாடம் பரந்து அரு விண்ணினும் மேவி வளர்ந்த புகழ்—வெண்ணிறத் துவசமானது உப்பரிகைமீது விரிந்தோங்கி அருவமாயுள்ள ஆகாய பரியந்தமும் அளாவி விளங்க மிகுந்த கீர்த்தியும், ஆடம்பரம் தருணம் பெறினும்—பிரதாபச் சம்பிரமத்துடன் இளமைப் பருவமுமாகிய இத்தகைய சகல சம்பத்துக்களையும் அடைந்திருப்பினும், பயன் அன்று—யாதொரு பிரயோசனமுமே இல்லையாம்.

ஆதலால் தேவரீர் கருணைக் கண்ணால் அடிமையை நோக்கியருள வேண்டுகிறேன். (95)

விடியாக்கருவரி யன்ன பவம்பல மேவிடினு
முடியாக்கருவரி னுந்தீர்ந்து பேரின்ப முற்றுமிரு
குடியாக்கருவரி ஞாலத் தமரர் கொடும்பகையைப்
பொடியாக்கருவரி வேலவர் நாமம் புகன்றிடினே.

இரு குடி ஆக்கர்—தெய்வயானை யம்மை வள்ளி நாச்சியாரென்னும் இரண்டு மனைவிகளையுடைய திருவருட் செல்வ நாயகனும், உவரி ஞாலத்து—கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்திலே, அமரர் கொடும் பகையை பொடி ஆக்கு அரு வரி வேலவர்—இந்திராதி தேவர்களுக்குக் கொடிய சத்துருவாயிருந்த சூரபத்மன் முதலான அசுரர்களைக் கொன்று பொடியாக்கிய வலிய ஞான

மயமான நெடிய வேலாயுதத்தையுடைய ஸ்ரீ சண்முகப் பெருமானது, நாமம் புகன்றிடில்—திருநாமங்களை மொழிந்து வணங்கிடில், விடியா கருவரி அன்ன பவம் பல மேவிடினும்—நீங்காத இருளைப்போலுந் தீய பாவங்கள் பல சேர்ந்திடினும். (அன்றியும்) முடியா கரு வரினும் தீர்ந்து—முடிவிலாத சென்மங்கள் அடையினும் நீங்கி, பேரின்பம் முற்றும்—மோக்ஷானந்தம் சித்திக்கப் பெறும் என்ப. (96)

புகரும்பனக ருரித்தெரித் தாற்குப் புனிதநெறி
பகரும்பனக மகலாத மோனப் பரமனமு
துகரும்பனக விவலர் சகாயன் சுருதிதெளிந்
தகரும்பனகர் தொழுங்கும ரன்பதஞ் சார்ந்தனமே.

புகர் உம்பல் உரித்து நகர் எரித்தாற்கு—(கயாசுரனென்கிற) புகர் நிறப்புள்ளிகள் வாய்ந்த யானையின் தோலை யுரித்தவரும் திரிபுரங்களை எரித்தழித்தவருமாகிய சிவபெருமானுக்கு, புனித நெறி பகரும் பல் நகம் அகலாத மோன பரமன்—பரிசுத்தமான பிரணவப் பொருள் மார்க்கத்தை யுபதேசித்தருளப் பல பருவதங்களில் நீங்காது வாழ்கின்ற மவுன ஞான தேசிகனும், அமுது கரும்பு அன்ன கவி வலர் சகாயன்—அமிழ்தும் கரும்பு ரசமும் போன்ற இனிய பாடல்கள் கூறும் சிறந்த புலவர்களுக்குத் துணையாயுள்ளவரும், சுருதி தெளிந்த கரும் பன்னகர் தொழும் குமரன்—வேதங்களைத் தேர்ந்துள்ள விசேடமுடைய ஆதிசேஷன் முதலான சர்ப்பங்கள் வணங்கப்பெற்றவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளது, பதம் சார்ந்தனம்—திருவடித் தொண்டை யடைந்தனன்.

ஆதலால் அகண்ட ஞானனுபூதிச் செல்வத்தை எளிதில் அடைவேனென்பது திண்ணம். (97)

தனனத்தனந்தன மென்றே நடிக்குந் தனிமயில்வா
கனனத்தனந்தன வேந்தன்மெஞ் ஞானக் கலசமுனி
வனனத்தனந்தன தன்பணி செந்தில் வளர்குகன்மெய்
யினனத்தனந்தன வைப்பவந் தீர்க்கு மிறைநெஞ்சமே.

நெஞ்சே—மனமே, தனனத்தனந்தனம் என்றே நடிக்கும் தனி மயில் வாகனன்—தனனத்தனந்தனம் எனத் தொனிக்கும் தாளமானத்தோடு நடனஞ் செய்கின்ற ஒப்பற்ற மயிலை வாகனமாயுடையவரும், அத்த நந்தன்—கரத்திலே பாஞ்சசன்யமென்னுஞ்

சங்கத்தைத் தாங்கிய திருமாலும், அ வேதன்—அந்தப் பிரமதேவனும், மெய்ஞ்ஞான கலச முனிவன்— உண்மை ஞானியாய்க் கும்பத்திலே தோன்றிய அகஸ்திய முனிவரும், அனத்தன்—சர்வ சங்கார மூர்த்தியாகிய ருத்திரனும், அம் தனதன் — அழகிய குபேரனுமாகிய இச்சிறப்புடையோர்களெல்லாம், பணி—வணங்குகின்ற, செந்தில் வளர் குகன் — திருச் செந்தூரெனுந் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் குகனெனுந் திருநாமத்தைக் கொண்டவரும், மெய் இனன்—சத்ய விரத சீல சற்சனர் சங்கத்தையுடையவரும், அனந்த நவை பவம் தீர்க்கும் இறை—அனேக துன்பங்களடைவதற் கேதுவாகிய பிறவியை நீக்கிடும் இறைவருமாகிய ஸ்ரீ குமாரக் கடவுளை, நத்து—நீ விரும்பித் துதித்திடுவாயாக.

2. ‘அனத்தன்’ என்பதை அனந்தன் எனக்கொண்டு ஆதிசேடன் எனப் பொருள் கூறவும் பொருந்தும்

1. அனத்தன் என்பதற்கு உயிர்களைக் கவரும் கூற்றுவன் எனவும் கூறலாம். (98)

சமையஞ்சமய மிதுவெண் ணியவரந் தந்தருள்வா
யிமையஞ்சமய னெறியிற் புகாம லிருந்துதிருத்
திமையஞ்சமய மிகுகூந்த லாரைச் செயித்தவர்பூ
வமையஞ்சமய ரேறுஞ்சூழ்வை காபுரி யற்புதனே.

இமை அம் சமய நெறியில் புகாமல் இருந்து திருத்தி—அற்பச் சிறப்பினையுடைய புறச் சமய மார்க்கங்களில் நுழையாமலிருந்து மனதை நல்வழிப்படுத்தி, மை அஞ்ச மயம் இரு கூந்தலாரை செயித்தவர்—மேகமும் அஞ்சிடக் கரிய நிறம் வாய்ந்த கூந்தலையுடைய பெண்களின் மையலை வென்றவராகிய பெரியோர்களும், பூ அமை அஞ்சம்—தாமரை மலர்களில் அமர்ந்திடும் அன்னப்பக்ஷிகளும், அயல் தொழும் சூழ் வைகாபுரி அற்புதனே - பக்கங்களிலெல்லாம் சூழ்ந்து வசிக்கின்ற வைகாபுரித் தலமென்னும் பழநியம்பதியிலே அதிசய மகிமைகள் அனேகம் நிகழ்த்திபுருளும் ஸ்ரீ குமாரக் கடவுளே, இது சமயம் சமயம் எண்ணிய வரம் தந்து அருள்வாய்—இது சமயம் நல்ல சமயம் ஆதலால் யான் எண்ணியிருக்கும் வரப்பிரசாதத்தைக் கொடுத்தருள்வாயாக. (99)

புதருமலையுந் தவஞ்செய்துற் றேருமப் பொன்னகர்வி
புதருமலையுந் துயர்காய் குமரற் புகழ்நர்விரும்
புதருமலையுந் தியாகத்த ராயெதிர் புல்லலர்வீம்
புதருமலையுந் திவளங்கொண் டாள்வர் புவனங்களே.

புதரும் மலையும் தவம் செய்து உற்றேரும் — கொடி செடியடர்ந்த புதர்களினும் மலைகளினும் தவஞ்செய்து சித்திபெற்ற முனீசுரர்களும், அ பொன்னகர் விபுதரும்—அந்தச் சுவர்க்கலோகத்திலுள்ள இந்திராதி தேவர்களும், அலையும் துயர் காய் குமரனை புகழ்நர்—(சூரபத்மன் முதலான அசுரர்களாலே) நிலைகெட்டுத் திரிந்திடுங் கொடிய துன்பங்களைத் தீர்த்தருளிய ஸ்ரீ குமாரக் கடவுளைத் துதிப்பவர்கள், விரும்பு தரு மலையும் தியாகத்தராய்—விரும்பத்தகுந்த கற்பகத் தருவை யொத்த மிகுந்த கொடையாளர்களாயும், எதிர் புல்லலர் வீம்பு தரும் மல்லல் உந்தி—எதிர்த்த பகைவர்களை (அவர்களினுல்) பெருமை வாய்ந்த வீரத்தை யுத்தத்திலே அழிந்திடத் துரத்தி வென்று, வளம் கொண்டு புவனங்கள் ஆள்வர்—சகல செல்வங்களையும் பெற்று உலக முழுதையுமே யாளும் ஏக சக்ரவர்த்தியாயும் வாழ்வார்கள் என்க. (100)

## வாழ்த்து

மந்தரவாகுவி நெஞ்சத்து ருத மறைப்பொருளே
மந்தரவாகுவி தந்தூர் பவன்துணை வள்ளறேரு
மந்தரவாகுவி யன்சேட னஞ்ச மயிலில்வரு
மந்தரவாகுவி னோதவ ரோதயன் வாழியவே.

மந்தர் அவா குவி நெஞ்சத்து உறுத மறைப்பொருள்—அறிவிலார்களுடைய ஆசை நிறைந்த மனத்தின் கண்ணே சிறிது மணுகாத வேதப் பொருளாய் விளங்குபவரும், ஏமம் தர ஆகு விதந்து ஊர்பவன் துணை வள்ளல்—(தன்னை வழிபடும் மெய்யன்பர்களுக்கு) இன்பங் கொடுத்தருள மூஷிக வாகனத்தைச் சிறப்பித்து விரைவிற் செலுத்துகின்ற விநாயக மூர்த்தியின் தம்பியாகிய அருட்பெருங் கொடையாளரும், அரவு ஆகு வியன் சேடன் தெரு மந்து அஞ்ச மயிலில் வரும்—சர்ப்பமாகிய பெருமை வாய்ந்த ஆதிசேடனை மனங் கலங்கி அஞ்சிடச் செய்யும் ஆற்றலுடைய மயில் வாகனத்தின்மீது ஆரோகணித்துவருபவரும், மந்தர வாகு விநோத வர உதயன் வாழிய—மந்தர கிரியையொத்த அழகிய புயங்களையுடைய அற்புத வரப்பிரசன்னருமாகிய திருப்பழநியம்பதியில் வாழும் ஸ்ரீ குமாரக் கடவுள் வாழ்க, வாழ்க, வாழ்கவே. (1)

கங்கைதருந்திரு மைந்தன் குமரக் கடவுடனிச்
செங்கையிலங்கிய வேல்வாழி வாழிநற் சேவலெழில்
பொங்கியதோகை மயில்வாழி யெங்கும் புகழ்ந்ததந்தி
மங்கையுமின்ப மிகுங்குற நங்கையும் வாழியவே.

கங்கை தருந் திரு மைந்தன் குமரக் கடவுள்—அடியவர்க் கருளுங் காரணமாகச் சரவணப் பொய்கையில் திருவவதாரஞ் செய்தருளிய குமாரக் கடவுள், தனிச் செங்கை யிலங்கிய—ஒப் பற்ற திருக் கரத்தில் விளங்குகின்ற வேல் வாழி—வேலாயுதம் வாழ்வதாக, நற்சேவல் வாழி—நல்ல சேவற்கொடி வாழ்வதாக, எழில் பொங்கிய தோகைமயில் வாழி—அழகுமிகுந்த (கலாபம்) இறகுகளையுடைய மயில்வாகனம் வாழ்வதாக, எங்கும் புகழ் தந்தி மங்கையும் இன்பமிகுங் குற நங்கையும் வாழியவே—எல் லாத் திக்குகளும் புகழத்தக்க தெய்வானை யம்மையும் எவ் வுயிர்க்கும் இன்பத்தைக் கொடுக்கவல்ல வள்ளியம்மையாரும் நீடூழி வாழ்வார்களாக. (2



சுபம்! சுபம்!! சுபம்!!!

குமரன் அந்தாதி முற்றிற்று.





அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2329
நன்கொடை எண்: 2329
திரு காமராசர் பல்கலைக்கழகம். அவ்வை தி.க. சண்முகம் நூலகம். தமிழியல் துறை.